# பத்தாலய பாவாரங்கள்

## (பக்தி இலக்கியம்)














தேசிய கலைஞர்
மூ. அருளம்பலம்
(ஆரையூர் அருள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்தாலய பாவாரங்கள்

(பக்தியிலக்கியம்)

தேசிய கலைஞர்

மூ.அருளம்பலம்

(ஆரையூர் அருள்)

வெளியீடு:

ஸ்ரீ முருகன் இந்து மன்றம்

ஆரையம்பதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பு : பத்தாலய பாவாரங்கள்

வகை : பக்தியிலக்கியம்

ஆசிரியர் : மூ.அருளம்பலம் (ஆரையூர் அருள்)

முதல் பதிப்பு : 2022

பதிப்புரிமை : ஆசிரியருக்கு

வெளியீடு : ஸ்ரீ முருகன் இந்து மாமன்றம்

ஆரையம்பதி

பக்கங்கள் : (i-xxi) + 189

அளவு : $\frac{1}{8}$, A5

விலை : 850/=

பிரதிகள் : 500

ISBN - 978 - 624 - 5421 - 01 -5

Barcode - 9786245421015

அச்சகம் – துர்க்கா அச்சகம், கொக்குவில்

மட்டக்களப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

எமது ஆரையூரில் சிறப்புக்களையும் இந்துக்களின் கலைகளையும் கலாசார, பண்பாட்டு விழுமியங்களையும் மக்களுக்கு மரபுமாறாது வெளிப்படுத்தும் நோக்கத்துடன் ஆரையூரின் மைந்தனாக வந்தவதரித்த திரு.மூத்ததம்பி அருளம்பலம் (ஆரையூர் அருள்) ஐயா அவர்கள் பல்வேறு வகையான சமய வளர்ச்சிக்காகவும், இந்துக்களிடையே பண்டு தொட்டு இன்றுவரை கடைப்பிடிக்கப்பட்டு வரும் கலை, கலாசார நிகழ்வுகளை பாரம்பரிய பண்பாட்டு நிகழ்வுகளான இயல், இசை, நாடகம் போன்றவற்றில் கைதேர்ந்தவராக விளங்கி வருபவர். நாட்டார் கலை, நாட்டார் பாடல்கள், கூத்துகள், கும்மி, குரவை, தாலாட்டு, கரகம், காவடி போன்றவற்றை ஆக்கி, பழக்கி, நடித்து, அளிக்கை செய்து வழிநடத்துவதில் சிறந்த ஆசிரியராக (அண்ணாவியார்) வும், எமது ஈழத்தமிழக இந்து ஆலயங்கள் பலவற்றிற்கான பக்திப் பாடல்களையும், ஆலயங்களின் வரலாறுகளையும், தொன்மைகளையும் ஆக்கங்களில் எடுத்துக்கூறி ஆவணப்படுத்தியுள்ள வல்லுனராக திகழ்ந்து வருவதனை அவரின் "இறையின்பப் பாவாரம்" எனும் பக்தியிலக்கியத்தில் மூவாயிரத்துப் பத்து பாடல்களும் பட்டவர்த்தனமாகப் பறைசாற்றி நிற்பதனை கண்ணுறலாம்.

ஆடம்பரமும் விளம்பரமுமின்றி அடக்கஒடுக்கத்துடன் அமைதியான, பக்குவமான கருணையுள்ளம் கொண்டவரும், பல்வேறு வகையான வரலாறு கூறும் சிறப்புத்தன்மை வாய்ந்த வரலாற்று நூல்களும் ஆலயங்களின் சிறப்பு நூல்களும் இவரால் இயற்றப்பட்டு வருகின்றது. "பத்தாலயபாவரங்கள்" எனும் இந்த நூலும் அவ்வவ் வாலயங்களின் வரலாறு, அமைவிடம், ஊர்களின் சிறப்பு, முகூர்த்தங்களின் அவதார சிறப்புக்களை கும்மி, காவியம், காவடி, தாலாட்டு, அர்ச்சனை, போற்றி, பக்திப்பரவசமூட்டும் பாடல்களின் மூலம் தித்திக்க அமைந்துள்ளது, இவரின் கவித்துவ சிறப்புக்கு கட்டியம் கூறி நிற்கின்றன. இப்பேர்ப்பட்ட இவரின் அறப்பணியானது, வளர்ந்துவரும் இளம் சமுதாயத்தினருக்கும் சிறந்த ஒரு பொக்கிசமாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமையும் என்பது உரமானதும், உறுதியுமான கருத்தாகும். இத்தகையை அரும்பணிகள் ஆற்றிவரும் அருளம்பலம் ஐயா அவர்களுக்கு குருவருளும் திருவருளும் நிலையாக நின்று மென்மேலும் சிறந்து வளர எமது நல்லாசிகள் உரித்தாகட்டும்.

**இவ்வண்ணம்**
**ஆசிவழங்கும்**
**கணேசசோதிநாதக்குருக்கள்**
**கந்தசுவாமி ஆலய பிரதமகுரு**
**ஆரையம்பதி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

"பண்ணும், பரதமும், பாடலுடன், நாடகமும் விண்ணவர்கள் தமையும் வேண்டியே - இன்னிசையால் துன்னெனவே பாடடெழுதும், தூயசொல் ஆசான் அண்ணலை, ஆரையூர் அருளை, அன்போடு வாழ்த்துவோம்" கற்றவர்கள் வாழும் பூமி, கலை பல செறி கவியூர், முத்தமிழன் இசை. மூத்தோர், நற்தவத்தோர், நானிலம் புகழ் வைத்தியம், சோதிடம், மந்திரம், பூசை வழிபாடுகள், என பூர்வீகம் காக்கும், "ஆரையம் பதியினிலே" ஆசிரியனாய் ஆடவைத்திடும், நாடக நடிகனாய், பாடகனாய் பாட்டெழுதும் பாவலனாய், கூத்தினிலே அண்ணாவி, கூத்தாசிரியன் பழக்குகின்ற பண்பாளன் என வித்தகனாய், காவியம். தாலாட்டு, கும்மி, வசந்தன், காவடிப்பாட்டு, வில்லுப்பாட்டு, நாடகம், கதை, கவிதை என பல்துறை வித்தகனாய் மிளிருகின்ற "ஆரையூர் அருள்" எனும், மூத்ததம்பி அருளம்பலம் எனும் அவர்கள் தன் வாழ்நாளில் ஆற்றிய பணிகள் ஏராளம். தாய் தமிழ் பற்றோடு இறையருளும் பெற்ற இயல்பின்னுடைய பணியை பாராட்டுவதோடு, இவரை வழ்த்தியும் அவரின் படுவான் பிரதேச செயற்பாடு பற்றியும் இவ்விடத்தில் சிறிது ஆராய்தல் பொருத்தமாகும். மண்முனை பட்டிப்பளைப் பிரதேசத்தில் 1984 இலிருந்து மாணவர் கல்வி வளர்ச்சி, பாடசாலை அபிவிருத்தி, சமூகசமய மேம்பாடு, பாரம்பரிய கலை, கலாசார விழுமியங்களை மரபு மாறா முறைப்படி கட்டிக்காப்பதில் கண்ணாக இருந்து இப்பிரதேச கலை வளர்ச்சிக்காகவும், ஆன்மீக அறநெறி வளர்ச்சிக்காகவும், முன்னின்றுழைப்பதோடு, பெரிய புல்லுமலை ஏற்றம் நாககன்னி அம்பாள், முனைக்காடு நாகலிங்கேஸ்வரர் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர், தாந்தாமலை முருகன், மண்டூர் கந்தன், போரதீவு காளியம்பாள், மகிழடித்தீவு கண்ணகை அம்பாள், மீதும் இவரது "இறையின்ப பாவாரம்" எனும் மூவாயிரத்து பத்து பாடல் கொண்ட பக்தியிலக்கிய பாநூலில் பாடியுள்ளதோடு, புல்லுமலை, முனைக்காடு, மகிழடித்தீவு, ஆலய பாடல்களை "இறுவெட்டிலும்" வெளியிடப்பட்டுள்ளதும் இன்று குறிப்பிடத்தக்கதோடு, "பத்தாலய பாவாரங்கள்" எனும் இந்த நூலிலும் பரித்திச்சேனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீனாட்சியம்பாள், பண்டாரியாவெளி நாகதம்பிரான், நாகம்மை. முனைக்காடு பிள்ளையார், முத்துமாரியம்பாள், கொல்லனுலைப் பேச்சியம்பாள், விளாவட்டவான் வீரமாகாளியம்பாள், ஆகிய தெய்வங்கள் மீதும் கும்மி, தாலாட்டு, காவியம், காவடி, போற்றி, பக்திப் பாசுரங்கள் என பாடியுள்ளார். இப்பிரதேசத்தில் உள்ள மண்டூர்கந்தன், போரதீவுக் காளி, பண்டாரியாவெளி நாக தம்பிரான், தாந்தாமலை முருகன் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயங்கள் மீதும் மதிப்புக் குரியவர்களான புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை, ப.க. சிவநேசதுரை ஐயா, சதாசிவம் ஆசிரியர், க.உ. சின்னப்புலவர். கவிமணி. துமிலத்துமிலன், பண்டிதர் செ. சிவப்பிரகாசம், கவிக்கோ வெல்லவூர் கோபால், மகிழை மகேசன், உ. கனகசபை அதிபர், அரியநேந்திரன், மு.உ. வாலசிங்கம், க. கணேசமூர்த்தி ஐயா, இ. தாமோதரம், தட்சணாமூர்த்தி ஆசிரியர், இன்னும் சிலர் ஓரிருவாலய பாடல்கள் பாடியுள்ள போதும், மேற்குறிப்பிடப்பட்ட இப்பிரதேச பெரும்பாலான ஆலயங்கள் மீது இவர் பாடியுள்ளது ஒப்புநோக்கத்தக்கது. 1987,1988, களில் மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலய மாணவ, மாணவிகளைக் கொண்டு, பழக்கிய "சுந்தரிவிடுதூது" "இரணியசங்காரம்" தென்மோடிக் கூத்துக்கள். வடகிழக்கு மாகாண தமிழ் தினப் போட்டிகளில் முதலிடங்களை பெற்றதோடு தேசிய ரீதியில் பட்டிப்பளை பிரதேசத்தை அறியச்செய்த பெருமைக்குரியவராகவும் உள்ளார். அன்றியும் வடமோடி, தென்மோடி வசந்தன், கூத்துக்களையும், கோலாட்டம், காவடியாட்டம், செம்பு நடனம், கும்மியாட்டம், அருவிவெட்டு நடனமாகிய கிராமிய நடனங்களுக்கான பொருத்தமான பாடல்களையாக்கி, நெறியாள்கை செய்து, பலமேடையேற்றத்தோடு, வெற்றிகளையும் பெற வித்திட்டதோடு, பிற்காலத்தில் இவரின் மாணவர்கள் கூத்தாக்கங்கள் செய்து, தமிழ் தினப்போட்டிகளிலும் ஏனைய போட்டிகளிலும், வெற்றி பெற வழி வகுத்துள்ளார், இப்பிரதேச கலைஞர்களைக் கொண்டு, 2022 இலே " மட்டக்களப்பு மகிமை " எனும் கூத்தினை முதன்முதலாக அரங்கேற்றம் செய்துள்ளார், இவரிடம் கற்ற மாணவ, மாணவிகள் பலரின்று, பல பதவிகளிலும் பணி புரிகிறனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றிற்கெல்லாம் மேலாக இவரிடம் காணப்படும் உயரிய பண்புகள் எளிமை, பணிவு, மற்றவர்களை மதிக்கும் மனப்பாங்கு, தன்னலம் கருதாமை, விட்டுக்கொடுக்கும் பண்பு, செவிமடுக்கும் திறன் போன்றவையும், மதிக்கப்பட வேண்டும், இறையருள் பெற்ற அருளம்பலம், என்பதனால் என்னவோ அருள் என்று எல்லோரும் அன்பாய் மதிக்கின்றனர். ஆசிரியப்பணியையும் மதித்து சேவை செய்தமையினால் இன்றும் அவரிடம் கல்வி கற்ற மாணவர்கள் உயர் பதவிகளில் இருப்பதோடல்லாமல் கலைஞர்களாகவும் இருக்கின்றனர். மேற்கூறிய அத்தனை செயற்பாடுகளும், தனிமனித முயற்சி என்பதனால் அவரை பாராட்ட வேண்டிய அவசியம் உண்டாகிறது, ஆகவே இவ்வாறான சமய, சமூக, கலாசார, பண்பாடு, எழுத்து போன்ற பல்கலை ஆசானை நாம் போற்றுவதோடு, அவரின் பணி சிறக்கவும் நோய், நொடியற்ற வாழ்வுடன் இன்னும் பல பணிகள் இவரால் நிலைநாட்டப்படவேண்டியிருப்பதாலும், இறையருள் முன்னோர்கள் ஆசி இன்று எழுத்துத்துறையில் இருக்கின்றவர்களின் பாராட்டு அத்தனையும் பெற்று, உலகெலாம் புகழ் பெற எல்லாம் வல்ல சிவப்பரம் பொருளின் அருள் வேண்டி என்றும் என்னுடைய ஆசியும் நிலைத்திருக்க வேண்டுகிறேன்.

**சிவஸ்ரீ பரசுராமன் மானாகப்போடி ஐயா**
**நாகலிங்கேஸ்வரர ஆலய பிரதமகுரு**
**முனைக்காடு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

நமது சைவ சமயத்தின் கண்ணே பல தெய்வ வழிபாடுகள் பல வகையாக நடைபெறுவதைக் காண்கின்றோம். சமஸ்கிருத மொழி சார்ந்த கிரியைகளுடன் பல ஆலயங்கள் வேத ஆகமத்தின்படி நடைபெறுகின்றது. விரதங்கள், விழாக்கள், மகோற்சவங்கள் என்பனவற்றை பிள்ளையார், சிவன், முருகன், விஷ்ணு, அம்மன் என பல தெய்வங்கள் உள்ள ஆலயங்களில் இவ்வாறான வழிபாடுகள் காணப்படுகின்றது. இது இலங்கை, இந்தியா உட்பட பல நாடுகளில் நடைமுறையில் உண்டு ஏன் நமது பிரதேசங்களிலும் உண்டு. இதே போல் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் இந்த பிரதேசத்திற்கே உரித்தான ஏனைய பிரதேசங்களை விட இங்கு நூறு விகிதம் எம் முன்னோர்களால் அறிமுகப்படுத்தப்பட்டு இன்றுவரை பாரம்பரிய மரபு பிறழாது பத்ததி முறைப்படி பல ஆலயங்களில் பல தெய்வ வழிபாடுகள் கிராமிய ரீதியில் மிகவும் கருத்தாழம் மிக்கதாகவும் நடைபெறுகின்றது. சமஸ்கிருத மொழியால் தெய்வங்களுக்கு வேதபாராயணம், அஷ்டோத்திரம், நாமாவழி, நாம சங்கீர்த்தனம் என்பன உள்ளது போல் நமக்கே உரித்தான நம் தமிழ் மொழியால் நமது பாரம்பரிய தெய்வங்களுக்கான பிள்ளையார், கண்ணகை, பேச்சி, மாரி, காளி, நாகதம்பிரான், நரசிங்கர், வைரவர், வீரபத்திரர், திரௌபதி, ஐயனார் போன்ற தெய்வங்களுக்கு சடங்குகள் நடைபெறுவதை நாம் காண்கின்றோம். இவ்வாறான உற்சவங்களில் அந்தந்த தெய்வங்கட்கே உரித்தான காவியம், அகவல், பிரார்த்தனை, கும்மி என பலவாறான பாடல்களைப் பாடி இந்த பூசைகளை நிகழ்த்துகின்றோம். அந்த வகையில் இந்த பாரம்பரிய கிராமிய தெய்வங்களின் வழிபாட்டிற்கு உரித்ததான பாடல்களை நம்மால் நன்கு அறியப்பட்டவரும் செம்மொழிப்புலவரும், சர்வதேச கலைஞருமான ஆரையூர் அருள் என அழைக்கப்படும் ஆரையம்பதி திரு.மூ.அருளம்பலம் ஐயா அவர்கள் இற்றைக்கு பல ஆண்டுகளுக்கு முன் "இறையின்ப பாவாரம்" எனும் பல ஆயிரக்கணக்கான பாடல்களைக் கொண்ட அரியதோர் பொக்கிசமாக கருதப்படும் புத்தகத்தை வெளியிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதை அறிந்த எமது ஸ்ரீ முருகன் இந்து மன்றம் இவரால் இயற்றப்படும் பாடல்களை வைத்து ஓர் புத்தக வெளயீட்டை செய்ய வேண்டும் என எண்ணி அருளம்பலம் ஐயா அவர்களுடன் கலந்துரையாடிய போது அவர் "பத்தாலய பாவாரங்கள்" என்னும் தலைப்பில் ஓர் புத்தகம் வெளியிட தனது எண்ணக்கருவை விதைத்தார். அன்பு காட்டும்போது நாம் நம் வாழ்க்கைக்கும் பிறர் வாழ்க்கைக்கும் உதவுகின்றோம். அதேபோல் நாம் பெறும் அறிவுப் பயிற்சியை பிறருடன் பகிர்ந்து கொள்வதும் ஓர் உதவிதான். மேலாக அறிவுப் பயிற்சி என்று இங்கே குறிப்பிடுவது "ஞான யோகம்" அதேபோல் பக்தி யோகம் என்று குறிப்பிடும் போது நம் பக்தியை கடவுள் மீது செலுத்துவதைக் குறிக்கும். அதே உணர்வு மக்கள் மீது செலுத்தினால் அன்பு எனலாம். அது போன்றே பல தெய்வப் பாடல்களை நாம் அறியும் ஞான மார்க்கத்தின் மூலம் நாம் அந்த தெய்வங்களுடன் ஆனந்தமயமான உணர்வினை பெறுகின்றோம். "கிழக்கு வெளுத்தது கருணை அருட்ஜோதி உதயம் கிடைத்தது" என்ற வடலூர் இராமலிங்க அடிகளின் வசனத்திற்கேற்ப திரு.மூ.அருளம்பலம் ஐயா அவர்களின் பாடல்கள் அனைத்துமே இந்த தெய்வங்களின் மீது மிகுந்த பக்தியை எடுத்துக் காட்டுவதாக உள்ளது. இந்த பாடல்கள் அனைத்தும் இந்த காலத்தில் கிடைப்பதற்கு மிக அரிதானவையாகவே உள்ளது. எனவே பத்திரகிரியார் சொன்னது போல் உற்று உற்று பார்க்க ஒளி தரும் ஆனந்தமிதை நெற்றிக்கு நேர் கண்டு நினைத்திருப்பது எக்காலம் என நாம் இவ்வாறான புத்தகங்களை நமது பொக்கிசமாக மருவி வரும் நமது பத்ததி முறையான கிராமிய வழிபாடுகளை இயற்றும் பூசகர்களுக்கு ஆலய நிர்வாகிகளுக்கு ஓர் வழிகாட்டியாகவும் இந்நூல் அமைகின்றது. இதனை எமது ஆரையம்பதி ஸ்ரீ முருகன் இந்து மன்றம் வெளியீடு செய்வதில் மிகுந்த மன மகிழ்வு கொள்கின்றது.

**ஸ்ரீ முருகன் இந்துமன்றம்,**
**ஆரையம்பதி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

'ஆரையூர் அருள்' என எல்லோராலும் நன்கு அறியப்பட்ட அருளம்பலம் அவர்கள் பத்து ஆலயங்களை மையப்படுத்தி கும்மி, காவியம், தாலாட்டு, காவடிப்பாடல் என பல வடிவங்களில் இயற்றிய பாடல்களை "பத்தாலய பாவாரங்கள்" என்ற நூலாக வெளியிடுவது மகிழ்ச்சி தருகிறது. 1988ஆம் ஆண்டு தொடக்கம் 2022ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் எழுதிய பாடல்களையே இப்பெயரில் இப்போது நூலாக்கி நமக்குத் தருகின்றார். நாற்பது வருடங்களாக பல்வேறு முயற்சிகளில் ஓயாது ஈடுபட்டு வரும் இவர் இதற்கு முன்னரும் பல நூல்களை வெளியிட்டுள்ளார். அவற்றுள் பல நூல்கள் விருதுகளைப் பெற்றுள்ளன. மட்டக்களப்பு இலக்கிய வளர்ச்சியில் ஆரையூர் அருள் அவர்களுக்கு முக்கியமான இடமுண்டு. இவரது இந்நூல் கோயில் வரலாறு, இறைவன் - இறைவியின் செயற்கரிய செயல்கள், வழிபாட்டம்சங்கள் முதலானவற்றை எடுத்துக் கூறும் வகையில் அமைந்துள்ளது.

கோயிலை மையப்படுத்தி பாடல்களைப் பாடுகின்ற மரபு நீண்ட தொன்மையுடையது. சங்க காலத்தில் எழுந்ததெனக் கருதப்படும் திருமுருகாற்றுப்படையில் திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திரு ஆவி நன்குடி, திரு ஏரகம் என்னும் நான்கு தலங்களில் முருகன் எழுந்தருளியுள்ளமை குறிப்பிடப்பட்டுள்ளது. சங்க மருவிய காலத்தில் காரைக்கால் அம்மையார் திருவாலங்காடு என்னும் ஊரில் கோயில்கொண்டுள்ள சிவபெருமான் மீது திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகத்தைப் பாடியுள்ளார். இது திருவாலங்காடு என்ற கோயிலில் குடிகொண்டுள்ள சிவபெருமானைப் பற்றியதாக அமைந்துள்ளது. பல்லவர் காலத்தில் முன்னைய காலங்களை விடவும் கோயில் வழிபாடு முக்கியத்துவம் பெற்றது. இக்காலத்தில் வெளிவந்த மாணிக்கவாசகரது 'கோயில் திருப்பதிகம்' முக்கியமானதாகும். விஜய நகர நாயக்க மன்னர் காலத்தில் திருவாரூர் சிவபெருமான் மீது பாடப்பட்ட திருவாரூருலா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுரை சொக்கநாதர் மீது பாடப்பட்ட சொக்கநாதர் உலா, காசிவிசுவநாதர் மீதும் தலத்தின் மீதும் பாடப்பட்ட காசிக்கலம்பகம் எனப்பல நூல்கள் வெளிவந்தன. இவ்வாறு காலத்திற்குக் காலம் கோயில் வரலாறு, மகிமை பற்றியும் கோயிலில் குடிகொண்ட இறைவன் பற்றியும் பல்வேறு இலக்கியங்கள் வெளிவந்துள்ளன. இதன் தொடர்ச்சியாகவே ஆரையூர் அருள் அவர்களின் 'பத்தாலய பாவாரங்கள்' என்ற நூல் அமைகிறது. இது முக்கியமான இலக்கியப் பேணுகையாகும்.

பண்டாரியாவெளி நாகதம்பிரான் ஆலயம், ஆரையம்பதி கடற்கரை நரசிங்கர் ஆலயம், இருதயபுரம் மேற்கு வாசுகி அம்மாள் ஆலயம், பரித்திச்சேனை மீனாட்சி அம்பாள் ஆலயம், முனைக்காடு முத்துமாரி அம்பாள், முனைக்காடு வீர பத்திரர் ஆலயம், மஞ்சந்தொடுவாய் விநாயகர் கண்ணகை ஆஞ்சநேயர் ஆலயம், குமாரத்தன் ஆலயம், கொல்லநுலை பேச்சியம்மன் ஆலயம், விளாவட்டவான் ஆலயம் என்பவையே அந்த பத்து ஆலயங்களுமாகும். இவ்வாலயங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தின் வெவ்வேறு பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குட்பட்டவை. ஆலயங்கள் பற்றியும், அங்கு நடைபெறும் வழிபாட்டு நடைமுறைகள் பற்றியும் அறிந்து அந்த ஆலயம் சார்ந்த சமூகத்தின் ஒரு பிரதிநிதியாக நின்று பக்தியுணர்வோடு இச்செய்யுட்களை நூலாசிரியர் இயற்றியுள்ளார்.

ஒரு சமூகத்தின் நிலைபேற்றுக்கும் அடையாளப்படுத்தலுக்கும் அச்சமூகம் சாரந்த வரலாறு முக்கியமானதாகும். வரலாற்றுப் பேணுகை இல்லாத சமூகம் கால வெள்ளத்தில் அழிந்துபோய்விடும் என்பது திண்ணம். காலனித்துவ காலத்தில் கீழைத்தேய பண்பாட்டையும் வரலாற்றையும் சிதறடிக்கும் செயற்பாடுகள் இடம்பெற்றன. கீழைத்தேயவர்களே தமது பண்பாட்டையும் வரலாற்றையும் சிதறடிக்கும் செயற்பாடுகள் இடம்பெற்றன. கீழைத்தேயவர்களே தமது பண்பாட்டையும் வரலாற்றுப் பாரம்பரியங்களையும் கீழ்நிலைப்படுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலைத்தேயப் பண்பாடே சிறந்ததென்று கொண்டாடத் தூண்டியது காலனித்துவம். இத்தகைய நிலையில் நமது சமூகம் சார்ந்த - வழிபாட்டு நிலை சார்ந்த உள்ளூர் வரலாறுகளை, சமூக நம்பிக்கைகளை, வழக்காறுகளை பாடல்களினூடாக வெளிப்படுத்தி அவற்றை ஆவணப்படுத்துதல் முக்கியமானதாகும். இத்தொகுப்பிலுள்ள பாடல்களில் கோயிலுடன் தொடர்புடைய உள்ளூர் வரலாறு வெளிப்பட்டு நிற்பது இத்தொகுப்பின் ஒரு தனித்துவமெனலாம்.

பண்டாரியாவெளி நாகதம்பிரான் கும்மிப் பாடல்கள் பண்டாரியா வெளியில் (நாககட்டில்) நாகதம்பிரான் ஆலயம் உருவாகிய கதையைக் கூறி இறுதியில் நாகதம்பிரானை வாழ்த்திப்பாடுவதாக அமைகின்றது. குறிப்பாக ஐந்து பெண்குழந்தைகளோடு நாகமும் ஒரு பெண்ணின் வயிற்றில் பிறந்தமை, நாகத்தோடு பிறந்த பெண் குழந்தை நாகம்மா என்ற பெயர் பெற்றமை, தந்தை இறந்து போனமை, தாயால் வளர்க்கப்பட்ட பெண்குழந்தைகள் பின்னர் திருமணமானமை, நாகம்மைக்கு குழந்தை பிறந்த வேளையில் நாகம்மையின் கணவன் இறந்தமை, அதனைத் தொடர்ந்து நாகம்மையின் தாயும் இறந்தமை, பின்னர் நாகம்மையோடு பிறந்த நான்கு சகோதரர்களும் சீதனத்தைப் பிரித்தெடுக்க வந்தமை, சீதனத்தை ஐந்தாகப் பிரித்தமை, நாகத்திற்குச் சீதனப்பங்கு பிரிக்கப்படாமையால் நாகம்மையும் நாகமும் கோபமடைந்தமை, பின்னர் சொந்தங்கள் வேண்டாமென்று நாகம்மை தன் பிள்ளையோடும் தன்னோடு பிறந்த நாகத்தோடும் கற்பரசி கண்ணகி சிலையோடும் மண்முனை ஆற்றைக் கடந்து சென்றமை, எதிர் நின்று கொல்ல வந்த காட்டெருமையை மடக்கிப் பிடித்தமை, எல்லோரும் அதிசயித்து நின்றமை, கண்ணகி சிலையை மகிழடித்தீவு மக்களின் கோரிக்கைக்கு ஏற்ப அவர்களிடம் கொடுத்துவிட்டு பண்டாரியா வெளிக்குச் சென்றமை, அங்கு புற்றுக்குள் நாகம் செல்ல, நாகம்மை கடுக்காமுனை சென்றமை, நாகம் புகுந்த கட்டு நாககட்டு ஆனமை, நாகத்திற்கு பூசை நடைபெற்றுவந்தமை, கடுக்காமுனையில் வாழ்ந்த நாகம்மையின் வயிற்றுவார் கொம்பிக்கிழவி வயிற்றுவாரானமை என்பனபோன்ற பல்வேறு விடயங்களை இவர் எளிய மொழி நடையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரண மக்களுக்கும் விளங்கும் வகையில் பாடியுள்ளார். இக்கும்மிப் பாடல்களில் கூறப்படும் இக்கதை மண்முனைப் பிரதேச மக்களிடையே இன்றும் வழங்கி வருவதாகும். அதனையே அவர் பதிவுசெய்து பக்தியுணர்வாகிய உயிரூட்டியுள்ளார். அவ்விதத்தில் பின்வரும் பாடல்கள் கவனிக்கத்தக்கவையாகும்.

மனநிறைவோடு மகளை எடுத்து - கொண்டு
தன் பாட்டிலே நாகம்மை செல்ல
படையாண்ட வெளிக் குளக்கட்டிலுள்ள
புற்றேறி நாகமும் அமர்ந்ததுவே

அழகான புற்றில் நாகமரம் - அதனை
அக்கா நாகம்மை கண்டுகளித்து
நாள்தோறு முனக்கு உணவளிப்பேனென்று
நடந்து கடுக்காமுனை புகுந்தாள்

நாள்தோறும் நாகம்மை நாகத்துக் சென்று
நல்ல பால் முட்டை பழமும் வைக்க
இச்செயற்பாடு கண்ட ஊரவரும் - வந்து
இப்படி நாங்கள் செய்வோமென்றார்

நாகம் குடிகொண்ட இடம் - அதுவே
நாக கட்டென மக்கள் அழைத்து
நாகம்மை வயிற்றுவா ரென்றும் - கொம்பி
கிழவி தத்தியென அழைத்தனரே

இதேபோன்று முனைக்காட்டு வீர பத்திரர் வரலாற்று கும்மிப் பாடலில் முனைக்காடு ஆலயத்தின் தொன்மையினைக் கூறி கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர், தேரோட்டம் முடிந்த பின்னர் திருவேட்டை ஆடுவதற்காக வீரபத்திரர் ஆலயத்திற்கு வருகின்ற செய்தியும் கூறப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டைய காலப் பழம்பதிதானிது
மட்டுநகரின் முதல் பதிதான்
மண்முனை தென் மேற்கினிலே
உண்மையுள்ள வொரு பதிதான்

எண்நூறு ஆண்டுகளுக்கு முன் வந்த
தொன்மைப் பதி யிதுவென்று
வஞ்சியரே வந்தவர் பதியில்
சொல்லிக் கும்மி யாடுங்கடி

மட்டுநகர் மன்னன் தருமசிங்கன்
சித்திரதே ருட்சபம் முடிய
கொக்கட்டி நாதர் திருவேட்டைக்கு
தித்திக்க முனைக்காடு வருவார்

கண்டி மன்னன் விமலதர்ம சூரியன்
வந்து திருவேட்டையோடு
குடுக்கை கூறும் நிகழ்வு கண்டு
குதூகலித்ததைக் கூறுங்கடி

இவ்வாறு மட்டக்களப்பை தருமசிங்க மன்னன் ஆட்சி செய்தமை, கண்டி மன்னன் விமலதரும சூரியன் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தோடு தொடர்புபட்டிருந்தமை உள்ளிட்ட உள்ளூர் வரலாறுகளை இவர் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

கோயில் உருவாக்கம் தொடர்பான இத்தகைய விடயங்களை வெளிப்படுத்தியுள்ள அதே வேளை குறிப்பிட்ட தெய்வத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படுகின்ற புராணக் கதைகளையும், கருத்துக்களையும் பாடல்களில் ஆரையூர் அருள் அவர்கள் வெளிப்படுத்தியுள்ளார். இவ்வகையில் இவர் ஆரையம்பதி கடற்கரை நரசிங்கர் ஆலயத்தை அடிப்படையாகக் கொண்டு பாடிய காவடிப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடலில் நரசிங்க அவதாரம் தொடர்பாகக் கூறப்படுகின்ற புராணக் கதை முக்கியம்பெறுவதோடு ஆரையம்பதி நரசிங்கரின் அதிசயங்களும், சிறப்புகளும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

கண்ணுக்கு முன்னாக கண்கண்ட தெய்வமாக
கம்பிரமாக நானிருக்கக்கண்டும்
என்னை மதிக்காம லவன் நாமமுரைக்காய்
அந்த அரி எங்கிருக்காயெனக் கேட்க
என்னுள்ளும் உன்னுள்ளும் மிருக்காரப்பா
மண்ணிலுள்ள வஸ்துவிலு மிருக்காரப்பா...
தூணிலும் துரும்பிலும் இருக்காரப்பா...
தூய அரி எங்கும் நிறைந்தவ ரென்றான்...

காட்டடா அந்த கள்ள மாயன்
இந்த தூணிலு மிருக்கானா வென்று கேட்டு
ஓட்டுவேனென்றுரைத்து தூணை அடித்து
ஓங்கியே உதைத்தானே பலம்கொண்டு
தூணிரு கூறாகப் பிளக்க உள்ளிருந்து
நரவடிவ கரிமுகத்தோடு நகைசெய்து...
இரணியனை பிடித்திழுத்து மடிகிடத்தி...
கிழித்திரண மணிக்குடலை எடுத்தாயப்பா...

புராணக்கதையை கவிஞர் இங்கு எடுத்துரைக்கும் பாங்கு தொடர்ந்து கேட்கும்/ படிக்கும் ஆர்வத்தைக் கூட்டுவதாக உள்ளது. அதில் முனைக்காடு வீரபத்திரர் காவியம் முக்கியமானதாகும். இதில் வீர பத்திரரின் அவதாரக் கதையும் வீர பத்திரர் முனைக்காட்டிற்கு வந்தமர்ந்த கதையும் கூறப்படுகின்றன.

பிடிப்புடன் வீரபத்திரர் மேவி வந்து
முனைக்காட்டு தெற்கில் கோயிலமர்ந்தாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமர்ந்திட்ட செய்தி திக்கெட்டும் பரவ
மட்டக்களப்பின் முதல் கோயிலிதுவென்று
பட்டி தொட்டியிலுள்ள பலரும் மகிழ்ந்து
பட்டிப்பளைக்கே புகலிக் கோயிலென்று
நட்புடன் நாலா திசைகளிலுமிருந்து வந்து
பொற்புடன் அவரைப் போற்றி நிற்க
தப்பாது அனைவரையும் அவரரவணைத்து
எப்போதும் அருளாசியளித்து காத்திருக்காரே

இப்பாடல்கள் அந்தாதி அமைப்பில் பாடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். படிப்பறிவு குறைந்த மக்களும் பாடல்களை மனனஞ்செய்து தலங்களில் பாடி தமது பக்தியை வெளிப்படுத்துவதற்கு அந்தாதி செய்யுளமைப்பு பெருந்துணை புரிவதாகும். தானியற்றிய பாடல்களில் பல்வேறு செய்திகளை வெளிப்படுத்தும் அதேவேளை அவற்றை எளிமையான வகையில் பாடியிருப்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

ஆலய உருவாக்கத்துடன் தொடர்புடையனவாகக் கூறப்படும் கதைகளில் சில இறைவன் கனவில் தோன்றி கோயில் கட்டுமாறு வலியுறுத்த அதன்படி கோயில் கட்டப்பட்டதாகக் கூறப்படுபவனவாகும். இத்தகைய முறையில் ஆலயம் உருவாக்கம்பெற்றமையினையும் இவர் பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளார். இருதயபுர மேற்கு வாசுகி அம்மாள் ஆலயத்தின் பேரில் இவர் பாடிய கும்மிப் பாடலில் இருதய புரத்தில் வாசுகி அம்மாள் ஆலயம் உருவாகிய கதையோடு அம்பாளின் அருட்டிறனும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. செந்தூரனின் கனவில் வாசுகி தோன்றியமை, செய்தி ஊரெல்லாம் பரவியமை, மாமாங்கேஸ்வரர் தீர்த்த நாளில் செந்தூரனின் உடலில் காட்சிகொடுத்துக் கலந்தமை, பின்னர் ஆலயம் கட்டி வழிபட்டமை உள்ளிட்ட அதிசயச் செய்திகள் கூறப்பட்டுள்ளன. பின்வரும் பாடல்கள் எடுத்துக்காட்டத்தக்கவை:
அன்னை வாசுகியின் தேச பக்தன்
செந்தூரன் உயர் பரீட்சை எழுத
நெல்லூர் வாசுகி ஆசி பெற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லமுறையில் சித்தியும் பெற்றனரே.

ஆசி பெற்ற அடுத்த செவ்வாய்க்கிழமை
வாசுகி பின்னிரவு கனவில்
தோன்றி யைந்து சிரசுடனெழுந்து
ஆடிக்காட்சி கொடுத்தனளே.

இல்லத்து நிலத்தில் முழுவுருவை
அச்சதாக அவபதித்த தடத்தை
மெய்சிலிர்க்கக் கண்டு வியக்கையிலே
இச்செய்தி ஊரெல்லாம் பரவியதே.

ஈதென்ன அதிசயம் என்று புகழ்ந்து
ஊரவ ரெல்லாரும் திரண்டு வந்து
மாலவன் சோதரி வாசுகிதானென்று
வாயார வாழ்த்தி வணங்கினரே.

ஏதோவொரு மரத்தின் கீழ் சூலத்தையோ, வேலையோ, முகக்களையையோ, கருங்கல்லினையோ வைத்து வழிபட்டு வந்து பின்னர் கொத்துப் பந்தலமைத்தும், ஓலைக்குடிசையமைத்தும் வழிபட்டு பின்னர் பெருங்கோயிலாக உருவாகிய கதைகளும் பல கோயில்களின் உருவாக்க வரலாறாகக் கூறப்படுகின்றன. அவ்வகையில் பரித்திச்சேனை மீனாட்சி அம்பாள் காவடிப் பாடலில் பரித்திச்சேனையில் மீனாட்சி அம்பாள் காவடிப் பாடலில் பரித்திச்சேனையில் மீனாட்சி அம்பாள் ஆலயம் உருவாகிய வரலாறு பின்வருமாறு கூறப்பட்டுள்ளமையை எடுத்துக்காட்டலாம்.

ஆல மர விருட்சத்தின் கீழ் அண்ணாவியார்
அழகிப் போடி பொன்னம்பலம் மீனாட்சி
முகக்களை வைத்து வழிபட்டு வந்த காலம்
ஆண்டு நாற்பத்தைந்து ஆனதன் பின்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரவர் ஒன்று கூடி ஓலைக் குடிசை கட்டி
ஆண்டுக்கொருமுறை மூன்று நாட்கள்...
திருவிழாச் செய்து வரத் தித்திப்பா யேற்று...
திருவருள் புரிந்து வந்த மீனாட்சியம்மா...

கோயில்கள் மீது இவர் பாடிய பாடல்கள் இறைவனை வாழ்த்திப் பாடுவனவாகவும் இறைவனிடம் வேண்டுதல் செய்வனவாகவும் உள்ளன. பண்டாரியாவெளி நாகம்மை காவியம் பண்டாரியாவெளி நாகதம்பிரானை வாழ்த்துவதாகவும் நோய்களிலும் விச சந்துகளிலிருந்தும் காக்குமாறு வேண்டுவதாகவும் அமைந்துள்ளது.

அம்மா உந்தனருள் பார்வை பட்டால்
அனைத்து விச சந்துக்களூ மோடிடும்
நம்பிடு பக்தருள்ள மென்று மமரும்
நாகம்மா நலமோ டெங்களைக் காரும்
காத்திடுவென்றதும் கருணைதனை காட்டி
காசினியிலுயர் புற்றில் புகுந்து
பூத்த புதுமலர் முக படமெடுத்தாடி
புத்தூக்கனுபவங்கள் காட்டிடுவா தாரணியில்

முனைக்காடு முத்துமாரியம்மன் மீது பாடியுள்ள கும்மி, காவடி, தாலாட்டுப் பாடல்களும் காத்தருள வேண்டுவனவாக அமைந்துள்ளன. பரித்திச்சேனை மீனாட்சி அம்பாள் கும்மி, வசந்தன், மீனாட்சி அர்ச்சனை, தாலாட்டு என்பவற்றில் மீனாட்சி அம்பாளின் சிறப்புகள் சிறந்த முறையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இதனைப்போன்றே ஏனைய கோயில்களைப் பற்றிய பாடல்களும் பல்வேறு செய்திகளை வெளிப்படுத்திப் பாடப்பட்டுள்ளன.

இனக்குழுக்களின் வரலாற்று வேர்கள் கேள்விக்குட்படுத்தப்படுவதும் மாற்றியமைக்கப்படுவதுமாகத் தொடரும் இன்றைய காலச் சூழலில் பத்தாலய பாவாரங்கள் போன்று பலநூறு ஆலய பாவாரங்கள் உண்மையாகவும் சமூகப்பொறுப்புடனும் இயற்றப்படவேண்டியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசியமாகும். அத்தோடு பல்வேறு அழுத்தங்களுக்கு முகங்கொடுத்துத் திண்டாடும் மனிதர்களுக்கு வழிப்படுத்தலாக இறையின்ப பாவாரங்களும் தேவைப்படுகின்றன. இத்தகைய சூழலில் ஆரையூர் அருள் அவர்களின் இந்நூல் முக்கிய வரவாகும். விஞ்ஞானத்தின் அபரீத வளர்ச்சியில் மனிதன் தன்னைப் பறிகொடுத்து நிற்கும் இருபத்தோராம் நூற்றாண்டில் தமிழ்ப் பக்தி இலக்கிய மரபை இந்நூலினூடாக நீட்சி செய்திருப்பதும் பாராட்டப்படவேண்டியதாகும். எதிர்காலத்தில் உள்ளூர் வரலாறுகளை காவுகை செய்து இளைய தலைமுறைக்குக் கடத்தத்தக்க இன்னும் பல ஆக்க முயற்சிகளை நூலாசிரியர் செய்யவேண்டுமென வாழ்த்துகிறேன்.

**கலாநிதி த.மேகராசா (கவிஞர் மேரா)**
**விரிவுரையாளர்,**
**தமிழ் கற்கைகள் துறை,**
**கிழக்குப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

2016.09.19 இல், 3010 பாடல்கள் கொண்ட "இறையின்பப் பாவாரம்" வெளியட்ட காலமிருந்து, இதிலுள்ள பாடல்கள் சிலவற்றை 26 இறுவட்டுகளில் கேட்டுச் சுவைத்த சுவைஞர்களுள் பத்தாலயப் பாவாரங்களில் வரும் ஆலயங்களின் நலன் விரும்பிகள், நிருவாகத்தினர், ஊர்மக்கள் தங்கள் தங்கள் ஆலயங்களுக்கும் அழைத்து, பாடல்களை ஆக்கம் செய்து தரும்படி கேட்டதற்கு இணங்கவே சில ஆண்டுகளுக்கு முன்பே பாடல்களை யார்த்தளித்திருந்தேன். இப்பாடல்களை ஒலித்தட்டுக்களாக வெளியிடுவோம் என உறுதி கூறி, இறுதிவரை பொருளாதார, வேறு தவிர்க்க முடியாத காரணங்களாலும் நிறைவேற்றவில்லை. இதனையறிந்த ஸ்ரீ முருகன் இந்து மன்றத்தினர் இப் பத்தாலயப் பாடல்களையும் நூல்வடிவில் வெளியிட விருப்பம் தெரிவித்து இக் கைங்கரியத்தை செயற்படுத்தி "பத்தாலய பாவாரங்கள்" என்று அச்சுவாகனமேற்றி, அழகுற வடிவமைத்து உங்கள் கரங்களில் தவழவிட்டுள்ளனர்.

இந்நூலுக்கு அகமகிழ்வோடு ஆசிச்செய்தி அளித்தாசி வழங்கிய ஆரையம்பதி கந்தசாமி ஆலய பிரதமகுரு, சிவாச்சாரியார் கணேச சோதிநாதக் குருக்கள் ஐயா அவர்களுக்கும், வாழ்த்தி வாழ்த்துரை வழங்கிய போற்றுதற்குரிய முனையூர் நாகலிங்கேஸ்வரராலய பிரதமகுரு சிவஸ்ரீ பரசுராமன் மானாகப்போடி ஐயா அவர்களுக்கும், எனது ஆக்கங்கள் மீது அளவற்ற பற்றுதல் கொண்டு ஊக்கமளித்து வரும் முழுநேர வேலைப்பழுவின் மத்தியிலும் முன்னுரை நல்கிய கிழக்குப் பல்கலைக்கழக தமிழ் கற்கைகள் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.மேகராசா (கவிஞர் மேரா) அவர்களுக்கும், வெளியீட்டுரையை வழங்கிய ஸ்ரீ முருகன் இந்து மாமன்றத் தலைவரும் ஆரைநகர்க் கண்ணகை அம்பாலாலய பிரதம பூசகருமான உயர்திரு தம்பிராசா தட்சணாமூர்த்தியவர்களுக்கும், இந்நூலை மனமுவர்ந்து முன்வந்து வெளியீடு செய்த ஆரையம்பதி ஸ்ரீ முருகன் இந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமன்றத்தினர்களுக்கும், பண்டாரியாவெளி நாகதம்பிரான், கொல்லைநுலை பேச்சியம்பாள் ஆலயங்களின் நிழற்படங்களையளித்த பூசகர் தேவசுகீர்தராஜ் அவர்களுக்கும், பரித்திச்சேனை மீனாட்சியம்பாளாலய நிழற்படமளித்த புவிக்குமார் அவர்களுக்கும், நூலிற்கான முன்னட்டை, பத்தாலய படங்களையும் வடிவமைத்தளித்த செல்வன் தட்சணாமூர்த்தி யுகார்த்திகனுக்கும், பின்னட்டைக்கான ஆசிரிய அறிமுக பாக்குறிப்பினையும் எழுதித்தந்த முனையூர் ஊடகவித்தகர் வயிரமுத்து துஷாந்தன் அவர்களுக்கும், அழகுற அச்சுப் பதிவு செய்தளித்த துர்க்கா அச்சகத்தாருக்கும் உளது மனம் நிறைவான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மூ.அருளம்பலம்**
**(ஆரையூர் அருள்)**
**கை.பே.இல: 0779670190**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


1. பண்டாரியாவெளி நாகதம்பிரான் கும்மிப் பாடல்கள் 1-5
2. பண்டாரியாவெளி நாகம்மை காவியம் 6-9
3. ஆரையம்பதி கடற்கரை நரசிங்கர் கும்மிப் பாடல்கள் 11-19
4. நரசிங்கர் காவியம் 20-24
5. நரசிங்கர் காவடி 25-33
6. நரசிங்கர் பாடல்கள் 34-42
7. இருதயபுர மேற்கு வாசுகி அம்பாள் கும்மிப் பாடல்கள் 43-48
8. வாசுகியம்பாள் தாலாட்டு 49-54
9. வாசுகியம்பாள் காவியம் 55-59
10.வாசுகியம்பாள் பஜனைப் பாடல்கள் 60-64
11.வாசுகியம்பாள் பாடல்கள் 65-69
12.மஞ்சந்தொடுவாய் ஸ்ரீ சித்திவிநாயகர் கண்ணகையம்மன் கும்மிப்பாடல்கள் 71-76
13.ஸ்ரீ சித்திவிநாயகர் கண்ணகையம்பாள் பாடல்கள் 77-91
14.முனைக்காடு முத்துமாரி கும்மி 93-98
15.முனைக்காடு பிள்ளையார் முத்துமாரி காவடிப்பாடல்கள் 99-107
16.முனைக்காடு முத்துமாரி தாலாட்டு 108-112
17.முனைக்காட்டு வீரபத்திரர் கும்மி 113-119
18.முனைக்காடு வீரபத்திரர் காவியம் 120-125
19.பரித்திச்சேனை மீனாட்சியம்பாள் தாலாட்டு 127-131
20.பரித்திச்சேனை மீனாட்சியம்பாள் காவடி 132-136
21.மீனாட்சியம்பாள் கும்மி 137-140
22.பரித்திச்சேனை மீனாட்சி அர்ச்சனை 141-144
23.ஜெயந்திபுர குமாரத்தன் கும்மி 145-149
24.ஜெயந்திபுர குமாரத்தன் போற்றி 150-155
25.கொல்லைநுலை பேச்சியம்மன் கும்மி 157-162
26.கொல்லைநுலை பேச்சியம்மன் காவியம் 163-167
27.கொல்லைநுலை பேச்சியம்மன் காவடி 168-173
28.விளாவட்டவான் வீரமாகாளி கும்மி 175-179
29.விளாவட்டவான் வீரமாகாளி காவியம் 180-184
30.விளாவட்டவான் வீரமாகாளி காவடி 185-189




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

ஆடம்பரமும் விளம்பரமும் அணுவளவு மின்றி
நேர்மைத்திறனோடு நெஞ்சத் துணிவு பொங்கி
சளைக்கா வுழைப்பும் தன்மானசாயா வீரமுமிலங்கி
வளைந்திடான்பு நெஞ்ச அறிவாற்றல் விளங்கி
நுழைபுலம் மிக்க திறன்களில் தினம் இறங்கி
கலை கலாசார பல படைப்புக்கள் வழங்கி
பல்மொழியாற்றலால் பார்போற்றிய யுத்தமர்
பல்துறைக்கலைஞர் பட்டம்பெற்ற வித்தகர்
ஊர்ப்பற்றில் உயர்ந்த உன்னத உத்தமபுரிசர்
பாரறிய எம்மூரைப் பகிரங்கப் படுத்தியவர்
மனிதனாக வாழ்வாங்கு வாழ்ந்து புனிதரானவர்
மறைந்தும் மறையாத இம்மண்ணின் மாமனிதர்
ஆரையூர் மண் தந்த அற்புத அன்பர் அமரர்
பேராற்றல்கொண்ட பெருந்தகைக் கவிஞர்
தேறிய சிந்தையுடைய கணபதிப்பிள்ளை சபாரெத்தின
நேரிய திருவடிக் கமலத்திற்கின்நூல் சமர்ப்பணம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டாரியாவெளி நாகதம்பிரான்

## கும்மிப்பாடல்கள்

**தரு**

தானினம் தானினம் தானானம் - தனம்
தானினம் தானினம் தானானம் } 2

**கும்மிப்பாடல்கள்**

1. பண்டாரியாவெளி கோவில் கொண்டு - நாளும்
நல்லருள் நல்கு நாகதம்பிரானின்
செம்மொழிச் செந்தமிழ் கும்மிப்பாட - எங்க
செல்வவிநாயகர் காப்பாமே.

2. மண்முனைப்பற்று தென்மேற்கில் - அன்று
கற்போடு வாழ்ந்த காரிகை வயிற்றில்
பொற்போ டைந்தாம் குழந்தையோடு - வந்து
நற்பிறப்பாய் நாகம் பிறந்ததுவே.

3. நாகத்தோடு பிறந்த சோதரிக்கு - நாமம்
நாகம்மா என்றுமே அழைத்தார்
மூத்த நான்கு சகோதரிகளோடும் - நாளும்
ஆறுபேரு மன்பாய் வளர்ந்தனரே.

4. அகமகிழ்வாய் வாழும் வேளையிலே - தந்தை
அமரபதம் அடைந்த காலையிலே
தாயோடு மக்கள் வாழும் வேளை - திரு
மாங்கல்ய மனைவரும் பூண்டனரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. நாகம்மை வயிற்றிலே பெண்பிறக்க - பின்பு
வாழ்வளித்த மணவாளன் இறக்க
வாழாவெட்டியாகி நாகம்மை - வாழும்
வேளை தாயு மமரபதமடைந்தார்.

6. நாகம்மை பிள்ளை நாகமோடிருக்க - அப்போ
நாலு சகோதரிமாரும் வந்து
ஆதனத்தை ஐந்தாய் பிரிக்க - என்று
ஆடாவாடித்தனம் செய்தனரே.

7. கேட்டதை நாகம்மை துணுக்குற்று - நின்று
ஆறாகப் பங்கிடச் சொல்ல
பாம்புக்கு என்னடி பங்கு - என்று
வீம்புபேசி விரட்டினரே.

8. பேசியதெல்லாம் கேட்ட நாகம் - பெரும்
கோபம் கொண்டுமே சீறி
காசினியில் நானுமுடன்பிறப்பு - இப்போ
கட்டாயம் எனக்கும் பங்கென்றதுவே.

9. நின்றாரே சகோதரிகளொன்றாய் - பங்கு
தந்திடமாட்டோம் பாம்புக்கென்று
இச்சொல்கேட்ட நாகம்மை - அப்போ
எடுத்தாளே வேற முடிவொன்று.

10. சொத்துச் சுகமெமக்கு வேண்டாம் - நாங்க
சொந்தமிழந்து செல்வோமென்று
கற்பரசி கண்ணகை சிலைதனை - எடுத்து
கற்சிதமா யோலை பெட்டியில் வைத்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. வைத்ததை தலையில் தூக்கிவைத்து - வயது
மூன்றான பிள்ளையை கக்கம் வைத்து
சென்றாரே மண்முனை ஆற்றங்கரை - ஓரம்
சேர்ந்தாரே படகேறி அக்கரைக்கு.

12. தங்குமிடம் தரிக்குமிடமன்றி - எங்கோ
தனையறியாமலே நடக்கையிலே
கண்டாரே காட்டெருமை பிடிப்பவர்கள்
கைக்குழந்தையோடு வருபவளை.

13. கண்டதும் வரவேண்டாமென்று - கத்தி
விண்டாரே கூவென்ற சத்தமிட்டு
எருமைகள் நிற்குது குத்திவிடு - மென்று
எவளவோ சொல்லியுமவ கேட்கவில்லை.

14. தன்பாட்டில் வருதையலைக்கண்டு - கோபம்
கொண்ட காட்டெருமையொன்று
மிக்க வேகமுடன் பாய்ந்துவர - பிள்ளை
தன்னைத் தரையிலிறக்கிவிட்டாள்.

15. கொண்டுவந்த பெட்டி தலையிலிருக்க
கோபம் கொண்டு எருமை கொம்பைபிடிக்க
கட்டுண்ட நாகமாயெருமை நிற்க - கண்டு
அற்புதமிது வென்றதிசயித்தனரே.

16. பெருங் கயிற்றோ டோடிவந்து - நின்று
எருமையின் கால்களை கட்டியவரின்
கொன்றுவிடு மெருமையை கையாலே - நிற்க
வைத்திட்ட மகிமையுரையுமென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. சொல்லென்று சொன்னதும் நாகம்மை
சோர்வின்றி பெட்டியை இறக்கி
எல்லா மிவசெயல் என்றவ - சொல்லி
எழிலரசு கண்ணகையை காட்டினாளே.

18. கண்டதும் கை கூப்பி வணங்கி - அவ
கருணைகண்டு மனம்மகிழ்ந்து
மாதாவே இச்சிலையைத் தாரும் - என்று
மனமுருகி விண்ணப்பமுரைத்தார்.

19. மகிழடித்தீவிலே கோவில்கட்டி - நாங்க
மனநிறைவாயெழுந்தருளச் செய்து
அன்னைக் காண்டுக் கொருமுறை - சடங்கு
அனைவரும் கூடியே செய்வோமென்றார்.

20. நின்றவர்கள் நிலை கண்டிரங்கி - அவள்
நீங்க கண்ணகை சிலைகொண்டு
என்றென்றும் வணங்கிடுவீர் - என்று
எடுத்து அவர்களிடமளித்தாள்.

21. மனநிறைவோடு மகளை எடுத்து - கொண்டு
தன் பாட்டிலே நாகம்மை செல்ல
படையாண்டவெளிக் குளக்கட்டிலுள்ள
புற்றேறி நாகமும் அமர்ந்ததுவே.

22. அழகான புற்றில் நாகமமர - அதனை
அக்கா நாகம்மை கண்டுகளித்து
நாள்தோறு முனக்கு உணவளிப்பேனென்று
நடந்து கடுக்காமுனை புகுந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. நாள்தோறும் நாகம்மை நாகத்துக்கு - சென்று
நல்லபால் முட்டை பழமும் வைக்க
இச்செயற்பாடு கண்ட ஊரவரும் - வந்து
இப்படி நாங்கள் செய்வோமென்றார்.

24. நாகம் குடிகொண்ட இடம் - அதுவே
நாககட்டென மக்கள் அழைத்து
நாகம்மை வயிற்றுவாரென்றும் - கொம்பி
கிழவி தத்தியென அழைத்தனரே.

25. எண்ணத்தில் துதிப்போரென்றும் வாழி
காவாலாயுலாவரு நாகதம்பிரான் வாழி
தரணிவாழ் மக்கள் நிதம்வாழி
தாயான நாகம்மை தன்னருள்வாழி!.

**மூ.அருளம்பலம்**
**(ஆரையூர் அருள்)**
**(1988.03.19)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டாரியாவெளி
# நாகம்மை காவியம்

**தரு**

தந்தன தனாதனன தானன்த தானா
தனனா தனாதந்த தானந்தனானா
தனனா தனா தந்ததானந்த னனனா
தனனா தனா தந்த தானந்தனானா.

1. அரவணி சிவனார்க்கும் ஆதிமுதலான
ஆனை முகத் தண்ணலை அடியேன் பணிந்து
செம்மொழிச் செந்தமிழால் காவியம் பாட
செகம் போற்றுமையா நாவில் அமர்ந்து
பாடுமென் காவியத்தில் பாகாயமைந்து
கேட்போர் செவிக்கு தேனாயினித்து
நேசமுடன் நாகம்மை காவியம் தந்து
செந்தமிழ் நாயகா சிறியேனுக்கருள்வாய்.

2. அருள்வாயே அரவம் அங்கமணிந்த
அனைத்துயிரும் காக்க ஆலமதுண்டவா
தந்திடு நற்காவியம் நாகம்மை மீது
எப்போது மென்தனற்கு துணையாகி
துணிந்து நாகம்மை காவியம் கூறுமெனக்கு
அணிகலனாய் அமிழ்த தமிழ் தந்து
வானறிய மன்னறிய மகிமையோத
வந்தருள் புரிந்திடு மகாமாரித்தாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பாடுகிறேன் மண்மீது ஊர்ந்திடு
பாம்பென்ற பெயருடை நாகம்மைமீது
தேடுகின்றேன் செந்தமிழை செவியினிக்கவோத
தேவியே தேடியென் நாவில் அமர்வாய்
அமர்ந்தாயே உலகத்தையே தாங்கியே
ஆதிநெடு நீலவண்ணணனையாகி நாளும்
சுமந்தே யுலகமதில் தோன்றியதனைத்தும்
சுகமாக என்றென்றும் வாழ்ந்திடத்தானே.

4. வாழ்ந்திட அரிக்கும் நீ எடுத்துவுரைத்து
ஆதிசேடன் உனையும் அவனிக்கழைக்க
குறிதவறா இலக்குவனாக நீ வந்து
குலப்பெருமை என்றும் காத்து அருள
அருளென்றுரைக்க ஆனந்தமாகி
அட்டதிக்கும் காவல் காக்கும் மற்ற
பெருமையுறு வாசுகி அனந்தன் தக்கன்
பேர்பெறு சங்கன் குளிகனோடு பதுமன்.

5. பதுமன் மகாபதுமன் கார்கோடனோடு
பழுதின்றிப் பார்தனை காக்கின்ற
எதுவரினும் கலங்கா வுமது இனங்க
ளெப்போதும் எங்களைக் காக்கவென்று
வந்தாயே மண்ணில் பலவேடம்கொண்டு
வளலை விரியன் புடையன் மற்றும் பலசாதி
அவ்வவ் வுருவுக்கேற்றால் போல் வடிவம்
அழகான வுருவெடுத்து மண்ணிலுதித்தாயே.

6. தாயே சென்நாகம் கருநாகமென்று நீயும்
தற்காத்தருள் பெரு நாகமதாக
வாய்திறந்தன்பர் உன்நாமமோத
வாழ்நாளென்றும் காப்பேனேயென்றாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரைத்திடு தாயே நாகம்மா வுன்னினத்து
ஊர்ந்திடு பூரான்தேள் நட்டுவக்காலி
திகிலூட்டும் செங்குளவி கருங்குளவிகள்
தீண்டாம லெங்களை காத்திடுவம்மா.

7. அம்மா உந்தனருள் பார்வைபட்டால்
அனைத்து விச சந்துக்களுமோடிடும்
நம்பிடு பக்தருள்ள மென்றுமமரும்
நாகம்மா நலமோடெங்களைக் காரும்
காத்திடுவென்றதும் கருணைதனை காட்டி
காசினியிலுயர் புற்றில் புகுந்து
பூத்த புது மலர்முக படமெடுத்தாடி
புத்தூக்கனுபவங்கள் காட்டிவாதாரணியில்

8. தாரணிதன்னிலே கண்கண்ட தெய்வமாகி
தூங்கு சொற்பனத்திலே தோன்றி
நல்லவளே நற்கருணை நாகம்மையே
நாள்தோறு முன்புகழுரைப்பவர்க்கு
பங்கமற வந்தவினை மாற்றியருள
அரசால் புங்கை புளி வேப்பை விருட்சம்
குடி புகுந்து குலம்காத்தெப்போதும் நிற்கும்
குணபதியே நாகம்மை நற்தாயே

9. தாயே கண்வாய் செவிகொண்டு நீயாடி
உனைச்சீண்டு பொல்லார்க்கு சாபமதீர்ந்து
பகைத்தால் பசித்தால் மிதித்தால் பழிதீர்க்க
உனைக்காக்க தீண்டிடுவாய்தாயே
சொல்லுக்கு வல்லவளே யுன்மகிமைகாட்டி
சொல்லிடு நடந்தது நடப்பவைதன்னை
நல்லாளே நன்மைசெய் நாகம்மாவே
நாள்தோறுமுனைப் பணியடியவர்க்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. அன்னையே பால்முட்டை பழமென்று பக்தர்
அகத்தூய்மையாக உன்முன்வைத்து
குற்றம்குறை ஏதேனும் செய்திருப்பினும்
நற்கருணையோடு காத்திட வேண்டினால்
வேண்டியதை வேண்டுவோர் கருள்வாய்
வேதாந்த வித்தக நாகம்மாத்தாயே
மதிப்பவர் மனக்கவலை மாற்றியே
மனம்போல நல்வாழ்வு அளிக்கவாவம்மா.

11. வருந்தாமல் உயிரனைத்தும் மண்ணிலேவாழ
வருவாயே மண்மீது மக்கள் குலம்காக்க
தருவாயே நற்கருணை தமிழர்கள் வாழ
தவறாத தத்துவ தருமநெறி வாழி
வழுவாது சத்தியம் பார்தோறும் வாழி
தளராத அகம்கொண்டு ஏர் உழவர்வாழி
தற்பரனும் இப்புவியும் ஏற்றமுற வாழி
நற்கருணை நாகம்மை நாளும் வாழியவே

**மூ.அருளம்பலம்**
**(ஆரையூர் அருள்)**
**(1988.03.19)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரையம்பதி கடற்கரை நரசிங்கர் கும்மிப் பாடல்கள்

தரு

தானினம் தானினம் தானானம் - தனம் } 2
தானினம் தானானம் தானானம்
தானினம் தானினம் தானானம் - தனம்
தானினம் தானினம் தானானம்

1. ஆரைநகர் கடற்கரை யோரமதில் } 2
ஆதியாய் கோயில் கொண்டமர்ந்த
பேரான நரசிங்கன் கும்மிபாட
வேழமுக விநாயகர் காப்பாமே.

2. அதிகாலை எழுகின்ற ஆதவனும் } 2
ஆதி நரசிங்கர் அடிபணிந்தே
அன்றாடம் கடமை செய்யும் மாட்சி
அங்கு கண்டிடவா மற்புதகாட்சி

3. ஆழ்கடலிலுள்ள முத்துக்களையெழு } 2
அலைக் கரங்கள் வாரியிறைக்க
ஆதவன் ஒளியிலவை யொலிக்க
ஆதி நரசிங்க ரழகு பரிணமிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. இந்திரன் திசை கடலுக்கிசைக்க
இன்புற்றலை கரங்கள் தாளமிட } 2
தென்றல் நரசிங்கர் பாபடிக்க
கொண்டல் உருக்கொண்டு ஆடிடுமே.

5. ஈசானமூலையில் நரசிங்க காளியாம்
நிருதி மூலையில் பிள்ளையாராம் } 2
வாயு மூலையில் முருகனோடு
அக்கினி மூலையில் ஆஞ்சநேயருமாம்.

6. உன்னத வைரவர் முன்னாளே
உள்ள கோயில் துரோபதைக்காம் } 2
சுடலை வைரவர் பிள்ளையார் தெற்கே
கால வைரவர் சிலை கண்டிடலாம்.

7. ஊர்கூடி ஆரம்பகாலத்திலே
ஒருநாள் சடங்கையே செய்துவர } 2
காலப்போக்கில் மூன்றைந்தாயிப்போ
ஏழு நாட்கள் சடங்குகொள்வார்.

8. என்றும் வெள்ளி பூரணை யமாவாசை
கார்த்திகை விளக்கீடு பெருங்கதை } 2
போன்ற புண்ணியகாலந்தோறும்
வேண்டியே விசேட பூசையேற்பார்.

9. ஏந்திழை மார்களே வாருங்கடி
ஏந்தல் நரசிங்கராலயம் கூடுங்கடி } 2
பாந்தமுடனவர் பெருமை பேசியே
பாசமுடன் கும்மி யாடுங்கடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. ஐயமகற்றி யருள் அழிப்பாரிந்த
வையம் தளைக்க வாழ்வளிப்பார் } 2
பையரவில் பள்ளி கொள்ளும்
பாரளந்த நரசிங்கனடி.

11. ஒன்றல்ல ஒன்பதாவதாரமடி பத்
தாமவதாரம் தானெடுத்து } 2
நிச்சயமாகக் கலிமுடிக்க
நித்திலத்தில் கல்கியாக வருவார்.

12. ஓதக் கடவது வாழ்த்துரைக்க
ஓங்கார ரீங்கார மலையிசைக்க } 2
பாங்கான தென்றல் சாமரைவீச
நாராயண நரசிங்கர் நயந்திடுவார்.

13. ஔவென்றும் சௌவென்று மானவண்டி
மௌவென்றும் உவ்வென்றும் வருபவண்டி } 2
நௌவென்று நடனமதாடியே
நரசிங்க ரூபன் வருவானடி.

14. கம்ச சங்காரக் கண்ணனவர்
சுந்தர நரசிங்க ரூபமொடு } 2
வந்தமர்ந் தாரை நகரினிலே
வல்வினை போக்கி காத்திருக்கார்.

15. காதலோ டவர் பாதம் பணிந்திட
காணாத காட்சிகள் கண்டிடலாம் } 2
தேனாகத் தித்திக்கும் பாவினிலே
வேண கானமதைக் கேட்டிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. கிங்கிணி கிணியென்றஒலி
தங்கத் தண்டைகள் தாஎெழுப்ப } 2
சங்கு சக்கரம் கைகளிலேந்தி
எங்கநரசிங்கர் வந்தருள்வார்.

17. கீதை சொன்ன கண்ணனவனும்
சீதை மணவாள திரு ராமனும் } 2
கோடாரிப் பரசுராமானானவனும்
நாராயண நரசிங்கனடி.

18. குஞ்சர முக கணபதிக்கும்
குன்றுகள் தோறாடு குமரனுக்கும் } 2
எங்கள் நரசிங்கரூபனவன்
என்றும் மாமனென்று பாடுங்கடி.

19. கூர் நகந்களா லுடல்கிழித்த
இரணிய சங்கார நரசிங்கர் } 2
ஊறு செய் உலுத்தர்களை
கூறு கூறாகக் கிழித்திடுவார்.

20. கெடுதி செய்திடு கேடர்களை
சடுதியாக சாய்த்திடு தீரனடி } 2
கடுகி வரு துன்பதுயரை
நொடியினிலே தீர்ப்பாரடி.

21. கேண்மையோடு பணிபவர்க்கு
வாய்மையோடு வரமளிப்பார் } 2
தூய்மை கெடுத்திடு துட்டர்களை
தீமை செய்து திருத்திடுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. கைத்தலம் பற்றிடச் சீதைதன்னை } 2
கனத்த வில்லொடித்த ராமனடி
கைமலர் குவித்து வணங்க
கைகொடுக்கும் நரசிங்கரடி

23. கொண்ட கோபமது குறையாது } 2
இரணியனை கொன்று நின்றவேளை
ஆரவாரித்து தேவரெல்லாம்
ஆனந்த கூத்தாடியடி பணிந்தார்

24. கோடான கோடி பக்தர் கூடி } 2
கோபால நரசிங்கரை தேடி
நாளுமாரை நகர் கடற்கரை
நாடி வரும் காட்சி பாடுங்கடி.

25. கௌரவர் கர்வமழித்தவண்டி } 2
கம்சனை கொன்றொழித்தவண்டி
கத்தும் கடல் புவியனைத்தும்
தம் கட்டளையில் சுத்தவைப்பவண்டி.

26. செம்முத்து கடற்கரை மணலில் } 2
திங்கள் ஞாயிறொளி படவே
தங்கமென மின்னும் காட்சிதனை
செந்தமிழ் பாவினால் பாடுங்கடி.

27. பிரகலாதன் பரபக்தி கண்டுதந்தை } 2
இரணியனை சங்கரித்து
அரசிருக்கை யவனுக்களித்த
நரசிங்கரைப் பாடுங்கடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. சொந்தம் தொலைத்து பந்தமிழந்து
தஞ்சமில்லை யென்று தவிப்பவரை } 2
அஞ்சாதீரென்று அரவணைக்க
வந்திடுவார் நரசிங்கர் முன்பு.

29. ஏழைக்கு எளியவன்டி அவன்
வேளை தோறும் மருள்பவன்டி } 2
பேதமைகள் களைபவன்டிவரு
வேதனைகள் தீர்ப்பவன்டி.

30. தயங்காது கொடுமை செய்பவர்க்கு
பயங்கர ரூபமதைக்காட்டி } 2
நடுநடுங்க செய்திடுவாரெங்க
நரசிங்க சாமியுந்தான்.

31. தேவாதிகள் வாக்கொலியும்
தேனாகத் தித்திக்கும் பாட்டொலியும் } 2
தேசம் பரவ தனை மறந்து மக்கள்
தேசிவ நரசிங்க நாமமுரைப்பார்.

32. சொற்களால் சொல்ல முடியாத
அற்புத அதிசயக் காட்சிகளை } 2
தப்பாமல் நரசிங்கர் சன்னிதியில்
எப்பவும் கண்டிட வாருங்களே.

33. நாராயண நரசிங்க ஆலயத்து
தாமரைத் தடாகத்திலே } 2
பூத்த புதுமலர் பாணியுண்டு
ரீங்கார மிசைக்கும் வண்டுகள் நின்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34. பொதிகைத் தென்றல் திசைமாறி
பொங்குகடல் வந்துமேவி
மதுரைச் செந்தமிழ் பாட்டிசைத்து
எங்க நரசிங்கர் புகழ் பாடிடுமே.

35. கேட்டுக் கேட்டு ஆனந்தம் கொண்டு
கொட்டுது கும்மியலைகள் மொண்டு
கொண்டலது உருக்கொண்டாட
தட்டுமே தாளம் தலவிருட்சம்.

36. கண்டு களித்திடக் கடற்கரை
நம்ம நரசிங்கர் சன்னிதியில்
தேனடைத் தேனீபோல் திரளும்
மானிட மாண்பினைப் பாடுங்களே.

37. மானபங்கப் படுத்த நினைத்தால்
கானகப் பேயாயுருமாறி
தானாக வந்து பணியவைத்து
ஆணவம் தன்னை அழித்திடுவார்.

38. நட்டா முட்டி நாசகாரர்களை
வெட்ட வெளிச்சத்தில் கொண்டு வந்து
அப்பட்டமாகவே காட்டியவர்
வெக்கித் தலைகுனிய வைப்பார்

39. கடற்கரை நரசிங்கர் பெரும்
தடைக்கற்களையும் தகர்த்து
படிக்கற்களாக தானமைத்து
அடையவைப்பாரருள் கடாட்சம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40. தட்டுங்கடி கரம் தட்டுங்கடி
நம்ம நரசிங்கராலயத்தே } 2
மறத்தமிழ் பாவினிக்கு வாய்த்த
மங்கள தாளமாயினிக்க.

41. ஆண்டு தோறும் ஏழு நாட்கள்
நாராயண நரசிங்கர் சடங்குக்கு } 2
ஊரே ஒற்றுமையாக வொன்றி
நாடி சன்னித வந்திடுவார்.

42. வீரமாகாளியாலயத்திலிருந்து
பூசைப் பொருட்களெடுத்துவர } 2
ஊரே பயபக்தியோடு வந்துசேர
மாலை வேளை கதவுதிறப்பார்.

43. இரண்டாம் நாள் அதிகாலையிலும்
திறமுள்ள மாலை வேளையிலும் } 2
நரசிங்கருக்கு சடங்கு செய்ய
நலமளித்து காத்திடுவார்.

44. மூன்றாம் நாள் அதிகாலை மாலை
முறைப்படியே சடங்கு செய்ய } 2
சன்னிதி முத்தமெல்லாம் மக்கள்
சன்னதம் கொண்டு வணங்கிடுவார்.

45. நான்காம் நாள் அதிகாலை
மாலைச் சடங்குகள் தான் முடிய } 2
ஆஞ்சநேயராலயத்திருந்தே
வாஞ்சையோடு மடப்பெட்டியெடுப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

46. ஐந்தாம் நாள் காலை மாலை } 2
ஐதீப்படியே சடங்கு செய்ய
நாள்தோறு மாடு தேவாதிகள்
நயம் பெறத் திருவாக்களிப்பார்.

47. ஆறாம் நாள் காலை பலிச்சடங்கின் பின் } 2
ஆழியிலே கும்பம் சொரிந்து
மாலையில் திருக்கதவடைத்து
வைரவர் சடங்கும் செய்திடுவார்.

48. நாராயண நரசிங்கர் சாதனைகள் } 2
ஏராளம் எல்லாம் எடுத்துரைக்க
ஏழையென்னால் முடியாது
இயன்றவரை எடுத்துரைத்தேன்.

49. பொல்லாத அரக்கர்களை அழித்து } 2
நல்லோரைக் காக்க நாராயணன்
கல்கியவதாரம் தானெடுத்து
கலியுகம் முடிக்க வருவாரடி.

50. மங்களம் மங்களம் மங்களமே } 2
செல்வவேழமுகனுக்கு மங்களமே
நாராயணனின் நான்காமவதார
நரசிங்கருக்கும் மங்களமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நரசிங்கர் காவியம்

**தரு**

தந்தன தனாதனன னாதந்தனானா
தனாதந்தனாதந்த னாதந்தனானா
தந்தன தனாதனன னாதந்தனானா
தந்தன தனாதனன னாதந்தனானா
தனாதந்த னாதந்த நாதந்தனானா

**காப்பு**

1. ஆன்மீகப் பூப்பூத்து இறையருள்
அட்டதிக்கும் அனுதினமும் பரவும்
நல்லாரையம்பதி கடற்கரைதனிலே
வல்லமையோடு வந்தமர்ந்தூரை
என்நாளும் காத்திருக்கு நரசிங்கரின்
உன்னத காவியம் பாடவரு
குற்றம் குறை களைய குஞ்சரமுகத்து
நற்கணபதியே நாளும் காப்பாமே.

**காவியம்**

2. கிரியோ டகிலமும் கிடுகிடென்றதிர
பரிதியும் மறைய பல திசையோ ருமஞ்ச
குருதிவாய் சிந்த கைநேமிப்படை மிஞ்ச
பெருத்த நரைத்த சடை நின்றாடிட
உரத்த தூணை உதைத்துத் தள்ளிடவே
உதித்த நரசிங்கர் புகழ்பாட
உறுதுணையாக என்நாவில் அமர்ந்து
உற்ற சரஸ்வதியே காத்திடம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. காருமென்று கதறியழுத போதும்
கருமுகில் வண்ணன் வராகமதாகி
பூமி தன்னையே பாயாய்ச் சுருட்டி
சாகரம் தன்னிலே தலைமறைவான
இரணியாசுரன் சகோதரனு மான
இரணியட்சுதனை வதைத்திடவே
ஈரேழு உலகத்தில் ஓடி ஒளித்தாலும்
நாரணனை யழிப்பே னென்று இரணியனன்று.

4. இரணியாசூரன் இறுமாப்புக் கொண்டு
பிரமனை நோக்கிக் கடும் தவம் பூண்டு
இறவாப்பிறவா வரங்களைப் பெற்று
மூவுலகங்களையும் அடிமையுற வைத்து
தேவர்களை எல்லாம் தினமும் வருத்தி
தேவேந்திரனை திக்கெங்கும் தேடிப்
பிடித்து சிறையிடு தேவலோக மதால்
குதித்து நடங்க ஏவலர்களே என்றான்.

5. என்றதுமே ஏவலர்கள் மூவுலகு மலைந்து
இந்திரன் குயிலாகி இருக்கப் பிடித்து
ஈசனெனப் பீற்றும் இரணியன் முன்விடுக்க
உன்சிரசிலே குட்டியெனக்கு ஏவல் செய்யென்றார்
நீண்டவனே நெடுமாலே எங்களுக்கு
மூண்டவிதி யிதையுரைத்தோம் கேட்டு
தாண்டவமாடி அசுரர் குலமளித்த
ஆண்டவனே வழிகாட்டு திருமாலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. திருவிலே கருவா யுருவாக்கிட
நேமிப்படையை பிரகலாதனாகி போய்
இரணியனுக்கே புத்திரனாக்கிட
மங்களகேசி மகனயு மீன்றாள்
ஐந்து வயதில் மகனுக்கருங்கலை கற்க
வந்திட்ட ஆசான் தந்தையைப் போற்றென்ன
அழிந்திடு தந்தை இறைவன் அல்ல
அரி நாராயணனே ஆதிமூல மென்றான்.

7. ஆதிமூலமோ தாய் தந்தை தானில்லாத
நாதியற்ற வஞ்சக மாயனென்று உரைத்தாய்
தந்தை தன்னையே நிந்தித்த உன்னையே
நொந்து மடிந்திடத் தொந்தரவு செய்தும்
வந்து காத்திட கபடக் கண்ணன்
எங்கேடா இருக்கிறானென்று கேட்க
தூணிலும் துரும்பிலு மிருப்பாரென்றுரைக்க
இந்தத் தூணிலுமா வென்று தூணை அடித்தான்.

8. அடித்தும் உதைத்துமே அவதாரமாகி
துடித்திடு சிங்கமுக நரனுமாகி
தடித்துப் பெருத்த கோரை நகங்களாகவே
பிடித்து மடிகிடத்தி இரணியனைக் கிழித்து
இரணமணிக் குடலை இழுத்து எடுத்து
தரளவட மாலையாகவே தரித்து
எழுந்த உதிரமதை விழுந்தே யருந்தி
இறவாவர இரணியனை அழித்தாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. அழியாவரம் பெற்ற அகந்தையாலே
பழிவாங்கிடு அசுரகுலமழித்திடவே
பலவவதாரங்கள் பச்சை மாலே எடுத்தாய்
பிரகலாதன் பரபக்தி உணர்த்திடவே
பொல்லாப்பு செய்திட்ட துட்டரணியனை
வல்லாமை போக்கி பெற்றவரம் மாறாது
நான்காம் அவதார நரசிங்கனாகி
அந்திபடும் நேரம் இரணியனை அழித்தாய்.

10. அழித்திட்ட அகோரம் தணிக்க முடியாமல்
ஈரேழு லோகமும் கோபங்கொண்டலைய
சிவனோடுமை சினம் தனிய வேண்டியும்
மறுதலிக்கின்றதே மனம் என்று கூறப்
பிரத்தியங்கிரி காளி காட்சிகண்டு
மறந்துமே கோபந்தணிந்து மகிழ்ந்து
பிரகலாதனை மூவுலகங்களுமான
முடிசூட்டி மகிழ்ந்த நரசிங்க ரூபனே.

11. வராகமொடு கூர்ம அவதாரி நீயே
வாமன அவதார மெடுத்தவரும் நீயே
பரசுராமராக உதித்தவரும் நீயே
பார்த்தனுக்கு கீதை போதித்தவரும் நீயே
பாம்பணையில் பள்ளிகொண்ட பரன்ராமன் நீயே
இராமாயன இரம்மிய இராமனும் நீயே
ஈரைந்து அவதாரம் எடுத்தவரும் நீயே
ஈரிரண்டாம் அவதார நரசிங்க ரூபனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. சீரேறு ஐங்கரன் திருவடி வாழி!
பார்போற்று பரமனுடன் பார்வதி வாழி!
நாபோற்று நாமுகன்தேவி சரஸ்வதி வாழி!
கார்நிறக் காயாம்பூக் கண்ணனும் வாழி!
ஊர்வாழி பேரான ஆரையம்பதியின்
ஓதக் கடற்கரை யோரமமர்ந்தருள்
பேரான இரணிய சங்காரரூப
நாத நரசிங்கர் வாழி வாழியவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நரசிங்கர் காவடி

## காப்பு

1. ஆரையம்பதி கடற்கரை மணற்பரப்பினிலே
ஆரோகணித்து ஆலயம் அமர்ந்தருளுகின்ற
பேரான நரசிங்கன் காவடிப்பாடல்பாட
ஆராத காதல் கொண்ட அடியேனுக்கு
பாரதம் தன்னைக் கோட்டால் எழுதியவரே
வாரண முகனே வந்தென் நாவிலமர்ந்து....
வேளைதோறும் வருபிழை வழுவகற்றி காரும்....
வேழமுக விநாயகா உன் திருப்பாதம் காப்பே....

2. பொல்லாத இராட்சத இரணிய சுதனென்பான்
வல்லரசு இரணியனின் இனிய தம்பி
நற்பூமிதன்னைப் பாயாகச்சுருட்டி
அற்பனவன் ஆழ்கடலில் கொண்டொளிக்க
பொற்புடை யச்சுதனே வராகமாகி கடல்புகுந்து
அப்புவி மீட்டு அவனைக் கொன்றொழித்தாய்....
நல்லாரையம்பதி கோயில் கொண்டமர்ந்த....
நரசிங்க ரூபனே நலமளிக்க வருகுவாயே....

3. தம்பிதனை அழித்த தாமோதரனையழிக்க
தப்பிதமாய் சிந்தித்து சாகாவரம் வாங்க
தவமிருந்த இரணியன்முன் பிரமன்தோன்றி
தவவலிமை கண்டு மனம் மகிழ்ந்தேன்
சாற்றிடுவீர் என்னவரம் வேண்டுமென்று கேட்க
சாட்டாங்கமாகப் பணிந்து நின்று....
என்றும் நான் சாகாமலிருக்க நல்ல....
ஏற்றவரமளிக்க வேண்டிக் கேட்டானப்பா....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பாட்டன் என்றென்னைப் பணிந்ததாலே
கேட்ட வரமெல்லாமுனக் களித்தேன்
என்று பிரமன் வரமளித்து அகன்றபின்பு
வேண்டாத செயல்கள் எல்லாம் செய்து
உலகிற்கினி நான்தான் கடவுளென்றும்
உலக மாந்தர் எனை உகந்து பணிந்தால்....
பற்பல நன்மைகள் நான் செய்திடுவேன்....
அல்லாவிட்டால் பாரையே யழிப்பேனென்றான்....

5. தேவர்களைத் தானடக்கி கோவதோட்சி
தேவை போவாட்சி செய்து நாளும்
இரணிய நமோவென்றுரைக்காதோர் நா
இருந்த இடத்தில் இருக்காதென மிரட்ட
சொல்லொன்னாத் துயருற்ற தேவர் ஓடி
பண்பாகப் பரந்தாமன் பாதம் பணிந்து....
இரணியனின் இம்சைகளை எடுத்துரைக்க கேட்டு....
இரங்கியே இன்னல் தீர்ப்பேனென்றாயையா....

6. வஞ்சக நெஞ்ச இரணியனைத் தானழிக்க
வழியொன்று நான் செய்வேனென்று கூறி
அஞ்சாமல் சென்று வாருங்கள் நீங்கள்
துஞ்சேன் உங்கள் துயர்தீராது நாளும்
என்றுரை செய்து ஏற்ற திருவிளையாடல் புரிய
ஏவிநாய் நேமி தன்னை என்தன் மீது....
மங்காத பற்றுடை மங்களகேசி வயிற்றில்....
சிங்காரப் பிரகலாதனாய் பிறக்கச் சொல்லி....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. தப்பாது சக்கரம் அப்போது சென்று
கற்பமாய் வளரச் செய்திகேட்டிரணியனும்
இப்புவியில் ஈசனுக்கு இணையில்லா மகனை பெற
தக்க சமயத்தே மருத்துவ மாதினையழைக்க
பொற்புடை மனையாள் அற்புத புதல்வனை ஈன
நற்பருவ வயதைந்தில் பிரகலாதனுக்கு....
கல்வியில் மிற்கவொரு குருவைத் தேர்ந்து....
இப்படி கற்பியென்றிரணியன் எடுத்துரைத்தான்....

8. உன் தந்தை தம்பிதனைக் கொன்றவனென்றோது
வஞ்சக கபட நாடகதாரி மாயனென்றோது
உலகினிலே உண்மைத் தெய்வம் நானென்றோது
உம்பர்தொழு தெய்வமும் நானேயென்றோது
இப்புவியில் வேறு தெய்வம் உண்டென்போரை
அம்புவியில் அழித்தொழிப்பேனென்று ஓது....
நம்பியே இரணிய நமோவென்றோதுவோர்க்கு....
இம்மியும் நமனுமணுகாதென்றோதுமென்றான்....

9. வாத்தியாரும் வார்த்தைகளை வாங்கி ஏங்கி
நேர்த்தியாய் பிரகலாதனிடம் சென்று தயங்கி
இரணிய நமோவென்று கூறுமநம்பி
இனிமையாய் கலைக்கியானங்கள் கற்போம் தம்பி
என்றதுமே அரிநமோ நாராயணா என்பேன்
என்றோவழியும் தந்தையை யிறையென்றேக்கேன்....
என்றுமே நிலைத்த தெய்வம் நாராயணன் என்று....
நன்றாக நீங்கள் அறியவிலையோ குருவே யென்றான்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. குருவுக்கே உபதேசம் செய்யும் பிரகலாத
குழந்தை மொழி கேட்டு குருதயங்கி
ஒருமுறையேனு முன்தந்தை நாமமோதாவிட்டால்
குருவென்று பாராமல் கொன்றிடுவா ரென்ரலறி
குறுகியே இரணியன் முன் சென்று அரசே
வருத்தமுடன் மகன் சொன்ன வார்த்தைவிட்டு....
பொறுத்தருள வேண்டும் இறையே யென்று....
கருத்துடனே பிரகலாதம் பிடிவாதம் சொன்னாரே....

11. குரு சொன்ன வார்த்தை கேட்டு மருண்டெழுந்து
நெருப்புப் பொறி கண்களில் பறக்க நடந்து
என்ன சொன்னாய் பிரகலாதா நீயும்
எதையுமறியாச் சிறு பாலனல்லவோடா
என் நாமம் ஏற்க ஏன் தயக்கமடா
எல்லோர்க்கு மிங்குயின்ற என்ன....
அண்டமெலாம் படைத்து கண்போல காக்கும்....
கண்ணனே கண்கண்ட தெய்வமென்றான்....

12. கலையாத கோபமுடன் இரணியனப்போ
தலையாரி மார்களைத் தானழைத்து
நிலையான என் நாம மிவனுரையா விட்டால்
நித்திலத்தி லிவனை வாழவிடாது நீங்கள்
எத்தனை கொடுமைகளை இழைத்தேனுமிவனை
என் தம்பியைக் கொன்றவன் நாமமுரைத்தானாகில்....
குடிகெடுக்க வந்த இந்தக் கோடாரிக்காம்பை....
கொன்றொளிங்க னென்றுரைத்தான் பாவி....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. பழிக்கஞ்சாப் பாதகர்கள் பிரகலாதன் தன்னை
படைக்கலங்கள் கொண்டு தாக்கியுமே
அழியாது கண்டு ஆலாகால விசுமளித்தும்
மாழாதவனை மலைமேல் ஏற்றி தள்ளிவிட்டே
பாராங்கல் கொண்டு நசுக்கியும் பார்த்து
யானையை ஏவியும் பிரகலாதனின்....
பரபக்தியால் பரந்தாமன் பக்கத்துணையால்....
அரவணைத்தல் கன்ரிரணியனிட முரைத்தனரே....

14. கண்ணுக்கு முன்னால் கண்கண்ட தெய்வமாக
கம்பீரமாக நானிருக்கக் கண்டும்
என்னை மதிக்காம லவன் நாமமுரைக்காய்
அந்த அரி எங்கிருக் கானெனக் கேட்க
என்னுள்ளும் உன்னுள்ளு மிருக்காரப்பா
மண்ணிலுள்ள வஸ்துவிலும் இருக்காரப்பா....
தூணிலும் துரும்பிலும் இருக்காரப்பா....
தூய அரி எங்கும் நிறைந்தவரென்றான்....

15. காட்டடா அந்த கள்ள மாயன்
இந்த தூணிலு மிருக்கானாவென்று
ஓட்டுவே னென்றுரைத்து தூணை அடித்து
ஓங்கியே உதைத்தானே பலம்கொண்டு
தூணிரு கூறாகப் பிளக்க உள்ளிருந்து
நரவடிவ கரிமுகத்தோடு நகை செய்து....
இரணியனை பிடித்திழுத்து மடிகிடத்தி....
கிழித்திரண மணிக்குடலை எடுத்தாயப்பா....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. எடுத்த குடலை தரளவள மாலையாய் தரித்து
உதிரமதைக் குடித்து உக்கிரம் கொண்டு
நரசிங்கர் நிற்கக் கண்ட அமரரிசி முனிவர்
அதிசயம் கண்டு ஆனந்தக் கூத்தாடி
மலர்மழை பொழிந்து விண்ணிருந்து வாழ்த்தி
தமக்கினியிடரில்லை யென்ற சந்தோசத்தால்....
நரசிங்கநாமமோதி துதியும்பாடி....
பரபக்திகொண்டு பணிந்தார்களையா....

17. பிரகலாத சிறுவனின் பரபக்தி கண்டு
நரசிங்கர் பிரியமுடன் மனம் மகிழ்ந்து
ஆனவர மனைத்து மருள்வேன் கேளுமென்ன
தேனாகத் தித்திக்கும் வார்த்தை கேட்டு
எந்த வரமும் வேண்டா முன்தன் நாமமென்றும்
சிந்தை தனில் சிறியே னேற்று வேனேன்று....
பந்தமுடன் பிரகலாதன் கூற மகிழ்ந்த....
சுந்தர வாரைநகர் நரசிங்காபோற்றி....

18. உந்தனுக்கு எந்தனருள் என்றும் உண்டு
எந்தக் கவலையுமின்றி நன்கு நீயும்
மனுநீதி தவறாமல் ஆட்சிசெய்யென்று
மணிமுடி சூட்டி யாசிர் வதிக்க
சொன்ன சொல் மீறாது சொந்தபந்தம்போல
தன்னுயிர் போல் மண்ணுயிரைக் காத்து நாளும்....
பொன்னுலகாய் பிரகலாதனை ஆளவைத்த....
நல்லாரைநகர் கடற்கரை நரசிங்கா போற்றி....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. தசவதாரம் தானெடுத்து தாமோதரா
தரணியிலே பலவற்புதங்கள் தான்செய்தாய்
பேதங்கள் கொண்ட அசுர கயக்கிரிவன்
வேதங்களை ஊழிகால மதில் களவாட
மச்சரூபம் தானெடுத் தாழிபுகுந்து
அச்சமின்றி பற்களினால் வேதங்களை கௌவி....
அழியாது காத்த ஆழிமழைக் கண்ணனான....
ஆரைநகர் கடற்கரை கடற்கரை நரசிங்கா போற்றி....

20. அசுரரும் தேவரும் அமிர்தம் பெறவே
அற்புதமாய் பாற்கடல் கடைய விரும்பி
மந்தரமலையை மத்தாக்கி வாசுகியை
சுந்தரக் கயிறாயிறுக்கிக் கடைய
அந்தரத்தில் தொங்குநூலாய் மலையதாட
அக்கணமச்சுதன் கூர்மமாகியடி மலைதாங்கி....
பொங்கிவந்தமிர்தமதை தேவர்கேயீர்ந்த....
பொன்னாரை நகர் நரசிங்கரூபா போற்றி....

21. மகாபலியான மாபலிச் சக்கரவர்த்தி
இந்திரலோகமதை இறுமாப்புடனாண்டு
தற்பெருமையோடு யாகமதில் தானதர்மம் செய்ய
என்காலடியால் மூன்றடி மண்வேண்டுமென்று
குன்னவடிவ வாமனனாகி நாரணன் கேட்க
தந்தேனென மாபலிகூற வீரடிகளாலே.....
ஆகாயம் பூமியளந்து மற்றடி மாவலிதலையில் வைத்து....
பாதாளலோகம் சேர்த்த நரசிங்க நாராயணா....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. பரசுராம அவதாரம் எடுத்து பரன்ராமா
பாரிலன்று பற்பல அற்புதங்கள் செய்தாய்
அஞ்சாத சிங்கமாய் தந்தையாணையேற்று
கொஞ்சமுமிரக்கமின்றி தாயைக்கொல்ல
நெஞ்சம் குளிர்ந்து தந்தை நினைத்த வரம்
தந்திடுவேன் தயங்காமல் கேளுமெனை....
என்தாயிப்போ வேணுமென தந்தேனென்றளித்த....
உன்னத நாராயண நரசிங்கா போற்றி....

23. இராமவதாரம் கிரேதா யுகத்தில் எடுத்து
இரம்மியமாய் அற்புதங்கள் பல புரிந்து
ஆங்கார அரக்கர்களை அழித்தொழித்து
கல்லான அகலிகையின் சாபம் தீர்த்து
சிவதனுவைத் தான் ஒடித்து சாதனைசெய்து
ஜனகன் மகள் ஜானகியை மணந்து....
ஒருவனுக்கு ஒருத்தியென்ற உயர்வுகாட்டிய....
உத்தம நாராயண நரசிங்காபோற்றி....

24. பலராம அவதாரம் பாரில் எடுத்து
பழுதிலா உழுகலப்பை படைக்கலமாயேற்று
உழவுத் தொழிலின் உயர்வைக் காட்டி
பலதல யாத்திரை செய்து தீர்த்தங்களாடி
உன்கைத் தர்ப்பையால் சூதமுனிதலையறுத்து
பொல்லாத கர்வம் போக்கியுயிரளித்து....
வல்லசுர பல்லவன் தன்னையழித்த....
சொல்லரிய நாராயண நரசிங்கரூபா....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. துபாவரம் முடியுமுன் தர்மம் காக்க
துஞ்சாது கண்ணனபதாரம் நீயெத்து
பாஞ்சாலிக்கு துயில்கொடுத்து மானம் காத்து
பார்த்தனுக்கு கீதை உபதேசம் போதித்து
பாரதப்போர்முடித்து அதர்மமதையழித்து
பாரிலே தர்மமதை ஸ்தாபிதம் செய்து....
கலிபிறந்த காரணத்தால் வைகுந்தம் சேர்ந்த....
நலிவில்லா நாராயண நரசிங்கா போற்றி....

26. தேவாதி தேவ நரசிங்க ரூபனுக்கு நாளும்
சேகண்டி தவில் தாரை மணிமுழங்க
செப்பரிய கற்பூர தீபாராதனை யோடு
முப்பழமோ டன்னம் மதுவும் வைத்து
கஞ்சாவோ டபினும் கலந்து படையலிட்டு
நெஞ்சாரத் துதித்து வழிபடுவோர்தமக்கு....
மக்கள் மனை சுற்றுச்சூழல் காத்தருளும்....
மெய்ப்பொருளே நாராயண நரசிங்கா போற்றி....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நரசிங்கர் பாடல்கள்

## விநாயகர்

1. ஆரையம்பதி கடற்கரை அமர்ந்தவா!
ஆடுதுதிக்கை ஆனைமுக ஐங்கரா!
வேளைதோறும் வினைகள் தீர்ப்பவா!
வேழமுக விநாயக விக்னேஸ்வரா!
வக்ர துண்டா போற்றி } 2
வாதாபி கணபதி போற்றி
விக்கினம் தீர்த்து காக்கும் } 2
விநாயகா போற்றி

(ஆரையம்பதி)

நரசிங்கராலய ஈசானம மமர்ந்தவா!
பரமசிவன் பாலனாகப் பிறந்தவா!
ஆல அரசமர நிழல் அமர்பவா!
ஆதரித்து நாளுமூரை ஆள்பவா!
மூத்தகணபதி போற்றி } 2
மூஷிகவாகனா போற்றி
நரசிங்கரூபன் மருகா } 2
நற்குஞ்சரனே போற்றி

(ஆரையம்பதி)

கெட்டதுட்ட ரட்டகாசம் அழிப்பவா!
எட்டுத் திக்கு மெழில்வடிவாயொலிப்பவர்
பட்டு வண்ண மணற்பரப்பில் இருப்பவர்
வங்கக் கடல் வாழ்த்தொலியில் மகிழ்பவா!
மூலமுதலே போற்றி } 2
மோதகப் பிரியா போற்றி
கயமையழித்து காக்கும் } 2
கஜாசனா போற்றி

(ஆரையம்பதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. நரசிங்கரூப திருநாமமே - என்றும்
மறவாது மனது எந்த நாளுமே
குறையாத வருளளிக்கும் குணநாதனே
மறையா துமது மகிமை மண்மீதிலே
நரசிங்கா சுவாமி நரசிங்கா } 2
நரசிங்கா சுவாமி நரசிங்கா
(நரசிங்கரூப)

இரணிய சங்காரரூபனே - பக்த
பிரகலாதனிதய சொரூபனே
பரபக்தியோடு பணிபக்தருக்கே
நிறைவான வரமளிக்கும் நீதனே
நரசிங்கா சுவாமி நரசிங்கா } 2
நரசிங்கா சுவாமி நரசிங்கா
(நரசிங்கரூப)

காலிகள் மேய்த்த கமல கண்ணனே - மாமன்
கம்ச சங்கார கார்முகில் வண்ணனே
உருக்கமா யுனை நினைப்பவர்க்கே
அருள்வாயே ஐயாவாதி நரசிங்கனே
நரசிங்கா சுவாமி நரசிங்கா } 2
நரசிங்கா சுவாமி நரசிங்கா
(நரசிங்கரூப)

சூரியோதய எழில்மிகு காட்சிக்கே
நரசிங்க முகப்பொலிவு சாட்சியே
ஆரையம்பதி நரசிங்கர் சன்னிதியே
நாளும் நல்கிடும் மன நிம்மதியே
நரசிங்கா சுவாமி நரசிங்கா } 2
நரசிங்கா சுவாமி நரசிங்கா
(நரசிங்கரூப)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. ஆரையம்பதி கடற்கரைக்கு அழகு சேர்த்திடும்
நரசிங்கராலயம் நாம் தரிசித்து வருவோம்
ஆதவன் அதிகாலை யெழுந்தவரடி பணியும்
அற்புதக் காட்சி காண்போ ரகமதி லினிக்கும்
உள்ளமது தித்திக்கும்
உண்மையது சித்திக்கும்
வந்து பாருங்க! வந்து பாருங்க!
வந்து பாருங்க! வந்து பாருங்க! } 2

(ஆரையம்பதி)

வங்கக் கடலலை வாழ்த்துரைக்குமே
தென்றலது சோபனம் சொல்லி வீசுமே
கொண்டலது உருக்கொண் டாடிக்களிக்குமே
முத்து மணற்பரப்பு பாய் விரித்து வரவேற்குமே
கண்மலர்கள் பூத்திடும்
வண்ணவிதழ்கள் மலர்ந்திடும்
அற்புதங்காணுங்க! அதிசயம்தானுங்க!
அற்புதங்காணுங்க! அதிசயம்தானுங்க } 2

(ஆரையம்பதி)

ஆரைநகர் கடற்கரை ஓரமே - அமைந்த
நரசிங்கர் திருத்தலம் வாருமே
மாறாத பிணியெல்லாம் மாறுமே
பேறான பேறெல்லாம் சேருமே
சக்திதானாய் பிறந்திடும்
பக்திமேவி வளர்ந்திடும் } 2
சன்னிதி வாருங்க! நிம்மதி நிறையுங்க!
சன்னிதி வாருங்க! நிம்மதி நிறையுங்க!

(ஆரையம்பதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. நரசிங்கர் கோயிலுக்கு போகணும்
பரபக்தியோடு கரமலர் குவிக்கணும்
திருப்பூசை கண்டுள்ளம் திளைக்கணும்
அருளமிர்தம் அள்ளியள்ளி குடிக்கணும்
வாடியம்மா போய்வருவோம் - அவரை
கோடிமுறை கும்பிடுவோம்
நம்ம நரசிங்கர் - அவர்
நம்ம நரசிங்கர் } 2

(நரசிங்கர்)

கும்மியோடு கோலாட்டம் பார்க்கணும்
மயிலாட்ட மொயிலாட்ட மாடனும்
கரகாட்டம் காவடியாட்டம் ரசிக்கணும்
மரபுமாறாக் கூத்து பார்த்து மனம்மகிழணும்
வாடியம்மா போய்வருவோம் - அவரை
கோடிமுறை கும்பிடுவோம்
நம்ம நரசிங்கர் - அவர்
நம்ம நரசிங்கர் } 2

(நரசிங்கர்)

கருணை சொரூப நரசிங்கரை வணங்கனும்
திருவருளால் பெருவாழ்வு கிடைக்கணும்
அருமையான ஆலயத் திருக்காட்சி காணணும்
பெருமகிழ்வோடு வீடுநாமும் திரும்பணும்
வாடியம்மா போய்வருவோம் - அவரை
கோடிமுறை கும்பிடுவோம்
நம்ம நரசிங்கர் - அவர்
நம்ம நரசிங்கர் } 2

(நரசிங்கர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரசிங்கரூபா! நரசிங்கரூபா! - உன்
நற்பதியை நாடிவாறோம் நரசிங்கரூபா
அற்புதனே ஆனந்தனே நரசிங்கரூபா - உன்
பொற்பதத்தை சரணடைந்தோம் நரசிங்கரூபா
நமோ! நமோ! நரசிங்கா! } 2
நாராயண நரசிங்கா

(நரசிங்கா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொகையறா

5) பஞ்சமா பாதகரை அஞ்சாமல் அழித்திடுவாய்!
நெஞ்சாரத் துதிப்போரை நித்தமும் காத்திடுவாய்!
வஞ்சகப் பேய்களைச் சங்காரம் செய்திடுவாய்!
துஞ்சாமல் எம்மூரைத் துணைநின்று காத்திடுவாய்!
காத்திடுவாய்!

## சரணங்கள்

நாராயணன் நான்காம் அவதாரம்
நரசிங்கரூப அவதாரம்
பாரதில் பாதகரை அழிக்க - அந்த
பாரளந்தோ னெடுத்த அவதாரம்
நாராயணா ஹரிநாராயணா } 2
நரசிங்கரூப நாராயணா
(நாராயணா)

மச்ச அவதாரம் கூர்ம அவதாரம்
வராக அவதாரம் வாமன அவதாரம்
பரசுராம அவதாரம் இராம அவதாரம்
பலராம அவதாரம் கண்ணன் அவதாரம்
நாராயணா ஹரி நாராயணா } 2
நரசிங்கரூப நாராயணா
(நாராயணா)

இரணியனைக் கொன்ற அவதாரமே
பிரகலாதனை ஆளவைத்த அவதாரமே
அரக்க குலமழித்த அவதாரமே - இந்த
நரசிங்கரூப நல்ல அவதாரமே
நாராயணா ஹரி நாராயணா } 2
நரசிங்கரூப நாராயணா
(நாராயணா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்கரத்தால் சாடும்வினை போக்குவான்
சங்கொலியால் தேசமெல்லாம் ஆளுவான்
அபயக்கரத்தா லணைத் தருளுவான்
ஆரைநகர் கடற்கரை நரசிங்கன்தான்
நாராயணா ஹரி நாராயணா } 2
நரசிங்கரூப நாராயணா

(நாராயணா)

ஆலயம்! நரசிங்கர் ஆலயம்
ஆலயம்! நரசிங்கர் ஆலயம்
ஆரைநகர் கடற்கரையில்
அமைந்த ஆலயம்
ஆராதிக்க நரசிங்கர்
அருளும் ஆலயம்
வந்து வணங்குங்கு - துன்பம் } 2
வெந்து மடியுங்க

(நாராயணா)

பக்த ராவணனைக் கொன்று - தம்பி
விபுடனனை ஆள வைத்தவர்
மாவலி மமதை அடக்கி - அவனுக்கு
பாதாள லோகமளித்தவர்
தேடிவந்து அமர்ந்த ஆலயம்
நாடிய வரமளிக்கு மாலயம்
வந்து வணங்குங்க - துன்பம் } 2
வெந்து மடியுங்க

(நாராயணா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்திருந்து வாலியை கொன்று
சுக்ரீபனுக்கு சுயராட்சிய மளித்தவர்
பாரதப் போர்க்களதிலே - வைத்து
பார்த்தனுக்கு கீதை சொன்னவர்
தேடிவந்து அமர்ந்த ஆலயம்
நாடிய வரமளிக்கு மாலயம்
வந்து வணங்குங்க - துன்பம்
வெந்து மடியுங்க } 2

(ஆலயம்)

எத்தனை எத்தனை ஆலயங்கள்
எங்கள் கடற்கரை வித்தவிலே
அத்தனையும் ஆரையூர் நரசிங்கரை
சுற்றி அமைந்தது அற்புதமே
பாத்திடப் பாத்திடப் பக்தி பெருகியே
சித்திக்கிதே உள்ளம் தித்திப்பிலே
நரசிங்க நாராயணா - நமோ
நரசிங்க நாராயணா } 2

(எத்தனை)

பிள்ளையார்க்கு ஆலயம் நிருதிமூலையிலே
எல்லையெங்கும் நிறைகிறது திருவருளிலே
முருகனாலயமோ வாயு மூலையிலே
கருணையது பொங்குது கடற்கரையிலே
ஆஞ்சநேயராலயம் அக்கினி மூலையிலே
வாஞ்சையோடு வரமளிக்கார் நேரினிலே
காளிதேவியாலய மீசான மூலையிலே
ஆடிவந்தருளளிப்பா ஊரினிலே
நரசிங்க நாராயணா - நமோ
நரசிங்க நாராயணா } 2

(எத்தனை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடேறி காலவைரவர்க்கு மாலயமே
தேடிவந்து தருகிறார்கள் தரிசனமே
துரோபதை சுடலை வைரவர்க்கு மாலயமே
துரோகிகனை துரத்துகிறார்கள் தூரவே
நாகதம்பிரான் மாகாளிக்கு மாலயமே
பாவவினை யறுக்கார்கள் பரிவுடனே
எட்டுத்திக்கு மாலயமமர்ந் தவர்கள்
எல்லோரு மிங்கே காவல்தெய்வங்களே
நரசிங்க நாராயணா - நமோ } 2
நரசிங்க நாராயணா

(எத்தனை)

*19.02.1989*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருதயபுரம் மேற்கு வாசுகி அம்பாள்
## கும்மிப்பாடல்கள்

**தரு**

தானினம் தானினம் தானானாம் - தனம் } 2
தானினம் தானினம் தானானம்

**காப்பு**

1. இருதயபுர மேற்கிலமைந்திட்ட
திருசுப்பிரமணிய ஜோர்ச் வளவில்
திருக்கோயிலமர் வாசுகி கும்மி பாட
சித்தி விநாயகர் காப்பாமே.

2. அன்னை வாசுகியின் நேச பக்தன்
செந்தூரன் உயர் பரீட்சை எழுத
நெல்லூர் வாசுகி ஆசிபெற்று
நல்ல முறையில் சித்தியும் பெற்றனரே.

3. ஆசிபெற்ற அடுத்த செவ்வாய்க்கிழமை
வாசுகி பின்னிரவு கனவில்
தோன்றி யைந்து சிரசுடனெழுந்து
ஆடிக் காட்சி கொடுத்தனளே.

4. இல்லத்து நிலத்தில் முழுவுருவை
அச்சதாக அவபதித்த தடத்தை
மெய்சிலிர்க்கக் கண்டு வியக்கையிலே
இச்செய்தி ஊரெல்லாம பரவியதே.

5. ஈதென்ன அதிசயம் என்று புகழ்ந்து
ஊரவ ரெல்லாம் திரண்டு வந்து
மாலவன் சோதரி வாசுகிதானென்று
வாயார வாழ்த்தி வணங்கினரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. ஈராயிரத்து பனிரெண்டா மாண்டு
மாமாங்கேஸ்வர தீர்த்த வடுத்தநாளில்
நீரூற்ற சென்ற செந்தூர னுடலில்
காட்சி கொடுத் தன்னை கலந்தனளே.

7. உடலின் மாற்றத்தா லியலாது
உடனடியா யில்லம் சென்று துயில
உருமாறி யன்னையா யாடியுமே
வந்த நோக்கம் கூறி மலையேறினளே.

8. ஊரவர் எல்லம் அதிசயிக்க
நாவ மரத்தடிக் குழியிலிருந்து
தாவியெழுந் தைந்து தலையுடனாடி
மீண்டும் குழியில் புகுந்தனளே.

9. எமக்கிவ்விடமே யாலய மென்று
பெரிய செட்டையை குழியில் கழற்ற
அக்குழிமேல் சிறு ஆலயம் கட்டி
அன்னை வாசுகியை வழிபட்டனரே.

10. ஏகதந்த ஏரம்பனுக்குக்கும்
பார்தசாரதி பரன் ஆஞ்சநேயருக்கும்
நாகரஞ்சனி மாரி வைரவர்க்கும்
ஆலயங்கள் அழகுற வமைத்தனரே.

11. ஐந்து சிரசுடன் வாசுகி யன்னை
ஐயமறக் கருவறை வீற்றிருந்து
ஐக்கியத்தோடு வழிபடு மனைவர்க்கும்
ஐஸ்வரியம் தந்து காத்திடுவா(ள்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. ஒன்றல்ல ஓராயிரம் வடிவிலவ
ஒவ்வொரு பூசை வேளையிலுமே
திவ்விய தரிசனம் தானளித்து
கௌவியிழுப்பாள் கண்ணாலே.

13. ஓதற்கரிய கலைஞானம் தந்து அவ
ஓங்கு புகழோடு வாழவைப்பா
பாங்குடனே பயபக்தியோடு - அவ
பாதம் பணியு மனைவருக்கும்.

14. ஔடதமாகவே அவயிருந்து - வரும்
அனைவருக்கும் பிணி களைந்து
மழலை இல்லாதோர்க்கு பழம் கொடுத்து
மகப் பேறளித்து மகிழ்ந்திட வைப்பா.

15. அன்றிலிருந்து இன்றுவரை யுன்தன்
அற்புதங்கலெல்லா மெடுத்துரைக்க
இப்பிறவியில் முடியுமோதான்?
தற்பரியே நீயே சொல்லுமம்மா.

16. உன் அற்புதங்கள் தன்னைப் பாடவைக்க
எப்படி என்னை அழைத்தாயம்மா
உன்தன் திருவிளையாடல்களை
எண்ணிக்கையால் கூறமுடியாமோதான்.

17. கீதையரசன் தங்கையாளே - உயர்
ஆதிசேடன் மங்கையாளே
காசிபமுனி வம்சத்துதித்த - நல்
வாசுகியம்மையே வாருமம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. பொன்னிற மேனி யழகியாளே - தூய
இதமான தாழம்பூ மணத்தவளே
நல்நாவ மரத்தடி யுறைபவளே
வெண், செந்தாமரை யேந்து கரத்தவளே.

19. கத்துரு பெற்றிட்ட உத்தமியே - மெத்த
உத்தம சாதியிலு தித்தவளே
சத்திரிய வம்சகுல வாசுகியே
நித்திய சத்திய அன்னைநீயே.

20. சக்கரம் கருங்குவளைப் புள்ளிகள்
மெத்த வழகுடன் பரிணமிக்க
படமெடுத்த நீ யாடும் வேளை
பார்பவர்கள் பக்திக் கரம்குவிப்பார்.

21. கிழக்குத் திசையிலிருந்தறுகம்
கிழங்கு புசித்து மகிழ்பவளே
சிவந்த நேத்திரங்க ளுடையவளே
வரங்கள் தர எங்கள் முன் னாடிவாம்மா.

22. அதிக மதுபான மருந்தியதால்
உயிர்போக யிருந்தவரைக் காத்து
மதுவின் கொடுமை எடுத்துரைத்து
மனம் மாற்றி யவரைச் சேர்த்தெடுத்தாய்.

23. வாசுகியம்மா வுன்வாக்கின் படியே
ஆலயம் வரும் அனைவரு
சன்மானமின்றியே சகல சேவையும்
சந்தோமாகப் புரிகின்றாரே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. தங்கள் தங்கள் தீராத் துயரைத்தீர்த்திட்ட
சந்தோசத்தால் மனம் மகிழ்ந்தவர்கள்
எண்ணத்தால் நேர்ந்த நேர்த்திகளை
அன்னையுன் ஆலயத்திலளிக்கின்றாரே.

25. செவ்வாய் வெள்ளியிரு தினங்கள்
இரவுப் பூசை முடிய மருந்தளிப்பா(ய்)
தினப்பூசை இரவினில் பெற்றுமே
மன மகிழ்வை மக்களுக்களிப்பாய்.

26. முதல்ஞாயிறு மூன்றாம் சனி பௌர்ணமி
எல்லா மாதமும் பகல் பூசை முடிய
வருந்தி வந்திடு மடியவர்க்கு
வாக்களித்து வரம் கொடுப்பாய்

27. ஆண்டு தோறும் பங்குனி யாறாந் திகதி
ஆலய திருக்கதவு திறந்து
வாசுகியம்மா வுந்தனற்கு பத்து
நாட்கள் தொடர்ந்து சடங்குதானே

28. ஆடம்பரம் இங்கு இல்லையம்மா - ஆனால்
பாரம்பரிய முறைப்படியே
பயபக்தியோடு பத்து நாட்களுமே
உற்சவம் ஒழுங்காய் நடைபெறுமே.

29. ஐம்பொறிகளையும் அதனால் - வரு
ஐம்புலனுணர்வுகளையும்
மெய்யானம் மனவொருமைப்பாட்டையுமே
ஐந்து சிரசிதத்துவமுணர்த்துதம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. விச சந்துக்களின்கடி பாம்புக்கடி - மற்றும்
விசங்களா லேற்படும் நோயனைத்தும்
உண்ணாலய மண்ணை வந்து மிதித்து
வழிபடுவோரை யணுகாதேயம்மா.

31. நாக பஞ்சதி விரதமோடு
நாக சதுர்த்தி விரதமும் பிடித்து
நாகசக்தி கவசமும் படித்திட
தீமை தீய்ந்து நன்மை பெருகுமம்மா.

32. பன்னய சயனன் தங்கையம்மா - நீ
இப்புவி மக்களின் அன்னையம்மா
உன் உண்மைத் தரிசனம் காண்பதற்கு
என்றுமுன் னாலயம் வருவோ மேயம்மா.

33. மங்களமே பொங்கும் மங்களமே
அச்சுதன் பாதம் மங்களமே
மங்களமே பொங்கும் மங்களமே
ஆஞ்சநேயர் பாதமும் மங்களமே.

34. மங்களம் மங்களம் மங்களமே
மாரி நாகரஞ்சனிக்கும் மங்களமே
ஆலயம் காத்திரு வைரவர்க்கும்
ஆதிசேடன் வாசுகிக்கும் மங்களமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசுகி யம்பாள் தாலாட்டு

**தரு**

ஆராரோ ஆராரோ ஆரி ராரிரோ
தாலேலோ தாலேலோ தாலிலாலிலோ
தாலிலாலிலோ........ தாலிலாலிலோ

1. இருதயபுர மேற்கிலுறை வாசுகியம்மா
திருநெல்லூரில் குடியிருந்த வாசுகியம்மா
நல்லோருக்கு நலமளிக்கும் வாசுகியம்மா
ஐம்முக அன்னையாளே வாசுகியம்மா
வாசுகியம்மா!............வாசுகியம்மா (ஆராரோ.....)

2. அண்டியோரை ஆதரிக்கும் வாசுகியம்மா
அண்டமெங்கும் நின்றாடும் வாசுகியம்மா
அருள்வடிவே அற்புதமே வாசுகியம்மா
அமரர் தொழு தேற்றுகின்ற வாசுகியம்மா
வாசுகியம்மா!............. வாசுகியம்மா! (ஆராரோ.....)

3. அங்கயற் கண்ணியாளே வாசுகியம்மா
ஆதியந்தம் நீயல்லவோ வாசுகியம்மா
அரவாகி உருவாகி வாசுகியம்மா
அரியபுவி தன்னிலுயா வாசுகியம்மா (ஆராரோ.....)

4. ஆதியுமையே சோதியுருவே வாசுகியம்மா
ஆதியந்தம் நீயல்லவே வாசுகியம்மா
ஆடிடும் அழகு காண வாசுகியம்மா
ஆயிரங்கண்கள் போதாதே வாசுகியம்மா (ஆராரோ.....)

5. ஆணவக் காரர்களை வாசுகியம்மா
ஆட்டங்காணச் செய்திடுவாய் வாசுகியம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராதனை பூசையேற்று வாசுகியம்மா
ஆடி மகிழ்ந்தருளளிப்பா (ய்) வாசுகியம்மா (ஆராரோ.....)

6. இருதயபுர மேற்கினிலே வாசுகியம்மா
இருந்தடியவரைக் காப்பவளே வாசுகியம்மா
இகமதில் கண்கண்ட தெய்வம் வாசுகியம்மா
இல்லயடி யுன்னைப்போல் வாசுகியம்மா (ஆராரோ.....)

7. இராச பத்தினியாளே வாசுகியம்மா
இருடிகேச உபாசகியே வாசுகியம்மா
இடர்களைத் தீர்த்திடுவாய் வாசுகியம்மா
இருநிதியு மளித்திடுவாய் வாசுகியம்மா (ஆராரோ.....)

8. ஈர்செட்டைகள் விரித்து வாசுகியம்மா
ஈரேழுலகம் சுற்றிடுவாய் வாசுகியம்மா
ஈன சுரம் போக்கி வாசுகியம்மா
ஈடேற்ற மனித்திடவா வாசுகியம்மா (ஆராரோ.....)

9. ஈழத்திரு நாட்டினிலே வாசுகியம்மா
ஈஸ்வரியாய் நீயமர்ந்து வாசுகியம்மா
ஈரந்தியும் பணிபவர்க்கு வாசுகியம்மா
ஈர்ந்திடுவா(ய்) வரமனைத்தும் வாசுகியம்மா (ஆராரோ.....)

10. உலகினிலே உண்மைத் தெய்வம் வாசுகியம்மா
உன்னை யல்லால் வேறு யாரு? வாசுகியம்மா
உபேந்திரன் உன்னாலயத்தே வாசுகியம்மா
உடனிருந்து நலமளிக்கார் வாசுகியம்மா (ஆராரோ.....)

11. உருத்திரக் குணமுடைய வாசுகியம்மா
உருகியுனை வழிபட வாசுகியம்மா
உறுதுணையாயிருந்து வாசுகியம்மா
உற்சாகம் அளித்திடுவா (ய்) வாசுகியம்மா (ஆராரோ.....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. உன்னத வுயர் சாதியாளே வாசுகியம்மா
உன்னுறை பதி மரவடியே வாசுகியம்மா
உறுகண் வரும் வேளையிலே வாசுகியம்மா
உள்ளன்போடு காப்பவளே வாசுகியம்மா (ஆராரோ.....)

13. ஊறணி யையும் காப்பளே வாசுகியம்மா
ஊழியம் செய் அடியவர்க்கு வாசுகியம்மா
ஊறுகளைக் களைந்து வாசுகியம்மா
ஊட்டம் அளித்திடுவாய் வாசுகியம்மா (ஆராரோ.....)

14. ஊனமுள்ளவர்க்கு வாசுகியம்மா
ஊன்று கோலாயிருந்து வாசுகியம்மா
ஊழ்வினை ஓட்டிக் காக்கும் வாசுகியம்மா
ஊற்றுக்கள முன்னாலயமே வாசுகியம்மா (ஆராரோ.....)

15. எல்லையற்ற எழிழரசி வாசுகியம்மா
எம்பிராட்டி நீயல்லவோ வாசுகியம்மா
எத்தர்கள் செய்தீமைகளை வாசுகியம்மா
எரிகதிராய் சுட்டெரிப்பாய் வாசுகியம்மா (ஆராரோ.....)

16. எள்ளுநர் உள்ளமதை வாசுகியம்மா
எதிரூன்றி திருத்திடுவா(ய்) வாசுகியம்மா
எத்துன்பம் வந்தாலும் வாசுகியம்மா
என்றுமே காத்திடுவா(ய்) வாசுகியம்மா (ஆராரோ.....)

17. ஏந்தெழில் அன்னையாளே வாசுகியம்மா
ஏந்திழை அணிபவளே வாசுகியம்மா
ஏக்கறவு அழித்தொளிக்கும் வாசுகியம்மா
ஏனாப்பை யகற்றிக்காரும் வாசுகியம்மா (ஆராரோ.....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. ஏழையென் இன்னல் தீர்க்க வாசுகியம்மா
ஏன் வரத் தாமதமோ வாசுகியம்மா
ஏற்றழிவு பாராச் சக்தி வாசுகியம்மா
ஏதிவார்க்கு உதவிடுவா(ய்) வாசுகியம்மா (ஆராரோ.....)

19. ஐந்து சிரசுடையவளே வாசுகியம்மா
ஐதீகம் காப்பவளே வாசுகியம்மா
ஐக்கியமாய் வாழவைத்து வாசுகியம்மா
ஐயமகற்றி யாள்பவளே வாசுகியம்மா (ஆராரோ.....)

20. ஐந்தெழுத்து பஞ்சாட்சரியே வாசுகியம்மா
ஐஸ்வரியம் அளிப்பவளே வாசுகியம்மா
ஐம்புலனாயிருப்பவளே வாசுகியம்மா
ஐயம் அகற்றி யாள்பவளே வாசுகியம்மா (ஆராரோ.....)

21. ஒட்டுக் காய்சலையும் வாசுகியம்மா
ஒடுக்கி யடக்கிடுவாய் வாசுகியம்மா
ஒட்பம் நிறை சக்தியாளே வாசுகியம்மா
ஒருவினை மாற்றிடவா வாசுகியம்மா (ஆராரோ.....)

22. ஒளிமரத்தடி உறைபவளே வாசுகியம்மா
ஒன்றளரை பணியவைக்கும் வாசுகியம்மா
ஒப்பனைப் பிரியத்தாளே வாசுகியம்மா
ஒற்றுமையின் இருப்பிடமே வாசுகியம்மா (ஆராரோ.....)

23. ஓவியம் நிறையுத்தமியே வாசுகியம்மா
ஓதவனம் நீந்தி வரும் வாசுகியம்மா
ஓங்கார ரீங்காரி வாசுகியம்மா
ஓராட்டுப் பிரியத்தாளே வாசுகியம்மா (ஆராரோ.....)

24. ஓதினோமுன் நாமமதை வாசுகியம்மா
ஓடிவந்து ஆடிடம்மா வாசுகியம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓச்சம் நிறை யன்னையே வாசுகியம்மா
ஓலைப்பூ மணத்தழகி வாசுகியம்மா (ஆராரோ.....)

25. ஔவிகம் அகற்றுபவளே வாசுகியம்மா
ஔடதமாகி நோயகற்றும் வாசுகியம்மா
ஔதாரிய மணிப்பவளே வாசுகியம்மா
ஔவையாகி யணைப்பவளே வாசுகியம்மா (ஆராரோ.....)

26. கலியுக வரத வன்னையாளே வாசுகியம்மா
கத்துரு பெற்றவளே வாசுகியம்மா
கஞ்சமலர் கைபிடித்து வாசுகியம்மா
கச்சிதமா யபயமளிப்பா(ய்) வாசுகியம்மா (ஆராரோ.....)

27. காசிபமுனி புத்திரியே வாசுகியம்மா
காமாட்சி யானவளே வாசுகியம்மா
காண்தகு காட்சிதரும் வாசுகியம்மா
காசினியோர் போற்றும் வாசுகியம்மா (ஆராரோ.....)

28. கிழக்குதிசை யுறைபவளே வாசுகியம்மா
கிருபைதரு உபகாரியே வாசுகியம்மா
கிருகம் வந்து காத்து வாசுகியம்மா
கிருபாகடாட்சம் தருபவளே வாசுகியம்மா (ஆராரோ.....)

29. கீர்த்தி நிறைந்தவளே வாசுகியம்மா
கீர்தனை பாடிவாறோம் வாசுகியம்மா
கீதையரசன் தங்கையாளே வாசுகியம்மா
கீழ்நிலை போக்கிகாரும் வாசுகியம்மா (ஆராரோ.....)

30. குலத்தால் உயர்ந்தவளே வாசுகியம்மா
குலமாந்தர் குலம்காப்பாய் வாசுகியம்மா
குணவாயில் குடியிருக்கும் வாசுகியம்மா
குதுகல குண்டலிணி வாசுகியம்மா (ஆராரோ.....)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. கூடகம் போக்கியாளும் வாசுகியம்மா
கூடலர் பகையை மாற்றும் வாசுகியம்மா
கூடைப்பாடலுக் காடும் வாசுகியம்மா
கூற்றன் அணுகாது காக்கும் வாசுகியம்மா (ஆராரோ.....)

32. கெடலூழ்அகற்றிடுவாய் வாசுகியம்மா
கெழுவுடனே அணைத்திடம்மா வாசுகியம்மா
கெடுதி செய்வோரைத் திருத்தும் வாசுகியம்மா
கெழுதகமையோடு சன்னிதிவாறோம் வாசுகியம்மா
(ஆராரோ.....)

33. கேசவன் சோதரியே வாசுகியம்மா
கேண்மையோடு வாறோமம்மா வாசுகியம்மா
கேசாதி பாதம் தாரும் வாசுகியம்மா
கேதுதலால் வழபடுவோம் வாசுகியம்மா (ஆராரோ.....)

34. கைகூப்பி வணங்குகிறோம் வாசுகியம்மா
கைங்கரியம் செய்பவரை வாசுகியம்மா
கைகொடுத்து காத்திட வாசுகியம்மா
கைமாறு செய்கின்ற வாசுகியம்மா (ஆராரோ.....)

35. கொண்டல் வண்ணன் தங்கையே வாசுகியம்மா
கொடுந்துயர் அகற்றிடு வாசுகியம்மா
கொற்ற மளித்தெமக்கு வாசுகியம்மா
கொற்றவையே காத்திடம்மா வாசுகியம்மா (ஆராரோ.....)

36. கோபாலன் தங்கையளே வாசுகியம்மா
கோமளக் குணவதியே வாசுகியம்மா
கோலாகல வாழ்வளித்து வாசுகியம்மா
கோரியே காத்திடம்மா வாசுகியம்மா (ஆராரோ.....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசுகியம்பாள் காவியம்

**தரு**

தந்தன தனாதனதா னாதனத னானா
தனனா தனாதந்த னாதந்த னானா } 2

**காப்பு**

1. காசிபர் கத்துரு மகளாய் அவதரித்து
ஆதிசேடனை மணமது முடித்து
இருதயபுர மேற்கிலினிலே வந்து
உருவான நாவலடிப் பொந்தில் புகுந்து
ஊரறிய செந்தூரன் உடலில் கலந்து
கோயிலில் வாசம் செய் வாசுகி மீது
சீரிய செந்தமிழால் காவியம் பாட
வீரிய வேழமுக விநாயர் காப்பாமே.

2. காப்பதற்கென்று கிழக்கு விருட்சவடிவந்து
காசிப்பூ, புன்னைப்பூ, செண்பகப்பூ
தாழம்பூ அறுகங்கட்டை மணம் பெற்று
தாரணியில் சமபார்வையுடன் படம்விரித்து
ஆடிடு அநந்தன், தக்கன், சங்கபாலன்
கார்கோடன், மகாபதுமன், பதுமன், குளிகன்
ஆகியோர் வம்ச உத்தம சாதியிலுதித்த
வாசுகியம்மையையே வணங்குதல் நன்மையே

3. நன்னயமாக நாளும் காட்சி தருபவ நீயே
பொன்னிறவங்கப் பூவையும் நீயே
வண்ணச் சக்கரம் படத்தில் காட்டிடுவாயே
எண்ணமெல்லாம் ஈர்க்கும் எழிலழகி நீயே
வெண் செந்தாமரைப் பூக்களேந்து கரத்தி நீயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்போ டபயவரதம் காட்டியருள்பவ நீயே
எட்டுத்திக்கும் புகழ்பரவ இருப்ப நீயே
இப்புவியில் கண்கண்ட கலியுகவாசுகி நீயே

04. வாசிகை அணிந்து வடிவழகு காட்டிடு
ஆழி மழைக் கண்ணன் அருந்தவ சோதரியே
ஆதிசேடன் அகமதிலுறை பாரியாளே
ஓதினேன் உன்நாம மாடிவா தாயே
செட்டைகள் விரித்து தேசமெங்கும் பறந்தாலும்
நெல்லூர் ஆலயம் நீ சென்று திரும்பினாலும்
அன்போடும் னாலயம் நாடிடு மடியவரை
என்றுமே காத்திட இங்கு வந்திடம்மா

05. வந்திடு! வந்திடுவெனவருந்தியழைக்கு மெந்தன்
பாவாரம் உன்செவிக்கு கேட்கலையோதாயே
விழியாலே மொழிபேசிக் கூப்பிடு மழகை
அழியாத கோலமாயகத்தில் பதித்தோம்
நிலையான வாழ்வு வேறேன்று நித்திலத்தில்
அலைபாயு மகத்தால் அலைக்கழிந்தோமே
கலைஞான மெய்ப்பொருள் காசினியில் நீயென்று
அலைபாய்ந்த மனக்கடலை யடக்கினாயம்மா

06. அடங்காத துட்ட விச சந்துக்களான
படமெடுத் தாடாப்புடையன், விரியன், வளலை
சுருட்டை, தேள், வண்டு, குளவி, சிலந்தி
நட்டுக்காலி, நாய், நரி, புலி, கரடி
எம்மைத் தீண்டாமலே நீ வந்து காருமம்மா
ஆயிரம் சிரம்கொண்டகிலமதைத் தாங்கும்
ஆதிசேடன் தேவியான வாசுகித்தாயே
சோதியான சுடர்வடிவே துணைநீயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07) துணைநீயென்று பாம்புதீண்டிவந்த பெண்ணைக் காத்தாயே
காணாமல்போன கால்நடையை மீட்டாயே
இரத்த வாந்தியெடுத்த ஆண்மகனைக் காத்தாயே
வினைப்பயனால் செயலிழந்த ஊனர்க் குதவினாயே
வியந்திட இஸ்லாமிய மக்கள் பிரச்சனை தீர்த்தாயே
நயம்பட மனிதரூபமோடு நடமாடினாயே
நாகசாபம் தீர்த்து சாபவிமோசனம் அளித்தாயே
நாகவுரு அடையாளம் கண்திறந்து காட்டினாயே

08) காட்டிடு அற்புதம் காண அடியார்கள் வருவது மெய்யே
காணாமற் போனபணத்தை கண்டிட வைத்தது மெய்யே
நடக்க முடியாத குழந்தையை நடக்க வைத்தது மெய்யே
திருந்தாத குடிகாரனைத் திருத்தியது மெய்யே
நம்பாத வம்பார்க்கு தண்டனை வழங்கியதுமெய்யே
சந்தேகித்த பெண்மேனியில் லடையாளமிட்டது
மெய்யே
கிண்டல் செய்த வெளிநாட்டு பெண்ணை யாடவைத்ததுமெய்யே
சுந்தர வைந்து சிரசுட னாடுவதும் மெய்யே

09) மெய்யான கண்கண்ட தெய்வம் நீயம்மா
அஞ்ஞான மகற்றிடு அன்னை நீயம்மா
தான்தோன்றியான தெய்வவாசுகி நீயம்மா
நாகாந்த சக்தியாய் நடமாடுவது நீயம்மா
உடுக்குத் தெறியோசைக் காடுவாநீயம்மா
மகுடிக் கானந்த தாண்டவ மாடுவ வாநீயம்மா
கலிகால கண்கண்ட தெய்வம் நீயம்மா
நலியாத வாழ்வினை நல்குவாய் நீயம்மா

10) அம்மா வென்றுன்தன் வாசலணுகிவந்து
செவ்வாய், நாக, ராகுகேது தோசமுடையயோர்
திருமணத்தடை, திசா புத்தி நடப்போர்
பலபிணி நோய்களால் பாதிப்படைந்தோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் துயர் தீர்த்து நின்மதி தாவென்று பணிய
சந்தோசமாக வாக்களித்து வினைபோக்கி
எந்நாளு முன்னை மறவா மனமணிக்க
சிந்தையிலே நிறைத்து பணிந்திடுவாரம்மா

11. பணிவோடு நாக சதுர்த்தி விரதமதனை
சரியாக வாடிமாத வளர் சதுர்த்தித் திதியில்
வாசுகி யன்னையுன் னாலயம் வந்து
வழிபட்டு மஞ்சள் காப்பு நாகத்திற் கணிவித்து
முறையாக பாம்புப் புற்றுக்கு பால் வார்த்து
புதுப்பட்டுச் சாத்தியபிஷேகம் செய்து
மூன்று அல்லது ஒன்பது முறைவலம் வந்து
காப்ணிய நாகதோசத்தை மாற்றிடுவாயே

12. மாற்றிட வேண்டி மன்றாட நோய்வினைகள்
காற்றினிலே பஞ்சாகக் கணப்பொழுதில் பறக்கும்
வாசமுள்ள மலர்மாலை கட்டி யணிவித்தால்
வாசுகி மனம் மகிழ்ந்து வரமளிப்பா
ஆதிமுதல் இன்றுவரை அகில மதிலே
ஆதரிக்கும் தெய்வம் நீதானேயம்மா
ஆலயம் தேடி ஓடியே கூடிவந்த எமக்கு
ஆடி வந்தே அருள் தந்திடுதாயே

13. தாயே யுன்தன் சன்னிதி தன்னில்
வாசுகி நீயுன் கருவறையிலிருக்க
வேழமுக விநாயக ரமர்ந்து முதல் பூசையேற்க
நாராயணனும் பாராயணம் கேட்டு மகிழ்ந்திருக்க
மாரிமும் மாரிமாதமும் பொழிந்து வீற்றிருக்க
நாக ரஞ்சனி நாகமரநிழல் கோயிலிருக்க
ஆஞ்சநேயர் வாஞ்சையோ டமர்ந்தருள
ஆதி வைரவரும் காவல்காத்திருக்காரம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. அம்மாவே யுன்னற்புதம் மடியேனாலுரைக்க
இப்பிறவியி லென்னால் முடியுமோவம்மா
என்னால் குற்றமது இழைத்திருப்பினம்மா
பிழைபொறுத்திடரகற்றி காத்திடுவம்மா
பூசைசெய் யடியவர்க்கு நீதுணையாயிருந்து
நேசமுட னவர்களுக்கு நற்கிருவை யீர்ந்து
பாசமுடன் எந்நாளும் உன் பணி செய்ய
பாக்கியம் தந்து வினை போக்கிடுவம்மா

15. வேழமுகனோடு மாலவன் சிவன்வாழி
வேதனுமையாள் சரசுபதி மாரியும் வாழி
காலமெலாம் காவல் செய் ஆஞ்சநேயர் வைரவர்வாழி
தேவர்கள் இந்திரன் நாகரஞ்சனி வாழி
காசுபர் கத்துரு நாககுலம் வாழி
பாவாணர் நாவாணர் ஆர்வலர்கள் வாழி
பூசைசெய் பூசகர் தொண்டர்கள் வாழி
பூமாலை புனைந்தளிக்கும் பூவையர்வாழி

16. மாமாங்க ஈஸ்வரர் மலர்பாதம் வாழி
மான்புறு கொத்துக்குள மாரியும் வாழி
மாதாபிதா மக்கள் மண்டு மனைவாழி
சாம்பவி சங்கரன் திரிலோகம் வாழி
உத்தம எட்டுவகை நாகங்கள் வாழி'
பொந்திலுறை தக்க கட்செவிகளும் வாழி
இருதயபுரமேற்கினிலுறைகின்ற
திருநிறை வாசுகி தினம் வாழி வாழியவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசுகியம்பாள் பஜனைப்பாடல்

1. வாசுகி எங்கள் வாசுகி
வாசுகி அம்மா வாசுகி
வாசுகி கலியுக வாசுகி
கலியுக வரத வாசுகி

2. அச்சுதன் சோதரி வாசுகி, அதிரூபலாவணி வாசுகி
அரிராமன் தங்கை வாசுகி, அநியாய மகற்றிடு வாசுகி
அந்தணர் போற்றும் வாசுகி, அஞ்சா நெஞ்ச வாசுகி
அமரர்தொழுதிடு வாசுகி, அறியாமை யகற்று வாசுகி
(வாசுகி)

3. ஆதி அந்தம் வாசுகி, ஆதிசேடன் மங்கை வாசுகி
ஆதி சக்தி வாசுகி. ஆடிடும் அழகி வாசுகி
ஆங்காரம் அகற்று வாசுகி, ஆசாபாசம் போக்கிடு வாசுகி
ஆணவம் அகற்றும் வாசுகி, ஆழியான சோதரி வாசுகி
(வாசுகி)

4. இகலோக சக்தி வாசுகி, இகபர இன்பமளி வாசுகி
இசை மடந்தை வாசுகி, இசைத் தமிழாள் வாசுகி
இந்திராணி எங்க வாசுகி, இடுக்கண்களையும் வாசுகி
இந்திர திசை வாழ் வாசுகி, இந்திரபதமளி வாசுகி
(வாசுகி)

5. ஈஸ்வரியாள் எங்கவாசுகி, ஈடேற்ற மளிக்கும் வாசுகி
ஈடிணையற்றவ வாசுகி, ஈனகுண மறுப்பா வாசுகி
ஈகைக் குணங்குன்று வாசுகி, ஈனோர் வணங்கும் வாசுகி
ஈழ நாட் ரிறைவி வாசுகி, ஈட்டம் தருவா வாசுகி
(வாசுகி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. உத்தம குணத்தாள் வாசுகி, உத்தண்ட ஈஸ்வரி வாசுகி
உரவோர் வணங்கு வாசுகி, உரக வடிவதன் வாசுகி
உந்தி பூத்தோன் தங்கைவாசுகி, எத்தம பத்தினி வாசுகி
உடுக்கிசைக் காடும் வாசுகி, உபேந்திரன் சகோதரி வாசுகி
(வாசுகி)

7. ஊரவர் போற்று வாசுகி. ஊராண்மை செய்வாசுகி
ஊழ்வினை போக்குவா வாசுகி, ஊறுபாடுகளைவா வாசுகி
ஊனர்க் கெல்லாம் வாசுகி, ஊன்று கோலாவா வாசுகி
ஊர்க்கோயில் வாழும் வாசுகி ஊக்கம் தருவா வாசுகி
(வாசுகி)

8. எண்குண முடையாள் வாசுகிஎதிரியை அழிப்பா வாசுகி
எங்கும் நிறைந்தவ வாசுகி, எங்க ளன்னை வாசுகி
எழில் நிறை சக்தி வாசுகி, எழில் நடம்புரி வாசுகி
எண்ணத்தில் வருவா வாசுகி, எம் பிராட்டி தங்க வாசுகி
(வாசுகி)

9. ஏந்தெழில் மிக்கவ வாசுகி, ஏக தலைவி வாசுகி
ஏய்ப்போரை மாய்ப்பா வாசுகி, ஏழைக் குதவு வாசுகி
ஏரம்பனோடிருப்பா வாசுகி, ஏக்கம் தீர்பா வாசுகி
ஏக சக்தியாள் வாசுகி, ஏகாதி பத்தியாள் வாசுகி
(வாசுகி)

10. ஐம்முக சக்தி வாசுகி, ஐயம் அகற்றும் வாசுகி
ஐநில வன்னை வாசுகி. ஐக்கிய மாவாள் வாசுகி
ஐதிகம் காப்பாள் வாசுகி, ஐம்புல னடக்கும் வாசுகி
ஐம்பொறி யாவா வாசுகி, ஐங்கர னன்னை வாசுகி
(வாசுகி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. ஒருமை மகள் வாசுகி, ஒப்பனை விரும்பும் வாசுகி
ஒட்பம் நிறைந்த வாசுகி, ஒருவினை ஒளிப்பா வாசுகி
ஒளிர்வு நிறை கண்ணாள் வாசுகி, ஒளி மரம் உறையும் வாசுகி
ஒற்றுமை விரும்பி வாசுகி, ஒன்றாமை தீர்ப்பா வாசுகி
(வாசுகி)

12. ஓங்கார உட்பொருள் வாசுகி, ஓதிட வருவா வாசுகி
ஓவிய வழகி வாசுகி. ஓதவனம் நீந்திடு வாசுகி
ஓர்மை மனத்தாள் வாசுகி, ஓங்கார ரீங்காரி வாசுகி
ஓலைப் பூ மணத்தாள் வாசுகி, ஓடிவந் தருள்வா வாசுகி
(வாசுகி)

13. உன்னத குணத்தாள் வாசுகி, வண்ணக் கண்ணாள் வாசுகி
பொன்நிற மேனியாள்வாசுகி, எண்ணி வருவா வாசுகி
நாராயணன் தங்கை வாசுகி, பார்தாங்கு சேடன் பாரி வாசுகி
ஊர் மனை காப்பாள் வாசுகி, பேரான தெய்வம் வாசுகி
(வாசுகி)

14. நர்த்தன மாடியே வாசுகி, அற்புதம் புரிவா வாசுகி
பங்கய வதன வாசுகி, செந்தூர நிறத்தாள் வாசுகி
அஞ்சன விழியால் வாசுகி, கொஞ்சிடுமொழியாள் வாசுகி
கும்பத் தழகி வாசுகி, குங்கும் நுதலாள் வாசுகி
(வாசுகி)

15. நாக கன்னியாள் வாசுகி, நாகம்மையும் வாசுகி
நாகேஸ்வரியாள் வாசுகி, நாக பூசணியாள் வாசுகி
நாகர்கள் தெய்வம் வாசுகி, நயினாதீவிலும் வாசுகி
நாகமலை வாழ் வாசுகி, நாதர் முனையன்னை வாசுகி
(வாசுகி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. நாகர் கோயில் வாழ் வாசுகி, நயினா மனையிலும் வாசுகி
நாகப்பொக் கனை வாசுகி, நாகன்சாலை வாசுகி
நாக படுவான் வாசுகி, நாகது கம வாசுகி,
நாராயணி கழுத்து வாசுகி, நாகபடம் காட்டு வாசுகி
(வாசுகி)

17. அராலியன்னை வாசுகி, அரிப்பிலுமவளே வாசுகி
மாந்தாவிலும் வாசுகி, மணிபல்லவத்திலும் வாசுகி
முன்னேஸ்வரத்திலும் வாசுகி, புல்லுமலையிலும் வாசுகி
நெல்லூரினுறை வாசுகி, இருதயபுர மேற்கு வாசுகி
(வாசுகி)

18. புளியன்பொக்கனை வாசுகி, புளியங்குளமுறை வாசுகி
முழுவினை தீர்ப்பாள் வாசுகி, முக்கால முரைப்பாள் வாசுகி
சக்தி சிவ மூர்த்தம் வாசுகி, சங்கடம் தீர்ப்பாவாசுகி
சர்வரோக நிவாரண வாசுகி, சர்வசித்தி தருவாள் வாசுகி
(வாசுகி)

19. ஆதியுமாவா வாசுகி, சோதியுமாவாள் வாசுகி
மேதினிபோற்றும் வாசுகி, மேன்மை தருபவள் வாசுகி
கோயிலில் வாழ்வாள் வாசுகி, காவிலும் வசிப்பா வாசுகி
பாவில் சிரிப்பாள் வாசுகி, பைந்தமிழாயினிப்பா வாசுகி
(வாசுகி)

20. வங்காழி வாழ்த்தும் வாசுகி, சிங்கார மொழியாள் வாசுகி
திங்களொளியான் வாசுகி, சங்கத் தமிழாள் வாசுகி
எங்கு மிருப்பா வாசுகி. இதய தெய்வம் வாசுகி
மங்கல மங்கல வாசுகி, பொங்கு மங்கல வாசுகி
(வாசுகி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்பொருள் :

அச்சுதன் - திருமால்
அரிந்தபன் - திருமால்
அண்மர் - வானோர்
அவனி - உலகம்
ஆங்காரம் - செருக்கு
ஆராட்டு, ஓராட்டு - தாலாட்டு
ஆழியான் - திருமால்
ஆன்றோர் - அறிவு நிறைந்தவள்
இகபோகம் - இவ்வுலகம்
இசை மடந்தை - கலைமகள்
இந்திர திசை - கிழக்குத்திசை
இருடிகேசன் - திருமால்
இருநிதி - சங்கபதுமநிதிகள்
இருவினை - நல்வினை தீவினை
ஈரந்தி - காலைமாலை
உந்திபூத்தோன் - திருமால்
உரவோர் - அறிஞர், முனிவர்
ஊமன் - பேசுந்திறலில்லாதவன்
ஊழ் - பழவஜனை
ஊற்றுக்களம் - பலரும் சேருமிடம்
எரிகதிர் - சூரியன்
ஏகத்துவம் - ஒன்றாயிருக்கும் தன்மை
ஏகாதிபத்தியம் - தனியரசு
ஏதிலார் - வறியோர்
ஏந்தெழில் - மிக்கழகு
ஏற்றழிவு - உயர்வுதாழ்வு
ஐதிகம் - உயர்வுதாழ்வு
ஐயை - தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசுகியம்பாள் பாடல்கள்

1. அம்மா! அம்மா எங்க வாசுகியம்மா - என்று
உன்தன் நாமம் சொல்லி வந்தோமம்மா
உன்கோயிலுள்ளது இருதயபுரமாகும்
நம்பிடுமடியவர்களுக்கருளும்
ஓம் தாயே ஓமம்மா வாசுகி
ஓம் தாயே ஓமம்மா வாசுகி ( அம்மா...)

உலவுகின்ற மேகமதை கருவுறவைத்து
நிலத்தில் நீராய் நீ விழவைப்பது போல
அளவற்ற துன்பமெமை வாட்டிடு காலை
தளராது நீவந்து காத்திடவ்வேளை
கையிருக்கும்வரை யுன்னையே வணங்கவை
உயிரிருக்கும்வரை யுன்னையே நினைக்கவை
வாயிருக்கும்வரை யுன்தன் நாமமோதவை
காதிருக்கும்வரை யுன்தன் வாக்கைக் கேட்கவை
நாசிருக்கும் வரை யுன்செந்தூர வாசம் நுகரவை
கண்ணிருக்கும் வரை யுன் வண்ணம் காணவை
ஓம் தாயே ஓம் அம்மா வாசுகி
ஓம் தாயே ஓம் அம்மா வாசுகி ( அம்மா...)

சீவனொன்றை பெறுகையிலும் வேதனை வைத்து
ஆவியது பிரியும்போது வேதனை தந்து
வாழ்வு யிதுதானென உணர்ந்திட வைத்து
போகும் வரை யுன்தன் புனிதம் உணர்த்து
உள்ளக்கோயிலென்று முன்கோயிலேயம்மா
உயிரும் மூச்சும் உன்தன் உருவமேயம்மா
எண்ணமெல்லாமுன்னுடைய உணர்வேயம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணுகின்ற காட்சியெல்லாமுன் வடிவேயம்மா
பேச்சும் செயலு முன்தன் செயலதேயம்மா
பெருக வேண்டு முன்பேரருள் புவியெங்குமம்மா
ஓம் தாயே ஓம் அம்மா வாசுகி
ஓம் தாயே ஓம் அம்மா வாசுகி (அம்மா.....)

2. இருதயபுரமேற்கு வாசுகி - பேரான
திருக்கோயில நேசி நீ
காராள குணமுடையவ
தாராள மனம் படைத்தவ
பாரளந்தோன் தங்கைதான்
ஆதிசேடன் மங்கைதான்
கலியுக வரத வாசுகி
புவியிலவ பார்கவி (ஊறணி.....)

புவனமதை யாளுகின்ற புவனேஸ்வரி
நவயுக நாயகியவ நாகேஸ்வரி
புரமெரித்தோன் பாகத்தாள் பரமேஸ்வரி
உரமளித்துக் காக்கும் உலகேஸ்வரி
நம்பினவர் கைவிளக்கு நகுலேஸ்வரி
உம்பர் தொழு அகவிளக்கு ஜகதீஸ்வரி
காரிரு ளகற்று ஒளிவிளக்கு கமலேஸ்வரி
கவலை களைய வாடிவரு அவவாசுகி
கலியுக வரத வாசுகி
புவியிலவ பார்கவி (ஊறணி.....)

ஆதிபராசக்தி யனைவர்க்கு மருளரசி
பூமஞ்சள்காரி அவ பூவரசி
நிலையான வாழ்வுக்கு கயலரசி
கலையாத வாழ்வளி கலையரசி
செந்தமிழுக்ககவே மொழியரசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லையில்லா வடிவ எழிலரசி
உருவோடு நின்றாடு வாசுகி
இருதயபுர இராணி வாசுகி
கலியுக வரத வாசுகி
புவியிலவ பார்கவி (ஊறணி.....)

3. வாசமுள்ள வண்ணமலர் எங்கவாசுகி
தேசமெல்லாம் பரவுது பகழ் காற்றலைமேவி
வருகின்ற பக்தர் கூட்டம் கோடியே - அவ
தருகின்ற திருவருளை நாடியே
இருதயபுர மேற்காள் - திரு
வருள் தரு மனத்தாள் (வாசமுள்ள..)

வாசுகி யென்றழைத்தால் வடிவம் மாறிவந்து நிற்பா
வண்ண மலராய் மணத்து நறுவா நாவிலினிப்பா
வஞ்சனையைமாற்றி வல்வினையை போக்கி
நெஞ்சமெல்லாம் வந்து நிறைந் திருப்பா
துணையாகிக் காத்திடுவா(ள்)
துன்பமெல்லாம் தீர்த்திடுவா(ள்)
இருதயபுர மேற்காள் - திரு
வருள் தரு மனத்தாள் (வாசமுள்ள..)

ஆதிசேடனோடு சேர்ந்து நடனமாடி வருவா
ஆற்றல் நிறை சக்தியாகி அகிலமதையாளுவா
அஞ்ஞானம் அகற்றி மெய்ஞான மளித்து
பொய்யான வாழ்வினை மெய்யாக்கிக் காட்டுவா
நலமுடனே காத்திடுவா(ள்)
நற்கதியும் தந்திடுவா (ள்)
சின்ன ஊறணியாள் தான் - அவ
நம்ம வாசுகித் தாய்தான்
இருதயபுர மேற்காள் - திரு
வருள் தரு மனத்தாள் (வாசமுள்ள..)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பூரணை நிலவினை மேகம் தழுவி
விட்டு விலகும்
வாசுகி யாலய மண்ணை நிலவொளி
தொட்டு தழுவும்
அந்த பூரணை தினத்திலே பக்தர் கூட்டம் கூட்டம்
எங்க வாசுகி யாலயத்திலே அருள் ஓட்டம் ஓட்டம்
வந்து கூடுவோம் -வாசுகி
சிந்து பாடுவோம்
பூரணை பூசைதானே
பூப் போடுவோமே நாமே (பூரணை...)

வாசுகி முகம் காணவந்த கூட்டமே
பூப்போட் டருள் பெறுவதில் நாட்டமே
பூவையர் பாடுபஜனை கோசமே
இரவுநேர மவபுக லிசை யாகியே
செவியில் இனிய தேன் வார்க்குமே
இதயம் எங்கும் இன்பப் பூ பூக்குமே
பூரணைப் பூசை நடைபெறும் பரிசுத்தம்
முடியும்வரை அவ வாக்களிப்பின் சத்தம்
வாசுகி எழில் சிங்காரம்
வாவென் றழைக்கு மொய்காரம்
இந்த மகிழ்வு எங்க வாசுகியின் உயர்வு (பூரணை..)

பக்தர்களின் வேண்டுதல் சுமையே யதிகம்
அன்னையவள் வாக்களிப்பாலே குறையும்
பூசை முடிய பூப்போட்டு வணங்கும் காட்சி
பூரிப்பளிக்கும் மக்களின் மனதில் மாட்சி
உள்ளம் கொஞ்சம் கொஞ்ச மாக உருகி
அன்னையை கொஞ்சக்கெஞ்ச நல்லருள் பெருகி
ஐம்முக வாசுகி பாதத்தை அபிசேகிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐஞ்சேலென்று அணைப்பாவவய கரத்தால்
இன்பம் நெஞ்சி லுண்டாகும்
துன்பம் தூர விலகியோடும்

5. ஆனந்த சங்கீதம் நான்பாட வேண்டும்
ஆரம்ப சுரமேழும் நீயாக வேண்டும்
ஆகாயம் நீந்தும் பூமேக மாகி
வார்த்தையால் கவிமழை பொழிந்திட நாவில்
வாசுகியம்மா வரவேண்டும் ஓடி
வாசுகியம்மா வரவேண்டும் ஓடி (ஆனந்த.....)

ஆதிசேடனுடன் வாசுகி சோடி நீ - கூடி
ஆடிடும் ஆட்டுக்கு ஊதிடு மகுடி
பாடிடு மெந்தன் பாவாகும் படி
காட்டிடு கருணை சொற்பூக்கள் கூட்டி
சுரமும் நீயம்மா சுருதி நீயம்மா
இராக பாவ மெல்லாம் நீயம்மா (ஆனந்த....)

உன்னாலய மொரு நந்தவனம்
அந்தி பகலது சிந்தும் மனம்
அன்பு மலராக நீ பூத்திருப்பாய்'
கண்டிட வடியார்கள் காத்துக்கிடப்பார்
ரீங்காரமிசைத்திடு வண்டாக வேணும்
ஓங்காரியரு ளெனக்குத் தர வேணும் (ஆனந்த...)

இன்பங்கள் பொங்கிடு சந்தங்கள் பாட
சொந்தமாக நான் வந்து கூட
சந்தர்ப்பம் தந்திடம்மா சங்கமமாக
தாளினிலிருப்பேன் நாளுமுன்னோட
பாவங்கள் கோர்த்திட்ட இசைமாலையாக
பாசமோ டிணைத்திடு நூலிழையாக (ஆனந்த ....)

*19.06.2000*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஞ்சந்தொடுவாய்
# ஆலடி ஸ்ரீ சித்திவிநாயகர் கண்ணகையம்பாள்
# கும்மிப்பாடல்கள்

**தரு**

தானினம் தானினம் தானானம் - தனம்
தானினம் தானினம் தானானம்

**காப்பு**

01. ஆலமுண்ட ஆதிசிவன் மகன்
ஆலடிச் சித்திவிநாயகர் மேல்
இன்பத் தமிழில் கும்மிபாட
மஞ்சந்தொடுவாய் விநாயகர் காப்பாமே

02. அன்னை கண்ணகை தன்னுடனே - யொரு
எல்லைக்குள் கோவில்கள் கொண்டமர்ந்து
மஞ்சந்தொடுவாய் மக்களைக் காத்திடு
உன்னத உண்மையைப் பாடிடுவோம்

03. கண்ணகையோடு கணபதியும் சேர்ந்து
நன்னயமாக அமர்ந் திருந்து
தொல்லைகள் போக்கிக் காத்திருக்கு - மந்த
தொப்பை யப்பனைப் பாடிடுவோம்

04. குறைகளைச் சொல்லியுருகியழ - அவர்
மறைமுகமாக வந்துதவிடுவார்
தாயினரவணைப் பிலிருந்தென்றுமே
பேசாமல் மற்றோரைப் பேசவைப்பார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. மாசிமகத்திற்கு முன்னாளே - மூன்று
நாட்கலலங்கார உற்வசமாம்
மூஷிகமேறி மூன்றாம் நாளூரை
ஊர்வலமாய் வந்து காவல் செய்வார்.

06. மாசிமகமதில் தீர்த்தமாட - அவர்
வங்கக்கடல் சென்று திரும்பியே
ஆசிகூறி மஞ்சந்தொடுவாயூரை
நேசமுடன் நாளும் காத்திடுவார்.

07. மதியம் தோறும் தினப் பூசையுண்டு - அதி
விசேட பூசைகள் அணைத்துமுண்டு
பதியினிலே பஜனை உண்டு - வெள்ளி
அபிடேக பூசையும் உண்டு.

08. மிஞ்சுமழகு கொஞ்சுவஞ்சி
மஞ்சந்தொடுவாய்க் கண்ணகைக்கு
செந்தமிழால் கும்மி பாடுதற்கு - என்றும்
(ஸ்ரீ) சித்திவிநாயகர் காப்பாமே.

09. மஞ்சன் என்னும் கணத்தலைவன்
மாண்புற வாழ்ந்த மஞ்சந்தொடுவாயில்
கஞ்சமலர்ப் பாத கண்ணகையமர்ந்து
துஞ்சாது ஊரைக் காத்திருக்கா(ள்).

10. கிழக்கெல்லையில் முருகன் காவலிருக்க
மேற்குவாவியில் கங்கையம்பாளும்
வடக்கெல்லையில் மாரியுமமர - தெற்கே
வீரபத்திரரும் காவலங்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. ஆதியில் இவ்வாலயத்திற்கு அம்மா நீ
ஆரைநகரிருந் தானித்திங்கள்
பேழையில் வந்தோலைக்கோவிலமர்ந்து
பூசை சடங்குகள் பெற்றாயே.

12. அழகே உருவமாய் வருவாயம்மா
அன்பை வரமாய் தருவாயம்மா
உருகும் மனதை உணர்வாயம்மா
கொலுவா யகத்திலமர்வாயம்மா.

13. மனமுன்தன் பெயர்தனை உச்சரிக்கு - மிதழ்
உன்னை தவிர்தோரை எச்சரிக்கும்
உன்நினைவகத்துடன் சங்கமிக்கும்
உன்னின்ப சுகங்களே தங்கியினிக்கும்.

14. வாடித்தவித்தா லாடிப்பெருக்கா - யோடி
தேடியெங்களுக் குதவிடுவாய்
பாடித் துதித்தால் பாவில் கிறங்கியே
நாடி வந்தெங்கு மொளிகொடுப்பாய்.

15. கதிரை நிலவாக்கித்தருவாய் - பகல்
வெயிலில் நிழலாகத் தொடர்வாய்
கலைகளிசையாக வசைவாயே
கவிதைக் கருவாகவு மமைவாயே.

16. ஏழீஸ்வரங்களில் ராகங்கள் கோர்த்துமே
இன்பச்சுரங்கள் பாடிடவே
வாடுமடியார்கள் காதுள் புகுந்துமே
ஆனந்தயிசையா யினிப்பாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. புத்தம் புதுமலர் பூத்திட எல்லையில்
நித்தம் நறுமணம் வீசிடவே
சித்தம் சில்லென்று குளிர்ந்திடவே
பக்தர் பரபக்தியோடு பணிந்திடுவார்.

18. சீதமதிக் குடையாகவென்றுமம்மா
சூழ்விருட்சமெங்கு மிதமளிக்க
எதிர்பார்ப்போ டேங்கித் துதிப்போர்க்கு
இன்பம் நூறுகோடி நீயளிப்பா.

19. கல்லடி உப்போடைப் பேச்சியம்பாள்
நல்வாக்கு மருந்தளிக்க முதலில்
மஞ்சந்தொடுவாய்க் கண்ணகையுன்பதி
வந்து அமர்ந்து மனம் மகிழ்வாள்.

20. நாவற்குடா மாரி யூர்வலமாய் வந்து
பாவை கண்ணகை சன்னிதி நிற்க
தேவராளர்கூடி யாடி மகிழ்ந்துமே
கூறிடுவார் வாக்கு மக்களுக்கு.

21. வந்துதான் பாருங்களே யெங்கள்
மஞ்சந்தொடுவாய் கண்ணகை சன்னிதி
உங்கள் மனத்துயரோடி மறைந்துமே
என்றும் கிடைக்கும் மனநிம்மதி.

22. வெதும்பி மனமது நொந்துருகி
தும்பிக்கையானன்னை யாலயம் வர
நம்பி வருவோர் பிணிபோக்கி நாளும்
அம்பிகை கண்ணகை யருளளிப்பா (ள்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. பிள்ளை யில்லாப் பக்தர் குறைபோக்க
நற்குளுத்தியாடவரு வேளையிலே
அற்புதக்கனியளித் தாண்டு தோறும்
தற்பரியாள் தந்திடுவா மழலைச் செல்வம்.

24. காரிகை கண்ணகை உன்வீதியிலே
காவல் தெய்வமாகக் காளிமாரி
நாகதம்பிரானாஞ்ச நேயரோடு
வாகன வைரவர் தானிருக்கார்.

25. விரிந்து அகன்ற முத்தத்திலே யம்மா
மிளிரும் முத்தான மணற்பரப்பில்
புரண்டு விளையாடு நாகதடம்கானத்
திரண்டு வருவார் பக்தரெல்லாம்.

26. வைகாசித் திங்கள் ஐந்து நாட்கள்
தையல் கண்ணகைக்குச் சடங்குசெய்து
நாலாம் நாள் பலிச்சடங்கும் முடித்து
ஆறாம் நாள்குளுத்தியு மாடிடுவா(ள்).

27. ஆயிழை கண்ணகை ஆலயத்தே
ஆண்டுக் கொருமுறை கதவுதிறந்து
பத்ததி முறைப்படி சடங்கு செய்ய - எங்க
அத்திமுகனன்னை யகம் மகிழ்வாள்.

28. வைகாசிப் பௌர்ணமி நிலவொளியில்
வைகறைக் குயில்குருவி குரல் கொடுக்கும்
வேளையில் வந்துமே குளுத்தியாடி
வேண்டும் வரம்தந்து காத்திடுவா(ள்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. ஆடியருளனி ஆஞ்சநேயருக்கு - பூரணை
தோறுமே பூசையுண்டு
கூடுமடியார் குறைகளைந்து - நன்கு
ஆடியழைத்து வாக்களிப்பார்.

30. மழலைச் செல்வம் இல்லையென்று - எண்ணி
மனநெகிழ்வோடு வருபவர்க்கு
மாருதி கொடுக்கும் கனியை - உண்ண
பேரான குழந்தை கிடைத்திடுமே.

31. மங்களம் மங்களம் மங்களமே
மஞ்சந்தொடுவாய் கோவிலுறை
சித்திவிநாயகர் சேவடிக்கும்
மங்களம் மங்களம் மங்களமே.

32. மங்களம் மங்களம் மங்களம்தான்
மானாகர் மகளுக்கு மங்களம்தான்
மஞ்சந்தொடுவாய் வந்தமர்ந்தருள
கண்ணகைக்கு மென்றும் மங்களம்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ஆலடி சித்திவிநாயகருக்கு அற்புதத் திருவிழா - அதுவே
ஆண்டு தோறும் நடைபெறும் முதல்விழா
மாசிமகத்தில் தீர்த்தமாடு திருவிழா - மா
மஞ்சந்தொடுவாய் பிள்ளையாருக்கு பெருவிழா
நெஞ்சமெல்லாம் நெகிழுமே - பக்தி
மிஞ்சவந்து தழுவுமே
வாருங்க! வாருங்க! வாருங்க! - வந்து } 2
பாருங்க! பாருங்க! பாருங்க!
(ஆலடி)

மஞ்சன் கணத்தலைவன் வாழ்ந்த பதியிலே - எங்க
குஞ்சரமுகத்தோன் கோயிலமர்ந்துமே
மிஞ்சுஎழில்கொஞ்சு மூஷிகமேறியே - அவர்
அஞ்சேலென்று வீதியுலா வருவார் நேரிலே
நற்கதி நல்கியே நாளுமே - எம்மை
நலம்பெற வைக்கும் திருவிழா
வாருங்க! வாருங்க! வாருங்க! - வந்து
பாருங்க! பாருங்க! பாருங்க! (ஆலடி)

மூன்றாம் நாள் அலங்கார உற்சவத்திலே - அவன்
ஊரைக்காக்க ஊர்வலம் எழுந்து வருவாரே
ஈராண்டுக் கொருமுறை வருமகாமகத்திலே - தீர்த்த
மாடுவார் தேசதெய்வங்களோடு கூடியே
ஒற்றுமைக் கரவொலி ஒலித்திடும் - இந்த
அற்புதத் தீர்த்த திருவிழா
ஓம்! ஓம்! எனும் பிரணவ மந்திரம் - மனித
ஆங்காரம் அகற்றும் யந்திரம்
வாருங்க! வாருங்க! வாருங்க! - வந்து
பாருங்க! பாருங்க! பாருங்க!
(ஆலடி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. கண்ணகையம்மா! கண்ணகையம்மா!
மஞ்சந்தொடுவாய் கோயிலமர்ந்த
கண்ணகையம்மா! - என்றும்
எங்கள் எண்ணமெல்லாம்
நீதானேயம்மா!
கண்ணயர்ந்தாலும் காண்பதுந்தன் - எழில்
வண்ணம் தானம்மா!
வந்திடு அம்மா கண்ணகையே
வந்திடு அம்மா!
தந்திடு அம்மா உன்னருளை
தந்திடு அம்மா! } 2
ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்சக்தி ஓம் - அம்மா
ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்சக்தி ஓம் } 2

(கண்ணகையம்மா)

அக்காவென்று உன்தன் ஆலயம் நாடியே
பேச்சியம்மா வந்திடுவா மூன்றாம் நாளிலே
மிக்க மருந்து வாங்க அடியவர் கூடியே
நெக்குருகிக் காத்திருப்பாருன் பதியிலே
பார்க்கப் பார்க்கப் பரவசம்
பரவிட வைப்பாய் அதிசயம்
மாரியாத்தா வந்து உன்வசம்
வாரிவழங்கிடுவா பலவரம்
ஓம் ஆதிபராசக்தி அன்னையே போற்றி
ஓம் சர்வசக்தித் தாயே போற்றி
ஓம் சக்தி ஓமம்மா கண்ணகையே போற்றி } 2

(கண்ணகையம்மா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளுத்தியாட அம்மா நீவரும் வழியிலே
அளித்திடுவா பிள்ளைக்கனி கனிவடிவிலே
ஆண்டுதோறும் மழலைச் செல்வம் பெற்றவர் நேரிலே
கொண்டுவந்து தந்திடுவார் நேர்த்தி மகிழ்விலே
அற்புதம் இது அற்புதம்
அன்போடு பணிவார் பொற்பதம்
தவறிச் செய்வோர் தப்பிதம்
மன்றாட வளிப்பா நற்பதம்

(கண்ணகையம்மா)

3. அஞ்சன மைவிழியாள் கண்ணகை
மஞ்சந் தொடுவாயில் சிந்தும் புன்னகை
கண்டாலதர்க் கீடில்லை பொன்னகை
வழிபடுபவர்க் களிப்பா லருளன்னை
வந்து பாருங்க - ஆலயம்
வந்து பாருங்க
தந்திடுவா - வாலாயம்
நம்பி வாருங்க
மங்கள மங்கள மங்களக்
கண்ணகைத் தாயே
பொங்குது பொங்குது - எங்கும்
உன்னருள் தானே

(அஞ்சனை)

பண்டு தொட்டு இன்றுவரை என்றுமே
ஆண்டுக் கொருமுறை சடங்கு கொள்வது
மஞ்சந்தொடுவாய் கண்ணகை மட்டுமே
எங்கும் காணமுடியாதிது உண்மையே
வந்து பாருங்க - ஆலயம்
வந்து பாருங்க
சக்தியவ நாளும்
தந்திடுவா சித்தியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கள மங்கள மங்களக்
கண்ணகைத் தாயே
பொங்குது பொங்குது - எங்கும்
உன்னருள் தானே

(அஞ்சனை)

அம்மாவுன் சிலம்பலம் பொலி கேட்டுமே
வந்தமர் நாவல்மரக்குயில் பாடுமே
தென்றலால் தலவிருட்சம் சாமரை வீசுமே
நாவலில் வெண்நாகம் தொங்கியாடுமே
அற்புதம் தாயே - உந்தன்
அற்புதம் தாயே
நற்பதமளித்து - நாளும்
காத்திருக்காயே

(அஞ்சனை)

மங்கள மங்கள மங்களக்
கண்ணகைத் தாயே
பொங்குது பொங்குது - எங்கும்
உன்னருள் தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. சிலைவடிவிலிருந்து சிரிக்கையிலே - உந்தன்
உயிரோட்ட முகவழ கொளிவீசுதே
காவியநாயகி கண்ணகையே - அம்மா
கோலவிழியழ கோவிய மாமயிலே

நெஞ்சமெல்லாம் நிறைந்தவளே
மஞ்சந்தொடுவா யமர்ந்தவளே
கருணையுள்ளம் கொண்டவளே
அருளை யள்ளித் தருபவளே
இருளகற்று ஒளியாகி - என்றும்
எங்கும் ஒளிர்பவளே
கண்ணகை அம்மா - எங்கள்
கண்ணகை அம்மா
மஞ்சந்தொடுவா - மக்கள்
மனதிலென்றும் நீயம்மா } 2

(சிலைவடி)

அழகொளிரும் சிலைவடிவில் நீ
அமர்ந்த திருக்கோலம்
தொழுதேத்தித் துதிபாடத்
துயரகற்றும் ஞானம்
அள்ளிமுடித்த கொண்டை
கௌவியிழுக்குதுனதண்டை
அதிசயங்கள் மெய்சிலிர்க்கும்
அவபாதம்பற்ற வாழ்வினிக்கும்
கண்ணகை அம்மா - எங்கள்
கண்ணகை அம்மா
மஞ்சந்தொடுவா - மக்கள்
மனதிலென்றும் நீயம்மா } 2

(சிலைவடி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. மஞ்சந்தொடுவாய்க்குப் போகணும் - நம்ம
கண்ணகை கழலடியைக் காணணும்
பொல்லாவினையைப் போக்கிடுவாவாம் - அவ
எல்லோருக்கும் நல்லருள்
நல்கிடுவாவாம்
சக்தியென்றால் சக்திதான்
சஞ்சலம் தீர்க்கும் சக்திதான்
மஞ்சந்தொடுவாயிலே
கோவில்கொண்ட சக்திதான் } 2

(மஞ்சந்)

அள்ளிமுடித்த கொண்டையழகாம்
நல்லோவிய மின்னு பேரொளியாம்
சில்லென்றுள்ளம் குளிர் சூழலுமாம் - எல்லை
தொட்டாலே தொல்லைகளோடிடுமாம்
மானிடவாழ்வு மாயவலைதான்
மானிடர் வீழ்வது பாசவலைதான் - அந்த
மயக்கம் தீர மருந்தளித்தே
தயக்கம் போக்கித் தாங்கிடுவாவாம் } 2

(மஞ்சந்)

கண்பார்வையால் கவலையை மாற்றிடுவாவாம்
துன்பதுயரிலே வீழாது தூக்கிடுவாவாம்
அன்பாலணை வரையு மனைத்திடுவாவாம் - நல்ல
பண்பாலே பாசமோடு பிணைத்திடுவாவாம்
உருகாத மனமு முருகுமாம்
சருகான மலரும் மலருமாம் - அவ
திருநாமம் தன்னைக் கேட்டாலே
வருமநியாய மெல்லாமகலுமாம் } 2
கண்ணகையம்மா - எங்க
கண்ணகையம்மா } 2

(மஞ்சந்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொகையறா, பல்லவி

1. கஜானனன் நாமம் சொன்னால்
தீரும் பாவம் - எங்க
கணாதீபன் பாதம் பணிந்தால்
சேரும் யோகம்.......
கஜானனா ஓம் ஓம் கஜானனா - 3

## சரணங்கள்

எண்ணத்திலே ஏற்றிப் போற்ற
ஓடும் துன்பம் - ஆலடி
சித்தி விநாயகரை வணங்க
கூடும் இன்பம்
தஞ்சமென்று தன்னைச் சரண்
அடைவோர் தம்மை
அஞ்சாமலே காக்குமானை
முகனடி உண்மை.....

கஜானனா ஓம் ஓம் கஜானனா - 3

நாடும் அடியார்களோடு
நாளும் உறவாடிடும்
பாடி வரும் பாவாணரின்
நாவில் நடமாடிடும்
மாமஞ்சந் தொடுவா சித்தி
விநாயகர் திரு காட்சி
எட்டுத்திக்கும் பரவப் புரிந்து
இருக்கின்றாரே யாட்சி

கஜானனா ஓம்ஓம் கஜானனா - 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. ஆஞ்சநேயாய போற்றி! ஆஞ்சநேயாய போற்றி } 2
ஸ்ரீராம பக்த ஆஞ்சநேயாய போற்றி

ஆஞ்சனை வாயு மகனே மஞ்சந்தொடுவா யமர்ந்தவனே
அண்ணல் ராமசந்திர அன்பினில் தோய்ந்தவனே
அண்டினோரை என்றும் காக்கும் ஆஞ்சநேயனே
அழியா வரம் பெற்றவனே பழிவாங்கா குணத்தவனே
(ஆஞ்சநேயாய)

ஆஞ்சனாதேவி செல்வனே வஞ்சனை கொல்பவனே
அடுதிறல் அநுமனே கெடுதிகள் களைவோனே
அழலிறை பானுதன்னை அமுதாக அருந்தியே
அழகினுக் கழகுதனை அதனாலே பெற்றவனே
(ஆஞ்சநேயாய)

ஆதவன் குலத்தாணியே மாதவசிரஞ்சீவியே
ஆறுதல் அளிப்பவனே தேறுதல் தருபவனே
ஆதவன் சிசியனே ஆருயிர் ராம தூதனே
ஆர்க்கும் பகைவர் கண்டஞ்சியோடு நெஞ்சனே
(ஆஞ்சநேயாய)

இராமதூதனாகயிலங்கை சென்றவனே
இந்திர சித்தின் நாக பாசத்தால் கட்டுண்டவனே
இனிய கனிகளை இஸ்டமோடு புஸிப்பவனே
இன்னலைத் தீர்த்திட என்றுமே வருபவனே
(ஆஞ்சநேயாய)

ஈழத்தமிழ் மஞ்சந்தொடுவாயூர் உறைபவனே
ஈவிரக்கமோ டெமைக்காக்கும் காவலனே
ஈடு இணையில்லா வலிமைகள் உடையவனே
ஈனமில்லா வாழ்வதனை யென்றும் தருபவனே
(ஆஞ்சநேயாய)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்சவக் காலத்திலும் மற்புதம் அருள்பவனே
உடுக்கொலிக்குன்னதமாயாடி வருபவனே
உயர் நாவல் மர நிழலு கர்ந்தமர்ந்தவனே
உண்மையடியவர்க்கு உள்ள மகிழ்வளிப்பவனே
(ஆஞ்சநேயாய)

ஊர் கூடிப் பணிந்திடு உயர் உள்ள உத்தமனே
ஊழ்வினை நீக்கு உயர்ந்த உள்ளத்தவனே
ஊனமில் ளுளமோடு உதவிடு மனத்தவனே
நானெனு மகந்தை நீக்கி நலமுற வைப்பனே
(ஆஞ்சநேயாய)

எங்கள் மனம் களிக்க இன்பம் தருபவனே
எண்ணிய வெண்ணமீடேற்ற வென்றும் வருபவனே
எல்லோரையுமென்று மிரக்கமுடன் பார்ப்பவனே
எத்துன்பமுமணுகாது நிதமெம்மைக் கார்ப்பவனே
(ஆஞ்சநேயாய)

ஏதிலார்க்கென்று முதவு ஏழைபாந்த ஏந்தலே
ஏற்றமேயென்று மருளும் இனிய இன்பநாதனே
ஏக்கமெலாம் தீர்த்துக்காத்தருள் தருபவனே
ஏங்கிடு பக்தர்க்காக என்று மோடிவருபவனே
(ஆஞ்சநேயாய)

ஐயம் தீர்த்து ஆண்டிடு மெய்யன்புள்ளவனே
ஐந்தெனும் புலனை வெல்ல ஆற்றளளிப்பவனே
தூய்மையுடல் பெற்றவா துனிவோடு வந்து காப்பா
வாய்மை, பிரமச்சரியம் வகையாயுணர்ந்து காத்தவா
(ஆஞ்சநேயாய)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒண்ணிதி வழங்கவல்ல உயர் குணக்குன்றனே
ஒவ்வாமை நோய்களென்றும் கௌவாது காப்பவனே
ஒட்டலர் துட்டர்களை எட்டிவிரட்டியோட்டுபவனே
ஒளியான உத்தம வோராயிரம் வடிவுடையவனே
(ஆஞ்சநேயாய)

ஓதும் கலை வித்தகத்தை ஒளியாமல் உரைப்பவனே
ஓதிடு ராமநாத ஒலி கேட்டாலோடிவருபவனே
ஓதவனம் தாண்டி வந்து சீதை தன்னை மீட்டவனே
ஓங்குபுகழுடை இராமசீதை பக்தகாவலனே
(ஆஞ்சநேயாய)

ஔவியத்தீயாட் கொள்ளாது பௌவியமாய்க் காப்பவனே
ஔசித்தியம் கெட்டலையாதனைத்து காப்பவனே
ஔவைக்கு முருகனீர்ந்த நாவல் மரநிழலமர்ந்தவனே
ஔடதமாய் மெய்யன்பர் பிணிநோய் தீர்ப்பவனே
(ஆஞ்சநேயாய)

மஞ்சந்தொடு வாயுறை மிஞ்சும் மனமாறுதியே
தஞ்சமென வருவோரைத் தாங்கியே காப்பவனே
நல்வடைமாலை சாத்த அள்ளியருள்பவனே
செம்மலர் தூவிப்போற்ற செவ்வாய் தோசமறுப்பவனே
(ஆஞ்சநேயாய)

கண்ணூறு கவலையெல்லாம் கடுகியே களைபவனே
புண்ணுறுமனிதிலின்பம் பொலி கருணையானே
மாருதியை வழிபடசோருதலென்று மில்லையே
மாறிடும் வாழ்வினிலே மாருதமாய் வருபவனே
(ஆஞ்சநேயாய)

சனிதுயர் களைபவனே சங்கடங்கள் தீர்ப்பவனே
புனிதன் ராகுகேது பொல்லாங் கெல்லாமொழிப்பவனே
ஆயும் செஞ்சொல்வல்லோனே நேயம்மிகு நேசனே
வாயுகுமாரனே வருநோய்கள் தீர்த்திடுபவனே
(ஆஞ்சநேயாய)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொர்ணமே மேனியான சுந்தர செளந்தரியனே
மோனமாம் ஞானமதில் மூழ்கிடு ஞானவானே
மீன்விழிச் சீதை துன்பம் மிரண்டோடவைத்தவனே
அகமதில் ராமர்சீதைக்கு அரியணை அளித்தவனே
(ஆஞ்சநேயாய)

தவநெறிதவறிடாத தண்புனற் கருணையானே
தவறில்லாப் பூசைகொள்ள பெளர்ணமிக்கு வருபவனே
நீடிய பகையை நீக்கும் நிறைகுணம் உடையவனே
நொந்திடாவண்ணம் காக்கும் நோக்கம் கொண்டவனே
(ஆஞ்சநேயாய)

பூரணைப் பூசைதோறும் பூரிப்போடு வருபவனே
வேண்டுதலை நிறைவேற்றி வெற்றிலை மாலைபெறுபவனே
ஆரோக்கியம், அஞ்சா நெஞ்சம், வாக்குவண்மை தருபவனே
புத்தி புகழ்பலம் நித்தம் வழிபடுவோர்க்கு அருள்பவனே
(ஆஞ்சநேயாய)

பெளர்ணமி பூசைகாண வந்து வழிபடுபக்தருக்கு
மனவமைதி கொடுக்க மருந்தளிக்கும் மாருதியே
கனிவர்க்கம் கொடுத்துமே கவலைகளை யோட்டியே
நேர்த்திகளைத் தந்திட நீ காத்திடுவாய் நித்தமே
(ஆஞ்சநேயாய)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. ஓம் அஞ்சனாதேவி மகனே போற்றி!
ஓம் ஆஞ்சநேயா போற்றி! போற்றி!
ஓம் மாருதி மைந்தா போற்றி!
ஓம் மாருதியே போற்றி! போற்றி!

ஆடிவருவாரு ஆஞ்சநேயர் ஆடிவருவாரு
பூரணைப் பூசையேற்க ஓடிவருவாரு
பூப்போட்டுப் பணிய புன்னகை புரிவாரு
நாடிவரும் அடிவர்க்கு நன்மை யளிப்பாரு
நாவ நிழலவர் சன்னிதி
ஆடி நிற்பாரு - அவரு
ஆடி நிற்பாரு } 2

ஆதிதொட்டு இங்கேதானே அமர்ந்திருக்காரு
பாசமோடு இவ் வூரப் பார்த்திருக்காரு
ஊரு மக்கள் பௌர்ணமி பூசைக்கு அழைக்க
பூசாரியார் முறைப்படி அப் பூசையை இயற்ற
மக்களோடு மகிழ்ந்து விளையாட
மிக்க சுகங்களித் துறவாட
சந்தோசத்தால் மக்கள் தம்மை மறக்க
வந்திடு துன்பதுயர் பஞ்சாய்ப்பறக்க
(ஆடிவருவாரு)

பக்தர் கூட்டம் பக்தியோடு பணிந்திட
உள்ளமெலாமவர் நாம முரைத்திட
உன்னத அனுமான் உளம் மகிழ்ந்துமே
சுற்றும் நவக்கிரக தோஷம் போக்கியே
மஞ்சந்தொடுவா மக்கள
அஞ்சேல் எனக் காத்திட
வெஞ்சினம் தணித்துமே
சிந்தை மகிழ்ந்திட
(ஆடிவருவாரு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடிவரு பக்தருக்கு நன்மைகள் செய்யவே
தேடிவரு மன்பருக்கு மனத்தோற்றமளிக்கவே
கூடிவரு மக்களுக்கு ளக்குறை போக்கவே
வாடிவரு மனைவருக்கும் நல்வளமளிக்கவே
சஞ்சலத் தோடு சன்னிதி வரு
மெய்யடியார் வினை போக்கி
புன்னகைப் பூ பூக்கவைத்து
சந்தோசமாச் சாந்தப்படுத்த

(ஆடிவருவாரு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. மஞ்சந்தொடுவாய் மாருதமைந்தனே - என்றும்
உன்புகழ்பாடி யுன்சன்னிதி வந்தோமே
சஞ்சலம் தீர்க்கும் சஞ்சீவராசனே - உன்னை
வந்தனை செய்து வழிபடுவோமே
அஞ்சனாசுதனே போற்றி
அனுமானே போற்றி
வாயு புத்திரனே போற்றி
ராம தாசனே போற்றி } 2

(மஞ்சந்....)

வெற்றிலை மாலைசாற்ற - நல்ல
வெற்றியைத் தந்திடுவாய்
துளசிமாலை போட்டா - வரு
துன்பங்கள் தீர்த்திடுவாய்
வடைமாலை அணிய - வந்து
தடைகள் தகர்த்திடுவாய்
வெண்ணெய் பூசினாலே - எங்க
வினைகள் போக்கிடுவாய்
கேசலிமைந்தா போற்றி
ராமநாமப்பிரியா போற்றி
மஹானுபவா போற்றி
மஹாபலியே போற்றி } 2

(மஞ்சந்....)

மணியின் வாலினாலே - ஐயா
சனியின் தோஷம் தீர்த்திடுவாய்
வானில் ஏறிவருவாய் - மெய்யா
வாட்டு துன்பம் போக்க - நீ
வாயுவாக வந்திடுவாய்
காலில் வீழ்ந்து வணங்க - ஓடி
காவல்தெய்வமாய் வருவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவ விஷ்வரூபா போற்றி
பஜிரங்க பலியே போற்றி
வீர அனுமந்தா போற்றி
ஆஞ்சநேயா போற்றி


} 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முனைக்காடு ஸ்ரீ மாரியம்பாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முனைக்காடு முத்துமாரி கும்மி

**தரு**

தானினம் தானினம் தானானம் - தனம் } 2
தானினம் தானினம் தானானம்

1. முத்தமிழ் செந்தமிழ் திக்கெட்டும் முழங்கு } 2
முத்தான முனைக்காடு கோயில் கொண்ட
முத்துமாரி கும்மிப்பாடல் பாட
கொட்டாம் புலைப் பிள்ளையார் காப்பாமே.

2. அன்னையே உன்னையே நம்பி நாங்கள் } 2
அன்புடன் ஆலயம் வாறோமம்மா
அம்பளவு விழியாளே உன்னை என்றும்
அடிபணிய அருள் அளித்திடம்மா.

3. ஆதிசிவன் உடல் மீது பாதியாகிய } 2
ஆற்றல் சேர் சக்தி மாரியம்மா
வேதனை தன்னை தீர்த்து என்றும்
வெற்றி தந்திட வந்திடம்மா.

4. இடரில்லா இன்பத்தை தந்திடம்மா } 2
இணையற்ற முனைக்காட்டு மாரியம்மா
வரம் வேண்டிக் கரம் கூப்ப வறியவர்க்கு
வாழ்வை வழமாக்கும் மாரியம்மா.

5. ஈடினை இல்லாத இன்னமுதே மாரி } 2
ஈகைக் குணக்குன்றே தாயே
ஈரந்தியும் உமைப்பணியுமெம்மை
ஈஸ்வரியே ஏற்றருள் செய்யுமம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. உருவத்தில் சிவசக்தி ஓங்கார நவசக்தி
ஒளியுட்டும் முத்து மாரியம்மா } 2
பருவங்கள் பல கொண்டு பாரினைக்காக்கும்
பாவையாளே எங்க மாரியம்மா.

7. ஊசியின் முனைதனிலே நின்று இந்த
உலகம் தனையே காப்பவளே } 2
ஆலத்தை குடித்தோன் தேவியாளே
அங்கயற் கண்ணியே மாரியம்மா.

8. எத்திக்கும் மறையாக ஏழையின் இறையாக
என்றுமிருந்திடு மாரியம்மா } 2
கருவுக்கு அருள்தரு உயிருக்கு உருதரு
கருமாரியே முத்து மாரியம்மா.

9. எண் திசையும் வென்றவளே முத்துமாரி
ஏகன் துணைவியாய் ஆனவளே } 2
கற்றவர்க்கு இனியவளே மாரி
கல்லாதோர்க்கு எளியவளே.

10. ஏழு பிறவித்துயர் தீர்த்திடுவாழ் மாரி
எம்மன்னை மடி தோன்றி அடி சேர } 2
செங்கமல மலரடி சேவிக்க
மெளுகாயுருகி அன்பாய் அணைப்பாள்.

11. ஏந்திழையே முனைக்காட்டு முத்துமாரி
ஏற்றமுறால நிழல் அமர்ந்து } 2
போற்றிப் பணிந்திடு அன்பருக்கென்றும்
நல்லருள் நாளுமே காட்டிடுவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. ஐயம் தெளிவித் தான்மையிருள் போக்கும்
ஐம் புலனடக்க ஆற்ற லளிக்கும் } 2
மெய்மையாளர் நிறை முனைக்காடுவாழ்
முத்துமாரியே வந்திடம்மா

13. ஐயம் தீர்க்கும் உயிர் மெய்ப்பொருளே
பையரவில் துயில் மாலின் சோதரியே } 2
ஐங்கரன் அன்னை ஆனவளே எங்கள்
மெய்யான முத்து மாரியம்மா.

14. ஒய்யார சிங்கார சிற்றாடை ஒயிலாய்
உள்ளத்தே உவகை ஊட்டுதம்மா } 2
ஒப்பற்ற அமுதமுக மொழியூட்டி
உலக மதனையே காக்குதம்மா.

15. ஓங்கார சுந்தரியான மாரிமுத்தே
ஒப்பில்லா தித்திக்கும் ஆரமுதே } 2
கற்பனை கடந்த கற்பகமே மாரி
காட்சி தர எம்முன் வாருமம்மா.

16. ஔவியத் தீயகம் பற்றாது காத்து
மெய்யன்புடை மெய்யடியவரை } 2
ஔவையே காத்து ஆதரித்து
பொய்மையை போக்கிட வந்திடம்மா.

17. குற்றம் பொறுக்கும் குணத்தாளே மாரி
குலச்சிறை காக்கும் கரத்தாளே } 2
சிங்கார வல்லி ரூபியான மாரி
சிவகாம சுந்தர ரூபத்தாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. சோதனைகள் வரும்போது வந்து அம்மா
வேதனை தீர்த்திடும் முத்துமாரி } 2
சொந்தமென வந்து தொழுவோர்க்கு
வந்து உதவிடு மாரியம்மா.

19. சௌக்கியமும் நீயே சௌபாக்கியமும் நீயே
சௌந்தரியம் தருதாயும் நீயே } 2
ஓதிடு வேத மந்திரமும் நீயே எழில்
ஒப்பில்லா உத்தமியாளே மாரி.

20. தோற்றாலும் ஜெயித்தாலும் வாழ்வுநீயே
தொழுதாலும் அழுதாலும் வடிவம் நீயே } 2
போற்றாத நாழில்லை தாயேயுன்னை
பொருளோடு புகளோடு வாழவைப்பாய்.

21. திசைகள் எல்லாம் புரிந்தவளே - மாரி
திரிபுர சுந்தரியானவளே } 2
தீந்தமிழ் சுவையாய் இனிப்பவளே
தீராத வல்வினை தீர்ப்பவளே.

22. நெய்தல் மருதம் குறிஞ்சி முல்லை
நால்வகை நிலம் நிறை முனைக்காடு } 2
முத்தமிழின் இசை சுற்றி எங்குமோங்க
வந்தமார்ந்திட்ட மாரியம்மா.

23. நெற்றியில் குங்குமம் நிலைக்க வேண்டும்
நெஞ்சில் உன்திரு நாமமினிக்க வேண்டும் } 2
கற்றதெல்லாம் மேலும் பெருக வேண்டும்
கவிதைகளில் உன் நாமம் வாழ வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. நேசித்துப் போற்றி நிக்கும் எங்கள்
நேச உயிர் மூச்சி நீயேயம்மா } 2
மாசில்லா மனத்தினாலே உன்னை
மாதாவே போற்ற வரம் தருவாய்.

25. மாயைகள் பற்றாமல் எங்களை நாளும்
மாரித்தாயே காத்திட வேணுமம்மா } 2
கூவியழைத்தோ முன் கோயில் வந்து
கோல விழியாலே பார்த்திடம்மா.

26. மாண்புறு தெய்வம் நீயல்லவோ மாரி
மாங்கல்யம் தருவதும் நீயல்லவோ } 2
காண்பது உன் பாத மலர்அல்லால் வேறு
காட்சிகள் இல்லையே மாரியம்மா.

27. மாசில்லா மனதாலுன்னை முனைக்காடு
மக்கள் போற்றுகின்றோம் அம்மா } 2
கேட்ட வரம் கொடுக்கும் மாரியாளே
கேண்மையோ டெங்கள் முன் வந்திடம்மா.

28. வேலனுக்கு வேல் கொடுத்தவளே மாரி
வேத நாயகி ஆனவளே } 2
வையகம் வாழ்விக்கும் அம்பிகையே
சௌந்திராம்பிகை முத்து மாரியம்மா.

29. மங்களம் மங்களம் மங்களமே
கொட்டாம் புலை பிள்ளையார்கு மங்களமே } 2
மங்களம் மங்களம் மங்களமே
தான் தோன் ரீசனுக்கும் மங்களமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. மங்களம் மங்களம் மங்களமே
முனைக்காட்டு கண்ணகைக்கு மங்களமே
மங்களம் மங்களம் மங்களமே
முத்து மாரியன்னைக்கும் மங்களமே.


தரு

தானினம் தானினம் தானானம் தனம்
தானினம் தானினம் தானானம்
தானினம் தானினம் தானானம் தனம்
தானினம் தானினம் தானானம்.

ஆக்கம்
ஆரையூர்அருள்
19.01.2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முனைக்காடு பிள்ளையார் முத்துமாரி

## காவடிப்பாடல்கள்

1. வழங்கள் நிறை வண்ணமுறு முனைக்காடு தன்னில்.
அழகுறு கொட்டாம் புலையிலிருந்து கொண்டுவந்த
பொலிவுறு கொட்டாம் புலை பிள்ளையார் மீதும்
ஆலமர நிழல்தனில் அழகான பந்தல் அமர்ந்த
அன்னை முத்துமாரி மீதும் காவடிப்பாடல் பாட
அழகு தமிழ் சொற்பூக்கள் வழுவாது தந்து காக்க....
வெண்பங்கய மலர்மீதமர் வாணி வந்துதவ....
கொட்டாம் புலை பிள்ளையாரே உன் பாதம் காப்பே....

2. அழகுறு கலைகள் வளர்க்கும் நிலைக்களமாம்
அருள் ஓங்கு காப்பு முனை முனைக்காடு தன்னில்
அண்ட பகிரண்டமெல்லாம் முதற் பொருளென்றும்
அந்தரத்தோரும் வந்தடி போற்றி நிற்கும்
அருள்மறைக்கும் திருமறைக்கும் ஆதியான
அரனாரின் மகனாயவதரித்தவரச்சுடைத்து....
அன்பர்கள் நிறை முனைக்காட்டில் ஆலயமமர்ந்து....
அருளாட்சிபுரி கொட்டாம்புலை பிள்ளையாரே....

3 அரியவனின் சோதியாய் ஆனதேவி மாரி
அன்னநடை மடவாரும் அகமகிழ்ந் தேற்றும்
அருமருந்தே அற்புதமே அகவிருள் போக்கும்
அருநோய்கள் வாராது அனுதினமும் காக்கும்
அறம் வளர்க்கும் அம்பிகை அன்னையாளே
அந்தமில்லாச் சொந்தமாய் அணைத்தாதரிக்கும்....
அன்றால நிழலின்கண் அமர்ந்த காப்புமுனை....
அன்னையே முத்துமாரித்தாயே பாதம் போற்றி....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ஆதிசிவனாரின் முக்கண்ணுடை மூத்த மைந்தா
ஆதிசக்தி மகனான அற்புத மூசிகனே
ஆடு மயில் வாகனனுக்கு வள்ளியை மணம்முடித்தாய்
ஆதிசைவ நெறி முறைகள் அழியாது காக்க
ஆகம அறநெறிகள் மறையாது மீட்க
ஆலின்கீழ் அமர்ந்த அன்னை மாரிமைந்தா....
ஆலயம் சுற்றிவந்தனு தினமும் பணிவோம்....
ஆதரிப்பாய் கொட்டாம்புலைப் பிள்ளையாரே.....

5. ஆரணத்தின் முற்பொருளாய் ஆன முத்துமாரி
ஆராதனை செய்யும் அன்பருக்கு அருளும் மாரி
ஆரணமே நூபுரமாய் கால்களில் அணியும் மாரி
ஆதிசிவன் அங்கமதில் பாதியான மாரி
ஆரணி காரணி ஆனந்தவல்லி ஆனமாரி
ஆதியரனார் மீதுமுத்தெறிந்து மீட்டெடுத்த மாரி....
ஆடுதுதிக்கை வேழமுகனின் அன்பன்னை மாரி....
ஆனந்த முனைக்காட்டில் அமர்ந்த மாரியே போற்றி...

6. இருவினைப் பயன் போக்கி யென்றும் எமையாண்டு
இகபர சுகங்கள் எந்நாளும் எமக்கு ஈர்ந்து
இல்லையினி ஒருதுன்பமென்று எடுத்துரைத்து
இன்னல் தீர்த்து இணையடியில் எமைச்சேர்த்து
இன்மைக்கும் மறுமைக்கும் இன்பமதை யளிக்க
இருமலர் பாதங்களை இறுகப் பற்றிடுவோம்....
இத்திரு பெருவடிவில் இல்லாத தொன்றுமில்லை....
இணையற்ற கொட்டாம்புலை பிள்ளையாரே போற்றி....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. இன்னல்களை என்றுமே இல்லாதொழிக்கும் மாரி
இரும்பு மனம் உருகி இழக வைக்கும் மாரி
இமையவரும் தொழுதேற்றும் இறைவியே மாரி
இருடிகளும் என்நாளும் போற்றும் அன்னை மாரி
இன்னல் போக்கும் இன்னமுதே முத்து மாரி
இட்டமுடன் இகபரசுகம் ஈர்ந்தருள் மாரி....
இணையீடு இல்லாத முனைக்காட்டி லமர்ந்த....
இன்பப் பேரமுதே தெள்ளமுதே முத்துமாரி.....

8. ஈவிரக்கமின்றி எத்தர்கள் இடரிழைக்கும் போது
ஈமத்தாடி மகனே எங்கள் முன்னோடிவந்து
ஈங்கண் தொடரும் வினைகளறுத்துக் காத்து
ஈடேற்றம் அளித்து எங்களை தூக்கி நிறுத்து
ஈஸ்வரி மைந்தனே ஏகதந்த முதல்வனே
ஈரந்தியும் உனைப்பணிவோம் ஏரம்பனே....
ஈகையில் சிறந்திட்ட முனைக்காட்டிலமர்ந்த....
ஈசனே கொட்டாம்புலை பிள்ளையாரே போற்றி....

9. ஈன சுரமறுக்க ஏலவார்க்குழலி இங்கினிது மேவி
ஈஸ்வரியே எங்கள் துயர் தீர்த்திடம்மா தாவி
ஈழநாடு எங்கும் கோயில்கொண்ட முத்துமாரி
ஈஸ்வரனாரோடு கூடி நர்த்தனங்களாடி
ஈரேழு உலகமும் ஆளும் தாயே மாரி
ஈனோர்கள் உன் திருவடியை நாளும் நாடி....
ஈடேற்றம் அடைந்திட வாரார்கள் ஓடி....
ஈர நெஞ்சோர்கள் வாழ் முனைக்காட்டு மாரி....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. உருகி உனை அழைத்தோம் உத்தமப் பிள்ளையாரே
உலகநாயகரே ஊரெல்லாம் செழித்திடச் செய்ய
உச்சிட்ட விநாயகரே உனதருளைக்காட்டிடையா
உன்பதமே தஞ்சமென்று ஊர்மக்கள் ஒன்றி நின்று
உன்தனாலயம் அனுதினமு மண்டிவந்தடி பணிகிறாரே
உதவிட மனமில்லையோ உருண்டி விநாயகரே....
உள்ளன் புநிறை முனைக்காட்டு கோயில் அமர்....
உத்தண்ட கொட்டாம்புலை பிள்ளையாரே....

11 உந்தன் மகன் கொட்டாம்புலை பிள்ளையாராலயத்தே
உறுதியாய் நின்ற அழகால மரநிழல் தனிலே
உன்னத பந்தலிட்டு அந்நாளில் ஊரவர்கள்
உத்தமியே ஒழுங்கான பூசைவழிபாடு தவறாது
உள்ளன்போடு இயற்றி வந்தகாலை மனம் மகிழ்ந்து
உறுதியுடன் பல அற்புதங்கள் நிகழ்த்தி வண்ணமுற...
உருவாகி அருவாகி உனர்வுகளும் ஆகி...
உள்ளதுமாய் அல்லதுமாய் முனைக்காடமர்ந்ததாயே....

12. ஊரோங்கு தொண்டு செய் ஊரவர் உத்தமர்க்கு
சமயத்தில் வரும் இன்னல் தகர்த்திடும் சக்தியானே
சஞ்சலம் நீக்கிச் செஞ்சுடர் காட்டிடும் குஞ்சரனே
ஊரது துன்பமற வாழ்வு மழைதரு மின்னளொளியானே
ஊழதால் பாவங்கள் செய்யாமல் பண்பாக்குபண்பாளனே
ஊக்கமுடன் கருணை பாகாகக் குழைத்து
பசிதீர்பவனே....
ஆறுதல் கூறி தேறுதல் தருகின்ற ஐயா ஐங்கரனே
வினைதீர்கும் சோலையாம் முனைக்காடு அமர்ந்த
விநாயகரே....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. ஊமனைப் பேச வைத்திடு வித்தகமுத்தான மாரிமுத்தே
இமயத்தில் பிறந்தாலும் இதயத்தில்வாழ்கின்ற இன்னமுதே
இல்லாமை இல்லாமல் எல்லோரும் வாழஎழுந்த எழிலரசே
கல்லார்க்கும் கருணை மழை பொழிகின்ற கற்பகமே
காவியத்தமிழ் நெஞ்சில் நின்று நிலைத்திடு கற்பரசியே
பூவரசி நாவரசி பாவரசி அருளரசி தாயரசியே....
பாமாலை பாடியே பூமாலை பலசூடும் பக்தர்கள் நிறை....
ஊரான முனைக்காட்டில் பேராக வீற்றிருக்கும் மாரித்தாயே....

14. என்றும் ஆறுதல் அருளும் ஆனைமுகமானவையா
எங்கள் ஆதி மூலப்பொருளே ஆலையடியமர்ந்தவரே
வந்த வினை அகற்றும் வல்லமை மிக்க கணபதியே
வழிகாட்டும் தெய்வமே நல்வரமளிக்க ஓடிவாய்யா'
சிந்தையிலே செம்மையுடன் சேவிக்கும் அடியவரை
சிறந்த அன்பர்களாய் கருதி துன்பதுயர் தீர்ப்பவரே...
தீதகல தேன்தமிழில் திகட்டாத பாமாலைதரு....
சீதள முனைக்காடு தேடியமர்ந்த விநாயகரே....

15. எக்கலா தேவியே ஏழைக்கிரங்கு ஏந்திழையே எங்கள்முன்
எல்லாமாய் ஈரேழு லோகம் எங்கும் நிறைந்தவளே
எல்லைக் காவல் புரிந்து என்றும் துயர் தீர்ப்பவளே
எத்திசையும் மஞ்சளோடு சந்தன சவ்வாது மணம்வீச
எண்ணமெல்லாம் எங்களுக்குன் நினைவுதானம்மா
எம்தாயே எங்கள் துன்பம்துயர் தீர்த்துக்காக்கும்
எல்லையில்லா ஆனந்தமே முனைக்காட்டுத்தாயே
எழிலரசே எழிலுருவெ எங்கமுத்து மாரியம்மா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. ஏனிந்தப் பிறவியென்று ஏங்கித் தவிக்கயிலே
ஏரம்பனே எங்கள் அருகில் வந்து கைகொடுத்து
ஏற்றமுற வாழ்வளிக்கும் எங்க ஞானசக்தி விநாயகரே
கோலமான பார்வதிகை மஞ்சளிலே உதித்தவனே
வேலவன் சகோதரனே வெவ்வினை தீர்ப்பவனே
ஆலையடி அமர்ந்த எங்க அன்னை மாரி தன்மகனே....
சீலமிகு நல்லோர் செறிந்த முனைக்காட்டு மக்களுக்கு....
காலமெல்லாம் கருணைபொழி கற்பகமாய் அமர்ந்தவரே....

17. ஏரோங்கு கழனிகளால் எழில் கொஞ்சும்
ஏலவார் குழலி அம்மை மஞ்சல் மணம்வீசும்
ஏந்திழையே உந்தனர்க்கு ஐந்து நாட்கள்
ஏற்றமுறச் சடங்கு செய்து ஆறாம் நாள்
ஏகதந்தன் தாயே ஆணிப் பூரணை யன்று
ஏற்புடனே திருக்குளுத்தி ஆடிக் குளிரவைக்க...
ஏற்றம் பெறச் செய்து இகபர சுகமளிக்கும்...
ஏழிசை நாத ஒலியே எங்கமுத்து மாரியம்மா....

18. ஐங்கரனே சங்கரியின் அருமை மைந்தா
ஆறுமுகவன் அண்ணனே ஆனை முகனே
சிங்காரப் பொழில் சூழ்ந்த முனைக்காடு மேவி
சிந்தை மகிழ்ந் தடியார்க் கருளுமையா
தூசியென துன்பங்களை துடைத்தெறியுமையா
தூமலரும் நீரும் கொண்டு துதித்தோம் துணைபுரி....
எளியவர்க்கு மிரங்கி யருள இக்கணம் விரைந்து....
எழுந்தோடி வரவேண்டும் கொட்டாம்புலை பிள்ளையாரே...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. ஐயையே உந்தனற்கு சடங்கு செய்யும் போது
ஐம்புலனடக்கி அருள்மறை மந்திரங்க ளோதி
ஐந்து நாட்கள் அதிகாலை மதியச்சடங்கும்
ஐயுற காத்தானை களுமரத்தில் கட்டி
ஐம்முகன் தேவி தவநிலையில் திருக்கம்பம் ஏற
ஐந்தாம் நாள் தீமிதிப்பும் காலை திருக்குளுத்தியும்
ஐக்கியத்தோ டாலையடி வைரவர்க்கு பலி கொடுத்து
ஐயமற பள்ளையமும் கொடுக்க வருள்வாயம்மா.

20. ஒற்றுமை என்றும் வளர உரிமையுடன் மக்கள் வாழ
ஒப்பில்லா அருளாள முக்கணனுடை கணபதியே
அங்குசம் கையேந்தி அசுரர்களை அடக்கியவா
பொங்கு கலைநிறை கானலோல ஐங்கரனே
திங்கள் இளம்பிறை போல் மருப்பொன் றொடித்து
திகழ்மேரு பாரதம் எழுதியளித்த தீரா....
கிங்கினி தண்டை கிளர்ந்தொலிக்க ஆடும்....
கிருபைமிகு கொட்டாம்புலைப் பிள்ளையாரே....

21. ஒருமை மகளே நாங்களுன் பதிதேடி ஓடி
ஒருமனத்தோ டிசைந்துவாடி உருகி வாறோம்
ஒட்டலர்கள் செய்கொடுமையிலிருந்து காக்க
ஒளிமரமாய் எங்கள்முன் வந்து நின்று
ஒருவினையைத் தீர்த்து அருள் தந்திடம்மா
ஒளியூட்டும் தேவியே ஒப்பற்ற மாரியே....
ஒற்றுமையாய் முனைக்காட்டு மக்கள் சடங்குசெய்வார்....
ஒளிவீசும் மல்லாந்த கண்ணழகி மாரித்தாயே....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. ஓம் எனும் பிரணவ உட்பொருளான ஐங்கரனே
ஓம் சக்தி உருவந்து பயந்த ஒப்பற்ற அற்புதனே
கந்தனுக்கு முன்வந்து கனிபெற்றக் களித்தவனே
தந்தை தாய் உலகமென்று தரணியறியச் செய்தவனே
மத்தள வயிற்று வித்தக வினோத மங்கள கணபதியே
உத்தம ஞான குணாள குஞ்சரக் குகநிதியே....
பந்தமறுத்திட சிந்தைவைத்து வந்தடிபணிந்து நிற்கும்...
சுந்தர முனைக்காடு வந்தமர் தந்திமுகனே போற்றி....

23. ஒக்கமான பொருளும் நீ ஒழுகி சொற்சுவையும் நீ
ஒப்பற்ற சொர்க்கத்தை காட்டிடும் சொர்ணம் நீ
ஓச்சம் மிகு சங்கம் வைத்து தமிழ் வளர்த்த சங்கரியே
ஓவிய பொற் பாதங்களில் சிலம்புங் கொஞ்ச
ஓராங்கு அம்மை நோய் ஊரைவிட்டே ஓட
ஓடிப்பரவசமாய் வந்தமர்ந்து அருள் செய்தாயே....
ஓராட்டுப் பாடி உன்னை மகிழ்விப்போமம்மா....
ஓதவனம் தாண்டி வந்தருள் முத்து மாரியம்மா....

24. ஔதடமாய் இருந்தென்றும் ஊரைக் காத்திடுவாய்
ஔவிய நோயகற்றி எமை அணைத்துமே ஆள்வாய்
காடுமலை கழனி எல்லாம் உந்தன் கருணையாலே
கனகமணி நெல் பொலிய வைக்கும் கனகத்தானே
வாடுமுயிர் வல்வினைகள் போக்கி நாழும் நல்ல
வளமான வாழ்வளித்து வாழவைக்கும் வக்ரதுண்டா...
பாடுந்தமிழ் மறையோங்கு முனைக்காட்டினிலே....
நாடி வந்து கோயில் கொண்ட நற்குஞ்சரனே போற்றி...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. ஔடதம் அவவருளே ஆணவப்பிணி தீர்க்கும்
ஔவைக்கும் ஔவையான ஆத்தா முத்து மாரி
பம்பை ஒலி கேட்டதுவும் கரகமதிலாடிவருவாய்
செந்தமிழால் பதிகம் பாடிட முத்தியது தருவாய்
மருள் நீக்கு மகரச்சோதி மங்களாங்கி மாதங்கி
அருள்ஓங்கு கும்பத்தில் வந்தமரன்னை மாரி
முந்து வினை போக்க முனைக்காடு வந்து அமர்ந்த
முத்துமாரியே உன்தன் பாதம் என்றும் போற்றியாமே.

அரும்பதம்
ஐயுற - வியப்புற
ஒளிமரம் - சோதிவிருட்சம்
ஒருமைமகள் - கற்புள்ளபெண்
ஒல்லார் - பகைவர்
ஒருவினை - தீராதகவலை
ஓராங்கு - ஒன்றுசேர
ஔவை - தாய்

*19.01.2017*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முனைக்காடு முத்துமாரி தாலாட்டு

ஆராரோ ஆராரோ ஆரிராரிரோ
தாலேலோ தாலேலோ தாலிலாலிலோ - தாலிலாலிலோ...

1. முனைக்காட்டில் கோயில் கொண்ட முத்துமாரி
முன் வந்து காத்திடம்மா முத்துமாரி
நினைக்கும் தோறும் நெஞ்சமெல்லாம் முத்துமாரி
இனிக்கின்ற அன்னையல்லோ முத்துமாரி
(ஆராரோ)

2. அன்பருக்கு அன்பானவளே முத்துமாரி
அருள் அளித்து காத்திடவா முத்துமாரி
அன்புருவே அருள் வடிவே முத்துமாரி
அன்னையே முன் வந்திடம்மா முத்துமாரி
(ஆராரோ)

3. ஆலமர நிழலமர்ந்த முத்துமாரி
ஆலமுண்டோன் பாரியாளே முத்துமாரி
ஆதி லெட்சுமி ஆனவ நீ முத்துமாரி
ஆற்றல் அளி அன்னை சக்தி முத்துமாரி
(ஆராரோ)

4. இலங்கிடு முனைக்காட்டினிலே முத்துமாரி
இஷ்டமுடன் அமர்ந்தவளே முத்துமாரி
இலம்போதரன் அன்னையாளே முத்துமாரி
இமையத்தில் பிறந்தவளே முத்துமாரி
(ஆராரோ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. ஈகை, தயை, ஞானம் தரும் முத்துமாரி
ஈஸ்வரனார் தேவியாளே முத்துமாரி
ஈரமனக் காரியாளே முத்துமாரி
ஈரேழுலக மாள்பவளே முத்துமாரி
(ஆராரோ)

6. உபேந்திரன் சோதரியே முத்துமாரி
உத்தண்ட பைரவியே முத்துமாரி
உலகுய்ய அருள்சுரக்கும் முத்துமாரி
உடுக்கொலியில் ஒலிப்பவளே முத்துமாரி
(ஆராரோ)

7. ஊதாரிக்குண முடையவரை முத்துமாரி
ஊரைவிட்டுத் துரத்திடம்மா முத்துமாரி
ஊர்கூடித் தொண்டு செய்ய முத்துமாரி
ஊழ்வினை அறுப்பவளே முத்துமாரி
(ஆராரோ)

8. எக்கால தேவியாகி முத்துமாரி
எத்திக்கும் ஆள்பவளே முத்துமாரி
எண்ணிய எண்ணமெல்லாம் முத்துமாரி
என்றும் ஈடேற்றி வைப்பவளே முத்துமாரி
(ஆராரோ)

9. ஏலங்குழ லுமையாளே முத்துமாரி
ஏகாந்த ரூபியாளே முத்துமாரி
ஏழையெங்கள் துயர்துடைக்க முத்துமாரி
ஏனின்னும் தாமதமோ முத்துமாரி
(ஆராரோ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. ஒற்றுமையாய் ஊர்கூடி முத்துமாரி
ஒன்றிணைந்து சடங்குசெய்வார் முத்துமாரி
ஒன்றாகிப் பலவாகும் ஒப்பிலியே முத்துமாரி
ஒல்காத புகழ் நல்கிடவா முத்துமாரி
(ஆராரோ)

11. ஓம்கார ரீங்கார முத்துமாரி
ஓதினோம் உன்தன் நாமம் முத்துமாரி
ஓச்சம் மிகு உத்தமியே முத்துமாரி
ஓடி வந்து காத்திடம்மா முத்துமாரி
(ஆராரோ)

12. ஔவியம் ஆட்கொள்ளாமல் முத்துமாரி
ஔடதமாய் வந்திடம்மா முத்துமாரி
ஔவித்த குண மகற்றவேண்டி முத்துமாரி
ஔவையேயுன் சன்னிதி வாறோம் முத்துமாரி
(ஆராரோ)

13. கரகம் எடுத்தாடி வாறோம் முத்துமாரி
கருணை மழை பொழியவாம்மா முத்துமாரி
கருவாகி உருவாகி காசினிமேவு முத்துமாரி
கந்தமலர் குழலியாளே முத்துமாரி
(ஆராரோ)

14. காரணியே தாரணியே முத்துமாரி
காதலாகி கசிந்துருகி முத்துமாரி
கார்மழையாய் கண்ணீர்சிந்தி முத்துமாரி
காத்திட வேண்டி வாறோம் முத்துமாரி
(ஆராரோ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. கிண்ணவர் கிம்புருடர் போற்றும் முத்துமாரி
கிங்கினி தண்டை யலம்ப முத்துமாரி
கிருவை காட்ட வந்திடம்மா முத்துமாரி
கிருஸ்ண வண்ணன் தங்கையாளே முத்துமாரி
(ஆராரோ)

16. கீர்த்தி நிறை உத்தமியே முத்துமாரி
கீதநாதன் சகோதரியே முத்துமாரி
கீழோரை மேலோராக்கும் முத்துமாரி
கீர்த்தனைகள் பாடி வாரோம் முத்துமாரி
(ஆராரோ)

17. குஞ்சரத்தோன் அன்னையாளே முத்துமாரி
குவலயத்தை ஆள்பவளே முத்துமாரி
குலம்விளங்கு முனைக்காட்டு முத்துமாரி
குற்றம் குறை பொறுத்தருள்வாய் முத்துமாரி

(ஆராரோ)

18. கூர்மதியே குறையாநிதியே முத்துமாரி
கூப்பிக் கரம் குவித்தோம் முத்துமாரி
கூத்தனுடன் ஆடுபவளே முத்துமாரி
கூப்பிட்டோம் வந்திடம்மா முத்துமாரி
(ஆராரோ)

19. கெடுதிசெய் தீயோரையும் முத்துமாரி
கெடுப்பாரையும் கெடுத்திடும் முத்துமாரி
கெழுவுடனே உமைப்பணிந்தோம் முத்துமாரி
கெடலூழ் போக்கிடவா முத்துமாரி
(ஆராரோ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. கேவலப்படுத்துகிறர் எம்மினத்தை முத்துமாரி
கேட்கலையே உன்செவிக்கு முத்துமாரி
கேட்கும் வரமளிக்க முத்துமாரி
கேண்மையுன் வந்திடம்மா முத்துமாரி
(ஆராரோ)

21. கைலயங் கிரிவிட்டு முத்துமாரி
கைகூப்புகிறோம் காத்திடவா முத்துமாரி
கைங்கரியம் செய் முனைக்காட்டார்க்கு முத்துமாரி
கை கொடுத்து காத்திடவா முத்துமாரி
(ஆராரோ)

22. கொன்றை வள்ளல் சோதரியே முத்துமாரி
கொடுங்கோன்மை யகற்றிடம்மா முத்துமாரி
கொற்றவர் கொடுமை கண்டு முத்துமாரி
கொலுவிட்டிறங்கி காத்திடவா முத்துமாரி
(ஆராரோ)

23. சிங்க கோளரி வாகனமேறு முத்துமாரி
கோபாலன் தங்கையாளே முத்துமாரி
கோடான கோடி மக்களுக்கு முத்துமாரி
கோரிடு வரமளிக்க வந்திடம்மா முத்துமாரி
(ஆராரோ)

24. கௌரி சிவகாமியாளே முத்துமாரி
கௌனியற்கு பால் சுரக்கவைத்த முத்துமாரி
கௌசிக வேதப்பிரியன் பாரியே முத்துமாரி
கௌரித்தாயே காத்திடவா முத்துமாரி
(ஆராரோ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முனைக்காட்டு வீரபத்திரர்

## வரலாற்று கும்மிப்பாடல்கள்

தரு

தானினம் தானினம் தானானம் - தனம்
தானினம் தானினம் தானானம்
தானினம் தானினம் தானானம் - தனம்
தானினம் தானினம் தானானம்

தரு

1. பார்புகழ் முனைக்காட்டின் தெற்கே - வந்து
நேர்த்தியாய் கோயில் கொண்டமர்ந்து
சீர்புகழ் வீர பத்திரர் கும்மி பாட
கார்நிறக் கணபதி காப்பாமே

2. பாண்டிய மன்னனின் காலத்திலே - தான்
தோன்றீஸ்வரர் தேரோட்டத்தின்பின்
வேட்டையது விரும்பியே யாடிட
வீரபத்திரராலயம் வருவார்

3. பண்டைய காலப் பழம்பதிதா- னிது
மட்டுநகரின் முதல்பதிதான்
மண்முனைதென் மேற்கினிலே
உண்மையிலுள்ள வொருபதிதான்

4. எண்ணூறு ஆண்டுகளுக்கு முன் - வந்த
தொன்மைப்பதி யிதுவென்று
வஞ்சியரே வந்தவர் பதியில்
சொல்லி கும்மியாடுங்கடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. கொக்கட்டியீசர் கோயிலுக்கு - மிந்த
வீரபத்திரர் கோயிலுக்கும்
தந்தைமகனுற வென்பதை - இந்த
தாரணிக் கெடுத்தோதுங்கடி

6. என்று தேரோட்டம் தொடங்கியதோ
அன்றிருந் தின்றுவரைதிரு
வேட்டையாடுதலமிந்த
வீரபத்திர ராலயமே

7. மட்டுநகர் மன்னன் தருமசிங்கனின்
சித்திரதேருட்சவம் முடிய
கொக்கட்டிநாதர் திருவேட்டைக்கு
தித்திக்க முனைக்காடு வருவார்

8. கண்டிமன்னன் விமலதர்மசூரியன்
வந்து திருவேட்டையோடு
குடுக்கை கூறும் நிகழ்கண்டு
குதூகலித்ததை கூறுங்கடி

9. கந்தப்பர் கணபதியார் வீரபத்திரர்
பந்தலைப் பராமரித்து வந்த
நீண்ட வரலாறுகொண்ட முனைக்
காட்டு வீரபத்திரன்டி

10. இருவரும் பந்தல் அருகினிலே
பெருமனத்தோடு கொட்டுப்பதித்து
அருந்துவதற்கான நீர்வசதியை
சிறந்திட செய்து கொடுத்தனரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. இவர்கள் பரம்பரை தொடர்ந்து
இவ்வாலயத்தை நிருவகிக்க
கந்தப்பர் பேரனாறுமுகம்
கந்தப்போடி கல்கிணறு கட்டினனே

12. ஆலயத்தின்முன் ஓரேக்கர் நிலம்
வேளாண்மை செய்து விளைவை
கணபதியார் நல்லதம்பி வீர
பத்திரருக்கேவற்பணித்தார்

13. ஆயிரத்து தொளாயிரத்தெம்பதில்
ஆர்வமோடு முனைக்காட்டு மக்கள்
நிருவாக சபைதனையமைத்து
நிருவகித்து வருகின்றனரே

14. ஆண்டாயிரத்து தொளாயிரத்து
அறுபத்தைந்தில் வைரமுத்து
சின்னத்தம்பி மூலஸ்தானமதை
சிறப்பாய் கட்டி முடித்தாரே

15. அர்த்த மகா மண்டப வாஞ்சநேயர்
சித்திவிநாயக நாகதம்பிரான்
ஆதி, சுடலை வைரவர்க்கும் பரி
பாலனசபை கோயிலமைத்ததுவே

16. இரண்டாயிரத்து பதினொன்றதனில்
ஊர்கூடி ஒற்றுமையாய்
வீரபத்திரர்க்கும் காவல்தெய்வத்திற்கும்
கும்பாபிடேகம் செய்தனரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. அன்றுதொட்டு இன்றுவரை - இங்கு
ஆனிமாத பூரணையையடுத்து
ஐந்து நாட்கள் சடங்கு - விசேட
பத்ததிமுறைப்படி நடக்கும்

18. முதலாம் நாள் திருக்கும்பம் வைக்க
இரண்டாம் நாளின் முகத்தோடு
சித்திவிநாயகர் கண்ணகை - முத்து
மாரியாலயங்களிலிருந்தும்

19. கொட்டாம்புலைப் பிள்ளையார் நாக
லிங்கேஸ்வர ராலயம்
எங்குமிருந்தும் மகரதோரணங்கள்
எடுத்து வந்து கட்டிடுவார்

20. மகரதோரணச் சடங்கதிங்கே
மாண்புடன் காண்போர் கண்கவர
பாந்தமுடன் முனைக்காட்டு - மக்கள்
நேயமுடன் செய்து முடிப்பார்

21. மூன்றாம் நாள் சடங்கு முடித்து
பாங்காய் வீதியூர்வலம் வர
வீதிதோறும் வேப்பிலைக்கும்பங்கள்
பூத்துப் புதுப்பொலிவளிக்கும்

22. நாலாம்நாள் பகலிரவுச் சடங்கு
கோலாகலமாக நடக்க
நாலாபக்கமிருந்து மடியார் -இங்கே
கூட்டமாக வந்திடுவார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. கண்ணைப்பறிக்கும் வண்ணமிங்கே
எண்ணற்ற வடியார்கள் கூடி
கற்பூரச்சட்டி காவடி யங்கப்
புரதட்சணையுமெடுத்திடுவார்

24. மாரியம்பா ளாலயத்திருந்து - பக்தி
பூர்வமாய் தீக்கட்டை யெழுந்தருளி
தீமூட்டித் தீப்பாய வேராளமான
பக்தரைந்தாம் நாள் கூடிடுவார்

25. ஆறாம் நாள் காலை சதுர்த்தியில்
நேர்த்தியாய் பள்ளயச் சடங்கும்
அமாவாசையிலே கும்பமும் சொரிந்து
சர்க்கரையமுதும் செய்திடுவார்

26. நாள்தோறும் சடங்கு வேளையிலே
நாககன்னி அநுமன் வீரபத்திரர்
வீரமாகாளி ஆதி, சுடலை வைரவர்
தேவாதிகளு மாடிடுவார்

27. ஆடியடியவர் அனைவருக்கு - மங்கே
வேண்டிடு வாக்குகளுரைத்து
நோய்பிணிகள் அகன்றிடவப்போ
மாமருந்து மளித்திடுவார்

28. ஆண்டு தோறும் பத்ததிமுறைப்படி
வீரபத்திரருக்குச் சடங்கும்
நாள்தோறும் ஆகம முறைப்படி
பூசைகளும் நடக்குது இங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. சுடலை நடமாடி சங்கரன் - மகன்
சுடலையருகே சங்கார
வீரபத்திராய் வந்து அமர்ந்து
ஓங்கு அருளாட்சி புரிகின்றார்

30. மட்டக்களப்பு மாவட்டத்திற்குமிந்த
பட்டிப்பளைப் பிரதேசத்திற்கும்
உள்ள ஒரேயொரு வீரபத்திரராலயம்
என்று எல்லோரு மிங்கே வாறார்

31. அரனார் நெற்றி வியர்வையில் தோன்றி
உரமுந்து தக்கன் யாகமழித்து
திறமுடன் முனைக்காட்டிலமர்ந்து
உறவுட னூரைக் காத்திருக்கார்

32. உகார வீரபத்திரண்டி - அவன்
அகோர வீரபத்திரனுமாம்
சிகார சங்கரன் மைந்தனடி - தினம்
வீரபத்திரனைப் பணிவோமடி

33. மங்களம் மங்களம் மங்களமே
சித்திவிநாயகருக்கும் மங்களமே
மங்களம் மங்களம் மங்களமே
கொட்டாம்புலை பிள்ளையார்க்கும் மங்களமே

34. மங்களம் மங்களம் மங்களமே
தான்தோன்றீசருக்கும் மங்களமே
மங்களம் மங்களம் மங்களமே
முத்துமாரி கண்ணகைக்கும் மங்களமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. மங்களம் மங்களம் மங்களமே
நாகலிங்கேஸ்வரருக்கும் மங்களமே
மங்களம் மங்களம் மங்களமே
வீரபத்திர சுவாமிக்கும் மங்களமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முனைக்காட்டு வீரபத்திரர் காவியம்

**தரு**

தந்தன தனாதனன னானதன னானா
தனனா தனா தந்த னாதந்த னானா
தந்தன தனாதனன னானதன னானா
தனனா தனாதந்த னாதந்த னானா

**காப்பு**

1. மண்முனை தென்மேற்குப் பிரதேசம் தன்னிலே
தொன்மையான முனைக்காட்டின் தெற்கே
கொக்கட்டிச் சோலை தான்தோன்றீச்சர தேரோட்ட
வக்கால மிருந்து திருவேட்டையாட வரு
வம்மிமர தலவிருட்சம் வந்து அமர்ந்த
இந்துக்களின் காவல் தெய்வமாய் விளங்கு
சுந்தர வீரபத்திரர் காவியம் நான்பாட
நற்குஞ்சரக் கணபதி பாதம் காப்பாமே

2. காப்புமுனை முனைக்காட்டை கருணை மனதோடு
காத்திடவென்று கருதிக் கோயில்கள் கொண்டு
நேர்நிருதி மூலையில் வாகாய் தான்தோன்றீஸ்வரரும்
ஊர் எல்லைகள் தோறுமுறு துணைபுரிந்து
வாயுதன்னில் கொட்டாப் புலைப் பிள்ளையாரும்
காளி கண்கண்ட நாகலிங்கேஸ்வரரும்
மாரி கண்ணகையோடு வீரபத்திரவையா நீ
நேர்த்தியாயமர்ந்து காத்தருள் புரிகின்றாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. புரிந்திட வுன்பெருமை நானெடுத் துரைக்க
அறிந்தவரை அவதார மகிமை சிறக்க
திரிபுரமூர்த்தி சிவபெருமான் தன்னை
தவவலிமையால் தக்கன் மருமகனாக்கி
அரிய யாகமதில் அவர்க்கவி பாகம் மறுத்து
உரியமகள் தாட்சாயினி மருமகனையுமொறுத்து
பெரிய வேள்விக்கு மற்றய தேவர்களை யழைக்க
அரன் நெற்றி வேர்வையிலுதித்த தீர வீரனே

4. வீரபத்திர தேவனென்ற நாமத்தோடங்கே
சோதியா யெழுந்து சுடரொளியாகி
ஆயிரம் சிரசோ டீராயிரம் கரமதுமாகி
வாளோடு சக்கர திரிசூலம் தாங்கி
ஈரயிநூறு பாணமும் கைகளிலேந்தி
வேலோடு சங்கு கண்ட கோடலியும் தூக்கி
கூர் கொங்கை மங்கை பத்திரை யோடு
ஆங்கார வீரபத்திரனாய் தோன்றினாயே

5. தோன்றியே நின்ற வீரபத்திரனுனை நோக்கி
தான்தோன்றித் தனமாய் தக்கன் தானும்
வேண்டு மென்றே யென்னபி பாகம் மறுத்து
தேவர்களை யெல்லாம் தெண்டனிட்டழைத்து
ஆணவம் கொண்டு செய் வேள்வியை அழித்து
வேகமதாக மீண்டு வாருங்களென மொழிந்து
போக விடை கொடுக்க வேகமாய்ப் பறந்து
காளிகூளி பூதவேதாளமொடு சென்றாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. சென்று நீங்கள் யாகசாலையைச் சுற்றி
நின்றநிலை கண்டு நிலைதடுமாறித் தேவர்
அத்திமாமுகவன் பெருவயிற்றிலே நீ குந்த
தும்பிக்கையான் தம்பி மயூரமேறிப் பறக்க
மெய்வருந்த தெய்வேந்திரனை யடிக்க
அன்னவர் கலங்க வயன் கன்னத்திலறைய
கார்வண்ணக் கண்ணன் கடுகிபோர் பொருத
நேரிடை பொருதிய வீர சுரனே

7. வீரமது கண்டு வெதும்பி மனம் கலங்கி
ஓடநினைத்த குறுமுனி அகத்தியரை
நேரான தண்டினால் பேராயடித்து
பானுவைப் பற்றி பதைத்திட வுதைத்து
வேணு மென்றே சந்திரனை தரையிலே தேய்த்து
வேங்கையைக் கண்ட முயல்போல பாய்ந்து
ஈர்நான்கு திசைகளிலு மற்றோரோடி ஒளிய
பேரார்வத்தோடு நீ போர்பொருதிவென்றாயே

8. வென்றிட்ட உன் வெற்றி கண்ட தக்கனை
வெறிகொண்டு வீரமணித் தண்டையெடுத்து
ஓங்கியடிக்க ஓதரிய வில் மார்பைத் துளைக்க
வேகமுடன் சென்று தக்கன் சிரமதை யறுக்க
காளி கூளி கலங்க கடும் கொலைபுரிந்து
வேள்வியில் தக்கன் சிரமதை யெரித்து
யாகவேள்வி காத்தோர்களையும் அரிந்து
கோபாக்கினி கொண்டு கூத்தாடி நின்றாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. நின்ற நிலை கண்டு உன்னுடன் கண்ணனவன்
வந்து சமர்பொருதி நிற்கமுடியாது
வானிலே கருடன் மேல் ஏறிப் பறந்து
ஏற்ற சரங்கள் எய்யக் கண்டவர் கலங்கி
சக்கரம் தன்னை கையில் எடுத்து
சீக்கிரம் சென்று வென்று வாவென்ன
காத்திடச் சிவனாகும் விடையேறி வரவே
கார்வண்ணன் சக்கரத்தை மீளப்பெற்றாரே

10. மீளவரன் வீரபத்திரனை விருப்போடழைத்து
யாகத்தி லிரந்தோரை அழைத்து வாவென்றார்
வீரனழைக்க தேவர்முனி மன்னர் மீண்டெழுந்து
மாடேறு மீசன் மலரடி பணிந்தார்
சந்தோஷமாக சகலரோடு தக்கனையும்
உங்கள் உங்கள் பதிக் கேகுங்க ளென்றும்
வீரபத்திரனையும் காளியையுமழைத்து
நேராக நீங்கள் புவி செல்லுமென்றாரே

11. சென்றுமே இருவரும் புவிமீதிருந்து
பொங்கல்மடை பெலிபூசைகளுகந்து
பொற்புடன் மானிடர் வினைகள் அகற்றி
நற்புடன் நாளும் காவலாயிருமென்று
உற்ற சிவனாரு முறுதியாக வுரைத்து
நல்லாசிகூறி நலமோடு விடையளித்து
பரமனார் பார்வதியுடன் விடைதனிலேயேறி
கயிலங்கிரிதனை நோக்கியே சென்றாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. சென்றவுடன் வீரன் திருமுக மிலங்க
நன்றாக நெற்றியில் திருநீறு விளங்க
சீர்பெறு சடைபுனை சிவதாலடமும்
பார்புகழ் கையிற் பதிந்திடு வாளும்
பாதம் புனையப் பலவொலிச் சிலம்பும்
பீதாம்பரமும் பிடித்த கைச் சூலமும்
பிடிப்புடன் வீரபத்திரர் மேவி வந்து
முனைக்காட்டு தெற்கில் கோயிலமர்ந்தாரே

13. அமர்ந்திட்ட செய்தி திக்கெட்டும் பரவ
மட்டக்களப்பின் முதல் கோயி லிதுவென்று
பட்டி தொட்டியிலுள்ள பலரும் மகிழ்ந்து
பட்டிப்பளைக்கே புகலிக் கோயிலென்று
நட்புடன் நாலா திசைகளிலுமிருந்து வந்து
பொற்புடன் அவரை போற்றி நிற்க
தப்பாது அனைவரையும் அவரரவணைத்து
எப்போதும் அருளாசியளித்துக் காத்திருக்காரே

14. காப்பது கடன் என்று கருதியடியவர்கள்
நேர்த்தியாக பொங்கலோடு வட்டாமடைவைத்து
ஆண்டு உற்சவத்தின்போது அனைவரும்
வேண்டுதல் நிறைவேற வேண்டியிங்குவந்து
தீமிதித்து தீங்குகள் தீர்ந்திட மகிழ்ந்து
வீரபத்திரனார் கருணையில் திளைத்து
நேசமுடன் மகிமையுற உறவினர்க்குரைத்து
பாசமுடன் பாதுகாத்தாய் வீரபத்திரரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. கொட்டாம்புலைப் பிள்ளையார் வாழி
கொக்கட்டிச் சோலையுறை சுயம்புலிங்கர் வாழி
முனைக்காடு தன்னிலே கோயில் கொண்டிருக்கு
சித்திவிநாயகர் கண்ணகை வாழி
இணையற்ற நாகலிங்கேஸ்வரர் வாழி
துணையாக விருக்கும் முத்துமாரிகாளி வாழி
அணையாத சோதியாக விளங்கியொளி வீசும்
அன்பான வீரபத்திரர் வாழி வாழியவே

*2019.07.19*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரித்திச்சேனை மீனாட்சியம்பாள்

# தாலாட்டு

**தரு**

ஆராரோ ஆராரோ ஆரிராரிரோ
தாலேலோ தாலேலோ தாலிலாலிலோ! தாலிலாலிலோ! } 2

1. பரித்திச்சேனைக் கோயிலுறை மீனாட்சியம்மா
பரிதியதாய்ப் பரிணமிக்கும் மீனாட்சியம்மா
அரியகலை வித்தகியாளே மீனாட்சியம்மா
அரிராமன் சகோதரியே மீனாட்சியம்மா

2. அக்கினியாக உற்பவமே மீனாட்சியம்மா
வினைபோக்கும் வித்தகியே மீனாட்சியம்மா
காஞ்சனைமாலை மடிதவழ்ந்த மீனாட்சியம்மா
மலையத்துவச பாண்டியன் மகளே மீனாட்சியம்மா

3. ஆயகலைகள் அதிபதியாளே மீனாட்சியம்மா
நேயம் நிறை அரசியாளே மீனாட்சியம்மா
மாயவனார் தங்கையாளே மீனாட்சியம்மா
தூய பரித்திச் சேனையுறை மீனாட்சியம்மா

4. இன்னிசையாய் இனிப்பவளே மீனாட்சியம்மா
இந்திரனை எதிர்த்தவளே மீனாட்சியம்மா
முகக்களை வைத்து வழிபடடவர் மீனாட்சியம்மா
அழகிப்போடி பொன்னம்பலம் மீனாட்சியம்மா

5. ஈஸ்வரனார் தேவியாளே மீனாட்சியம்மா
ஈடிணைற்ற ஈஸ்வரியே மீனாட்சியம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமதுரை ஆண்டவளே மீனாட்சியம்மா
மாதுவுமை நீயல்லவோ மீனாட்சியம்மா

6. உந்தன் எழில் கண்டல்லவோ மீனாட்சியம்மா
சொக்கநகர் சொக்கிநின்றார் மீனாட்சியம்மா
பச்சைக்கிளி தோளமர்ந்து மீனாட்சியம்மா
கொச்சைமொழி பேசுதுவே மீனாட்சியம்மா

7. ஊரவர் ஒன்று கூடியல்லோ மீனாட்சியம்மா
உனக்காலயம் அமைத்தனரே மீனாட்சியம்மா
வீரவால வேம்பு நிழலினிலே மீனாட்சியம்மா
வீற்றிருக்கும் அன்னையல்லோ மீனாட்சியம்மா

8. எழில் கொண்ட பரித்திச்சேனையிலே மீனாட்சியம்மா
ஏற்றம் கண்ட கோயில் கொண்ட மீனாட்சியம்மா
தீயினிலே பிறந்தவளே மீனாட்சியம்மா
தீராத வினை தீர்ப்பவளே மீனாட்சியம்மா

9. ஏகதந்தன் அன்னையாளே மீனாட்சியம்மா
தீக்கனலாய் தீமைகளைந்து மீனாட்சியம்மா
பாவிகளின் பகை முடிக்கும் மீனாட்சியம்மா
பாரெங்முன் ஆட்சிதானே மீனாட்சியம்மா

10. ஐயம் அகற்றி யருள்பளே மீனாட்சியம்மா
தையலுமை மாதுமையே மீனாட்சியம்மா
அதர்ம மளிக்கு மம்பிகையே மீனாட்சியம்மா
தர்மம் காக்கும் தாயவளே மீனாட்சியம்மா

11. ஒற்றுமையே டூரவர்கள் மீனாட்சியம்மா
என்றுமுனைப் பணிகிறாரே மீனாட்சியம்மா
அகிலம் செளித்திடவே மீனாட்சியம்மா
வலம்வந்து காப்பவளே மீனாட்சியம்மா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. ஓங்கார சக்தியாளே மீனாட்சியம்மா
ஆங்காரம் அகற்றியாளும் மீனாட்சியம்மா
பாங்கான பரித்திச்சேனையிலே மீனாட்சியம்மா
நீங்காது நிதமிருப்பவளே மீனாட்சியம்மா

13. ஔவியம் அகற்றி யாளபவளே மீனாட்சியம்மா
பௌவியமாய் பாதம் பணிந்தோம் மீனாட்சியம்மா
நௌவி விழி நாயகியாளே மீனாட்சியம்மா
கௌவிடாது தீதகற்றிடம்மா மீனாட்சியம்மா

14. கருப்பூரச் சட்டியேந்தி மீனாட்சியம்மா
கன்னியர்கள் வருகிறாரே மீனாட்சியம்மா
உன்பதி நாடி வாறோம் மீனாட்சியம்மா
வந்து வரம் தந்திடம்மா மீனாட்சியம்மா

15. கார்முகில் வண்ணன் தங்கையாளே மீனாட்சியம்மா
ஊர்செளிக்க வைத்திடம்மா மீனாட்சியம்மா
தோளினிலே காவடிகள் தூக்கியயாடி மீனாட்சியம்மா
கோயிலைத் தேடி வாறோம் மீனாட்சியம்மா

16. கிளியதனைத் தோளில் வைத்து மீனாட்சியம்மா
கிள்ளைமொழி பேசுகிறாய் மீனாட்சியம்மா
தொல்லை போக்கி எங்களுக்கு மீனாட்சியம்மா
எல்லையில்லா இன்பமளிக்கும் மீனாட்சியம்மா

17. கீர்தியுடன் மதுரையாண்ட மீனாட்சியம்மா
கீர்த்தனைகள் பாடிவாறோம் மீனாட்சியம்மா
ஓடிவந்தெமை அணைத்து மீனாட்சியம்மா
காத்திடலுன் கடனல்லவோ? மீனாட்சியம்மா

18. குங்குமம் பொட்டதனால் மீனாட்சியம்மா
குலம் காக்கும் குலமகளே மீனாட்சியம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கல மாங்கலியம் மீனாட்சியம்மா
மங்கையர்க்கு அருள்பவளே மீனாட்சியம்மா

19. கூடிவரும் அடியவர்க்கு மீனாட்சியம்மா
தேடிவந்து வரமளிக்கும் மீனாட்சியம்மா
பாடிடு பாவாணருக்கு மீனாட்சியம்மா
நாடிவந்து நலமளிப்பாய் மீனாட்சியம்மா

20. கெட்ட குணமனைத்தும் மீனாட்சியம்மா
உன்எல்லை தொட ஓடிடுமே மீனாட்சியம்மா
வட்டமுக வடிவழகி மீனாட்சியம்மா
அட்டதிக்கு மாள்பவளே மீனாட்சியம்மா

21. கேண்மையுடன் உன்பதிவர மீனாட்சியம்மா
கேட்ட வரம் அருள்பவளே மீனாட்சியம்மா
கேசவன் சோதரியே மீனாட்சியம்மா
கேதார கௌரியாளே மீனாட்சியம்மா

22. கைலயங்கிரியை விட்டு மீனாட்சியம்மா
பரித்திச்சேனை வந்தவளே மீனாட்சியம்மா
ஐயமகற்று வன்னையாளே மீனாட்சியம்மா
தையலேயெமைத் தாங்கிடவா மீனாட்சியம்மா

23. கொடுமையால வெந்து நாங்க மீனாட்சியம்மா
நடைப் பிணமாகி நைந்து மீனாட்சியம்மா
கெதியற்று வுன் பதி வருளமக்கு மீனாட்சியம்மா
மதிபோன்ற வுன் முகம் காட்டு மீனாட்சியம்மா

24. கோதையே மாதாவே மீனாட்சியம்மா
கோலாகல வன்னையாளே மீனாட்சியம்மா
கோயில் தேடி வாறோமம்மா மீனாட்சியம்மா
கோமகளே காத்திடம்மா மீனாட்சியம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. கௌரி விரதமதை மீனாட்சியம்மா
கர்த்தனை நோக்கி நோர்தவளே மீனாட்சியம்மா
மதுரையில் மகிமையாய் வாழ்ந்து மீனாட்சியம்மா
பரித்திச் சேனை வந்தமர்ந்த மீனாட்சியம்மா

26. உலகத்தின் தாய்ச்சக்தி நீயே மீனாட்சியம்மா
உருவத்தில் சிவசக்தி நீயே மீனாட்சியம்மா
பாசமோடு நேசம் மிகு மீனாட்சியம்மா
பராசக்தியே பாருமம்மா மீனாட்சியம்மா

27. சித்திரையில் திருவிழா கொள் மீனாட்சியம்மா
பௌர்ணமியல் தீர்தமாடும் மீனாட்சியம்மா
உத்தமியே சன்னிதியில் மீனாட்சியம்மா
நித்தம் தினம் பூசையம்மா மீனாட்சியம்மா

28. ஆலமரத்தல விருட்சத்திலே மீனாட்சியம்மா
கிழக்கு வாசல் கோயிலிலே மீனாட்சியம்மா
விநாயகர் வைரவர்க்கும் மீனாட்சியம்மா
நாக தம்பிரானுக்கும் கோயிலடி மீனாட்சியம்மா

29. கோலதோட்சி யாள்பவளே மீனாட்சியம்மா
மேகநிறச் சொக்கர் தேவியாளே மீனாட்சியம்மா
மேதினியில் மங்கையர்க்கு மீனாட்சியம்மா
கோதையே குங்கும வாசியருள் மீனாட்சியம்மா

30. அத்தனிடப் பாகம் விட்டு மீனாட்சியம்மா
எங்களுக்கு அருளளிக்க மீனாட்சியம்மா
எப்போது வருவாயம்மா மீனாட்சியம்மா
பருத்திச்சேனை மீனாட்சியே மீனாட்சியம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரித்திச்சேனை மீனாட்சியம்பாள் காவழிப்பாடல்

1. அக்கினி யாக குண்டத்தி லவதரித்து வந்து
அன்னை காஞ்சனைமாலை மடி தவழ்ந்து
மலையத்துவச பாண்டியன் மகளாயுதித்து
மதுரை நகரை அரசாட்சி செய்து முடித்து
பரித்திச் சேனையிலும் கோயில் கொண்டமர்ந்த
மீனாட்சியம்பாள் காவடிப் பாடல் பாட..
வேழமுக விநாயகரே நாவில் வந்தமர்ந்து....
வழுவகற்றிப் பிழைவராது காருமையா......

2. ஆலமர விருட்சத்தின் கீழ் அண்ணாவியார்
அழகிப்போடி பொன்னம்பலம் மீனாட்சி'
முகக்களை வைத்து வழிபட்டு வந்தகாலம்
ஆண்டு நாற்பத்தைந்து ஆனதன் பின்பு
ஊரவர் ஒன்றுகூடி ஓலைக் குடிசைகட்டி
ஆண்டுக் கொருமுறை மூன்று நாட்கள்..
திருவிழாச் செய்துவரத் தித்திப்பா யேற்று
திருவருள் புரிந்து வந்த மீனாட்சியம்மா...

3. இலங்காபுரி வேந்தன் அரச தாண்ட
இராவணதேச ஈழத்திரு நாட்டினிலே
வந்தாரை வரவேற்று வாழ்வாங்கு வாழவைக்கும்
மட்டுநகரின் மேற்கே மருதநிலம் சூழ
பண்பாடு கலாசார விழுமியங்கள் கட்டிக்காக்கும்
அன்பாளர்நிறை பரித்திச்சேனை ஊரினிலே..
நன்நயமாய்க் கோயில் கொண்டு நலமளிக்கும்..
அன்னையே ஆதரிப்பாய் மீனாட்சியம்மா....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ஈஸ்வரனார் இடப்பாமமர் தேவியாளை
இரஞ்சியே தவம் செய்த பாண்டியன் மனைவி
புத்திரசோகம் தீர்த்திட மனதில் எண்ணி
இரங்கியே வேள்வித் தீயிலுதிக்க வைத்து
தடாதகையெனப் பேரும் சூட்ட வைத்து
அறுபத்து நான்கு கலை யானை குதிரை...
தேர் செலுத்தும் கலையோடு வில்வாள் வித்தைபயின்ற..
பரித்திச் சேனை கோயில் கொண்ட மீனாட்சியம்மா...

5. உன்னத திறமை மணம் களிகொண்ட
தந்தை மலையத்துவச பாண்டியனுக்கு
கங்கை நவதீர்த்தத்தால் அபிசேகித்து
அக்கினி காரியம் முடித்திரத்தின சிம்மாசன மிருத்தி
தேவர்கள் கற்பகப் பூமாரி சொரிய வைத்து
தேவமகளீர் களாட மங்கல வாத்தியமொலிக்க...
வெள்ளை யானைமே லுமக்காசன மமத்தி...
கண்குளிர முடிசூட்டி மகிழந்தாரம்மா...

6. ஊகித்துணர்ந்த தசரீரி சொற்படி செய்த தந்தை
ஊழதுவால் சுவர்க்கம் எய்திட்ட வேளை
ஆண்மகன்போல் நீயிருந்து அணைத்து
உத்தரக் கிரியைகளை விரதநெறி பூண்டு
விதிப்படியே ஒழுங்கு முறைப்படி முடித்து
அறநூல் வழி அரசதனை ஏற்றுநடத்தி.....
இரத்தினச் சிங்காசனத்தில் இருந்தாண்டு...
பரித்திச்சேனை வந்தமர்ந்த மீனாட்சியம்மா....

7. எத்திக்கு மொரே திக்காய் நோக்கி மதுரையிலே
தித்திக்க வாட்சியதைத் திறம்பட நடத்தி
நாட்டின் நடப்புக்களை மந்திரிமாரால் அறிந்து
ஏற்றபடி யாட்சிசெய் தநீதிகளைக் களைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைப்பால் சொல்லால் செயலால்
நீதிமுறை தவறா மனுதரும நூல் கேட்டறிந்து...
கல்வி, செல்வப் பொருளையிரு கண்ணெனக்காத்த.....
கன்னி தடாதகைப் பிராட்டி மீனாட்சித்தாயே....

8. ஏழிருல காண்ட எம்பிராட்டி பூ மண்டல
எண்திசை யரசர்கள் இந்திரனையும் வென்று
திருக்கைலாய மலையை சுற்றி வளைத்த வேளை
திருநந்திதேவர் பூத கணங்களை ஏவியகாலை
பூத கணங்க ளுண்னைப் பொருதித் தோற்று
புறமுதுகு காட்டி ஓடி மறைந்த சேதியை..
கைலாசபதி சிவனிடத்தில் முறையீடு செய்ய.....
இடப வாகனமேறி யிறைவ னுனை கண்டாரம்மா....

9. ஐயமற உன் பெண்சிங்க போர்வீரம் கண்டு
ஐயனே அவர் திருவுருவம் காட்ட
கண்டவுடனுன் நடுத்தனம் மறைந்து
நாணமுற்றுத் தலைகவிழ்ந்து நீயும் நிற்க
மந்திரி சுமத அசரீரி வாக்கை யுணர்ந்து
சந்தேகமில்லை யவருன் மணாள னென்றார்...
சோமவார சுபலக்கினத்தி லுனை மணப்பேன்...
மதுரை செல்லென்று ஈசனு முரைத்தாரம்மா.....

10. ஒன்றாக தேவ லோகத் தேவர்கள் கூடி
நன்றாக நமஸ்கரித்துச் சிவனை வணங்க
கண்டு மகிழ்ந்து சிலரைத் திருவாக்கினாலும்
நின்றிருந்த சிலருக்கு திருப்புன் முறுவலாலும்
அன்பாகச் சிலரைத் திருமுடி யசைத்தலினாலும்..
பண்பாகச் சிலருக்கு திருக்கண் நோக்கினாலும்
அங்கு வந்தனைவருக்கும் திருவருள் சுரந்து..
உன் திருமணக் காட்சிகாண வரச் சொன்னாரம்மா.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. ஓதற்கரிய மந்திரங்கள் ஓங்கி ஒலிக்க
வேதபாராயணம் முழங்க விஷ்ணுபகவான்
சோமசுந்தரேசர் வலத் திருக்கரத்தினிலே
மீனாட்சியான தடாதகைப் பிராட்டியுனது
திருக் கரங்களை வைத்து தாரா தத்தஞ்செய்ய
மலர்மாரி பெய்து தேவர்கள் மகிழ்ந்து போற்ற
சிவகணங்கள் சிரசின் மேற்கை குவித்து வணங்க....
அங்குள்ளோர் குங்கும வட்சதை சொரிந்தாரம்மா...

12. ஔவை மீனாட்சி சுந்தரேசர் திருக் கலியாணம்
பௌவியமாக நடந்த வேளை தனிலே
இலக்குமி சரஸ்வதி தேவ மகளீர்கள்
இருடி பத்தினிகள் மங்கலம் பாடிட....
பிரமதேவர், புத்திரர்க லக்கினி காரியம் செய்ய
பரமசிவன் மீனாட்சிக்கு திருமங்கல்யம்தரித்து...
பாணிக் கிரகஞ்செய் தக்கினி வலம் வந்து...
அம்மி மிதித் தருந்ததி காட்டி மணந்தாரம்மா.....

13. மேக நிறச் சொக்கநாதர் மீனாட்சி மணம்
மேன்மையுற மதுரையிலே நடந்த பின்பு
கோனாட்சி செய்திட்ட மீனாட்சி யன்னை
குலமங்கையர்க்கு குங்கும வாசியருள
பேரலையெழு வங்க ஆழி கடந்து
நேராக தமிழீழ எல்லை புகுந்து...
சதாசிவ சதாசிவ சுந்தரரேஸ் வர...
சுந்தரி பரித்திச்சேனை மீனாட்சியம்மா....

14. மக்களின் மனக்குறை நீக்கி மங்கல மளித்திடு
மாசக்தி யன்னை பராசக்தி உமையே
பாசமிகு மங்கையர் மாங்கலியம் காத்திடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய குங்கும மஞ்சள் கொண்டருள் சக்தியே
உலகத்தி லுயர்வான ஒப்பற்ற தாய்ச்சக்தி
உருவத்தில் சிவசக்தி ஓங்கார நவசக்தி...
சதாசிவ சதாசிவ நாம சுந்தரேச...
அந்தரி பரித்திச்சேனை மீனாட்சியம்மா....

15. மருத நிலம் சூழ்ந்த பயிர்கள் சதிராட
மருதகானம் தலவிருட்ச மலர் குயில்பாட
தேன் சொட்டும் சித்திரையிலைந்து நாட்கள்
திக்கெட்டு மிருந்து திருவிழாக் காண மக்கள்
மெத்த மனம் கொண்டு பயபக்தியோடு கூடும்
சிங்காரக் கிளியோடு தெவிட்டாத மொழிபேசும்...
சதாசிவ சதாசிவ சொக்கநாத சுந்தரேச..........
சௌந்தரி பரித்திச்சேனை மீனாட்சியம்மா.....

16. சித்திரைப் பூரணையன்று சுந்தர மீனாட்சி யெழுந்து
முத்தான பரித்திச்சேனை குறிஞ்சாக்கேணி
தாமரை குளத்தினிலே தீர்த்தமாடும் வேளை
ஆர்வமுடன் வவுணதீவு மக்கள் வந்து
தாமுமே தாயாருடன் தீர்தமாடி
வேதனை பிணி போக்கி வாழ வரம் வேண்ட...
ஆதரவு அளித்து அடியவரைக் காக்கும்......
மீனாட்சிய மங்கல குங்குமப் பிரசாதம் தானே.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனாட்சியம்பாள் கும்மி வசந்தன்

**தரு**

நன்னன்ன நானன்ன நானநன்னா - நன
நானன்ன நானன்ன நான நான்னா
நன்னன்ன நானன்ன நானநன்னா - நன
நானன்ன நானன்ன நான நான்னா

1. பரித்திச் சேனையிலே கோயில் கொண்டருள்
மீனாட்சி கும்மி வசந்தன் பாட
அரிகரபுத்திர அண்ணன் விநாயக
அற்புத பொற்பாதம் காப்பாமே

2. சொக்கநாத சுந்தரேச மீனாட்சிமேல்
செந்தமிழால் கும்மி வசந்தன் செய்ய
சுந்தரமான வெண்தாமரை வீற்றிரு
கலைவாணியே தமிழ் தந்தருள்வாய்

3. மண்முனை மேற்கு வவுணதீவ தனில்
கண்ணான பரித்திச சேனையிலே
நல்லருள் நல்கிடக் கோயிலமர்ந்திட்ட
மீனாட்சி புகழ் பாடிடுவோம்

4. தலவிருட்ச மமர்ந்து குயில் கூவும்
தாயார் தோளிலமர்ந்து கிளி பேசும்
அலமந்து கவிகள் கிளை தாவும்
மனம் மகிழ்ந்து அன்னை துதிபாடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. மட்டுவாவி மீனின மிசைபாடும்
கேட்டு வளர் பயிர் அசைந்தாடும்
மானினம் மருண்டு துள்ளியோடும்
மயிலனம் தோகை விரித்தாடும்

6. மாடங்கள் கூடங்க ளில்லையானால்
மந்தமாருதம் மணம் வீசத்தவழும்'
ஆடவர் பெண்டீர் தமை மறந்து
மீனாட்சி நாமமோதித்துதிப்பார்

7. சொல்லச் சொல்ல மீனாட்சி சேதி
உள்ளத்தில் வெல்லமா யினித்திடுமே
பசுஞ்சோலை கோயிலைச் சூழ்ந்திலங்கு
காட்சிகான மனம் துள்ளி மகிழும்

8. ஆல வேம்பு வீர மரங்களொன்றி
தல விருட்சமா யமர்ந்த பதி
கிழக்கு நோக்கிய வாலய வாசலில்
ஆல விருட்ச நிழல் பாய் விரிக்கும்

9. வலது கைப்பக்கம் விநாயகராம்
இடது கைப்பக்கம் முருகனுமாம்
வலது கால்மாட்டில் நாகமோ
டிடது கால்மாட்டில் வைரவராம்

10. நாள்தோறும் தினப்பூசை யுண்டு
வெள்ளி தோறும் விசேட பூசையுண்டு
ஆண்டு தோறும் சித்திரைத் திங்களிலே
வைந்து நாட்கள் திருவிழாவுண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. கேதாரகௌரி விரதமோடு நவ
ராத்திரி வரலெட்சுமி விரதம்
நோர்த்திட வந்திடு மடியார் கூட்டம்
காத்திருக்கும் காட்சிகாண வாரும்

12. மாசிமக பங்குனி யுத்தரம்
சித்திரைச் சித்திரைப் பௌர்ணமியும்
தைப்பொங்கள் சிவராத்திரிப் பூசை
தாயார் மீனாட்சி பெற்றிடுவா(ள்)

13. ஆண்டு உற்சவம் முடிந்தமூன்றாம்
நாளிலே நாகலிங்கருக்கு
பால்பழம் பொங்கல் படைத்து
பணிந்திடுவா ரூரவரும்

14. நெஞ்சினிலே மீனாட்சியை நிறுத்தி
தஞ்மென்று பணிபவர்க்கு
என்றுமே காட்சியளித்து
நன்றாக வரமுமளித்திடுவா(ள்)

15. நற்றமிழால் அவ புகழ்பாட
அற்புதம் காட்டி யருளளிப்பா(ள்)
வஞ்சக நெஞ்சோரை மாய்த்திடுவா(ள்)
தஞ்சமடைந்தோரைக் காத்திடுவா(ள்)

16. அன்போடருள் அனைத்து மருள்வா(ள்)
இன்பப் பாவினமா யினித்திடுவா(ள்)
ஆலகால மடக்கிய கண்டன் தேவி
சூல பாணி மீனாட்சியம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. அன்னையும் தந்தையுமான மீனாட்சி
என்றுமே யெங்களைக் காத்திடுவா(ள்)
துன்ப துயர்களைத் துடைத்திடுவா(ள்)
இன்பச் சுணையா யிருந்திடுவா(ள்)

18. பரித்திச்சேனை மீனாட்சி திருவிழா
ஐந்து நாட்கள் பெருவிழா
பக்தி மணம் கமழ் தெய்வவிழா
சக்தி யவளது சக்திவிழா

19. பண்பாடு கலாசார விழுமியம்
பண்போடு காத்திடு இவ்வூரினிலே
நன்றாக வாலய மமர்ந்தருள்
நவயுக சக்தி மீனாட்சியம்மா

20. காஞ்சியில் காமாட்சி யானவதான்
காத்திடு அம்பிகை சௌந்தரிதான்
மாமதுரை மீனாட்சியேதான்
பரித்திச் சேனை வந்தமர்திருகா(ள்)

21. சிங்கவாகினி திரி சூலி நீலி
கண்ணகை மாரி காளி மீனாட்சி
மங்கள சோபனம் சொல்லியாடி
குங்கும மீனாட்சியை பணிவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரித்திச்சேனை மீனாட்சி அர்ச்சனை

( 108 போற்றி )

| | |
|---|---|
| அரிய கலைக ளருள் மீனாட்சி | போற்றி |
| அரிகேசவன் சோதரியே | போற்றி |
| அஞ்ஞான மகற்றம்மையே | போற்றி |
| அகிலாண்ட நாயகியே | போற்றி |
| அறம் காக்கு மன்னையே | போற்றி |
| ஆனைமுகன் தாயே | போற்றி |
| ஆதிசிவன் பாதியே | போற்றி |
| ஆயிரங் கண்ணுடையாளே | போற்றி |
| ஆதிபரஞ்சோதி ஆத்தாளே | போற்றி |
| இமயத் தரசியே | போற்றி |
| இருடி கேசன் தங்கையே | போற்றி |
| இரத்தின சிம்மா சனத்தியே | போற்றி |
| இந்திரனை வென்ற தாயே | போற்றி |
| இயலிசையா யினிப்பவளே | போற்றி |
| உலகாளும் உத்தமியே | போற்றி |
| உற்ற துணையா யிருப்பவளே | போற்றி |
| உள்ளத் துறையுமுணர்வே | போற்றி |
| உயிரோவியமா யொளிர்பவளே | போற்றி |
| உத்தம மீனாட்சித்தாயே | போற்றி |
| ஊழ்வினை யகற்று உமையே | போற்றி |
| ஊரவர் போற்று மீனாட்சியே | போற்றி |
| ஊரைக் காத்திருவுறவே | போற்றி |
| ஊட்ட மளி உமையே | போற்றி |
| ஊழியான் பாரியாளே | போற்றி |
| எங்கள் உள்ளத்தொளியே | போற்றி |
| என்றும் நீங்கா இறைவியே | போற்றி |
| எண்ணம் எழுத்தும் மானவளே | போற்றி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எள்ளும் எண்ணெயாயிருப்பவளே போற்றி
எட்டுத் திக்குமுறை மீனாட்சியே போற்றி
ஏகாந்த எழில் வடிவே போற்றி
ஏகன் துணையானவளே போற்றி
ஏக பராபரியானவளே போற்றி
ஏதிலார்கருள் இறைவியே போற்றி
ஏழீருலகாள் மீனாட்சியே போற்றி
ஐயமகற் றம்பிகையே போற்றி
ஐயனோடு நடமாடுபவளே போற்றி
ஐயும் கிலியும் மானவளே போற்றி
ஐங்கரன் அன்னையாளே போற்றி
ஐஸ்வரியமளி மீனாட்சியே போற்றி
ஒற்றைக் கொம்பன் தாயே போற்றி
ஒட்டாரம் பண்ணா ஓங்காரியே போற்றி
ஒளி மரமாய் ஒளிர்பவளே போற்றி
ஒன்றாமையை ஒழிப்பவளே போற்றி
ஒப்பில்லாவமுத மீனாட்சியே போற்றி
ஓங்காரமகற்று சிங்காரியே போற்றி
ஓங்கார ரூபியான உமையே போற்றி
ஓச்சம் அளிக்கு மாட்சியே போற்றி
ஓக்கம் தந்திடு நாச்சியே போற்றி
ஓராட்டு விரும்பு மீனாட்சியே போற்றி
ஔவிய மகற்று மன்னையே போற்றி
ஔவும் சவ்வு மானவளே போற்றி
ஔதாரியம் அழிப்பவளே போற்றி
ஔவையாகி அணைப்பவளே போற்றி
ஔடதமான மீனாட்சியே போற்றி
கந்தனையீன்ற காரிகையே போற்றி
கல்விக்கு வித்தான முத்தே போற்றி
கடம்பவன மீனாட்சியே போற்றி
கல்லார்க்கும் கருணைக்கடலே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலியுக கண்கண்ட மீனாட்சியே போற்றி
கார்த்திகேயனைப் பயந்தவளே போற்றி
கார்முகில் வண்ணன் தங்கையே போற்றி
காலத்தை வென்ற கற்பகமே போற்றி
காசினி தன்னைக் காப்பவளே போற்றி
காமாட்சியான மீனாட்சியே போற்றி
கிரிசனார்தேவி கிரிசையே போற்றி
கிருபா கடாட்ச மருள்பவளே போற்றி
கிருஷ்ணன் உடன் பிறப்பே போற்றி
கிளியோடு மொழி பேசு மீனாட்சியே போற்றி
கீதமாய் இனித்திடு தேவியே போற்றி
கீர்த்தன மிசைக்கக் காப்பவளே போற்றி
கீர்த்தி தந்திடு மீனாட்சியே போற்றி
குலம் காக்கும் குணக்குன்றே போற்றி
குற்றம் களை நற்தேவியே போற்றி
குங்கும மீனாட்சி யன்னையே போற்றி
கூத்தனோ டாடிடு கோமகளே போற்றி
கெடலூழ் அகற்று அன்னையே போற்றி
கேசவன் தங்கை மீனாட்சியே போற்றி
கை கூப்புவோரை காப்பவளே போற்றி
கொண்டல் வண்ணன் தங்கையே போற்றி
கோலப் பசுங்கிளி மீனாட்சியே போற்றி
கௌவிடு சூது களைபவளே போற்றி
சர்வசித்தி தரு மீனாட்சியே போற்றி
சாதிபேதமகற்று சக்தியே போற்றி
சிவயோக செந்திரு வல்லியே போற்றி
சீதரன் செல்லச் சோதரியே போற்றி
சுந்ரேசன் மீனாட்சியே போற்றி
சூலபாணித் தேவியாளே போற்றி
செந்தமிழ் செல்வி மீனாட்சியே போற்றி
சேனைத்தலைவி மீனாட்சியே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொர்க்க நாதர் சொர்ணமே போற்றி
சோதிவடிவச் சுடர்க்கொடியே போற்றி
சௌந்தரியம் மிகு தாயே போற்றி
தமிழர்குலத் தத்துவ முத்தே போற்றி
திசையெலாம் புரந்தருள்பவளே போற்றி
திரிபுர சுந்தர திலகமே போற்றி
தீந்தமிழ்ச் சுவையே போற்றி
தெவிட்டாத தெள்ளமுதே போற்றி
தையல் நாயகித் தாயே போற்றி
நீதியோ டாண்ட மீனாட்சியே போற்றி
பரமானந்தப் பேரொளியே போற்றி
மாங்கலிய குங்கும மீனாட்சியே போற்றி
சைவ நெறித் தாயாரே போற்றி
மாணிக்க மரகத வல்லியே போற்றி
பண்ணமைந்த இனிய சொல்லே போற்றி
பரித்திச்சேனை மீனாட்சித்தாயே போற்றி

செம்மொழிப் புலவர் ஆரையூர் அருள்
*(19.10.2014)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயந்திபுர குமாரத்தன் கும்மிப்பாடல்

தரு

தானினம் தானினம் தானானம் - தனம்
தானினம் தானினம் தானானம் } 2

காப்பு

1. மட்டக்களப்பு ஜெயந்திபுரத்திலே
மட்டற்ற மகிழ்வுடன் கோயில்கொண்ட
குமாரத்தன் மேல் கும்மிப்பாடல் பாட
குஞ்சரமுகத்தோன் காப்பாமே

2. மாமாங்கேஸ்வரர் ஆலயமும் - மிக்க
மான்புறு குமாரத்தன் ஆலயமும்
ஆதிகால வேடர் சமகாலத்தேயமைத்து
போற்றி வழிபட்டுவந்தனரே

3. நேராகக் குமாரத்தன் வந்தமர்ந்த - நற்
பால மரத்தின் கீழ் பந்தலிட்டு
ஆலமரம் தல விருட்சமாகிட
ஆலயம் தன்னை அமைத்தனரே

4. மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் - மேற்கே
நேரேகுமாரத்தன் மூலஸ்தானம்
ஆதியிலே அமைந்திட்ட அற்புதம்
நேரடியாய்க் கண்டு களித்திடலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. வடக்கே பத்தினி அம்பாளாம்
கிழக்கே மாமாங்கேஸ்வரராம்
தெற்குத் திசையிலே வைரவராம்
மேற்கே முத்துமாரியாலயங்களுமாம்

6. குமாரத்தன் குதிரைமேலேறி - நாளும்
இரவு வேளைதோறுமூர் சுற்றி
துட்டப் பசாசிகள் கிட்டநெருங்காது
எட்ட ஓட்டியே விரட்டிடுவார்

7. கொட்டுவோமே கும்மி கொட்டுவோமே
குமாரத்தன் கோயில் வாசலிலே
தட்டுவோமே கைதட்டுவோமே - இசை
தாளம் தவறாமல் தட்டுவோமே

8. அன்னை சிவசக்தி பாலன் - ஆளும்
ஜெயந்திபுர குமாரத்தன்
முந்துவினை தீர்க்கும் முருகன் - வந்து
முத்தியோடு சித்திதந்திடுவார்

9. ஆலயச் சூழல் அழகொளிரும் - சுற்றி
ஆல பால பலா வேம்பு மிளிரும்
வில்வை திருக்கொன்றை வீசும் தென்றல்
சில்லென்று மேனி தடவும்

10. ஆனந்தமே யுந்தன் அழகுருவ - மென்று
முன்னருளால் தீரும் பெருந்துயரம்
ஆல பால மரங்களமர்ந்து - கூவும்
குயிலோசைகள் மெருகூட்டுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. இன்னல் வறுமை பிணியாவும் - குமரா
இல்லாதொழியும் தினந்தோறும்
இனிய தமிழ் கீதமினிக்கும் - நாளும்
புனித உன் நாம மொலிக்கும்

12. ஆலய வளாகத்தினுள்ளே - சூழ
ஆனை முகன் ஆஞ்சநேயருக்கும்
நாகதம்பிரான் நவக்கிரகமோ - டங்கே
ஆதி வைரவருக்கும் ஆலயமாம்

13. மாமாங்க தீர்த்தமதாடவந்த - அரசி
ஆடகசௌந்தரி வழிதவற
குமாரத்தன் ஆலயத்தேயிருந்த - பக்த
வேடர்களே வழிகாட்டினராம்

14. இரண்டாயிரத்திருபத்தொன்றாறு பதிமூன்று
இரண்டாவது கும்பாபிடேகம்
கண்டிடு குமாரத்தனாலயத்தே - சேர்ந்து
வந்து வழிபட்டருள் பெறுக

15. தைப்பூசம் வைகாசி விசாகம் - மற்று
சிவராத்திரி நவராத்திரி
கந்தசஷ்டி திருவெம்பாவையுடன்
விசேட பூசைகளனைத்து முண்டாம்

16. வள்ளி தெய்வானையுடன் மஞ்சத்திலமர்ந்து
சித்திரத் தேரேறித் தெருவீதி
சுற்றிவரு மழகு காணப் - பர
பக்திப் பரவசம் வந்திடுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. கிழக்குத் தமிழகத்திலே - உனக்கு
இருபத்தியேழுக்கு மேற்பட்ட
ஆலயங்களிலே ஆண்டு தோறும் - வேண்டி
சடங்கு செய்கின்றாரே

18. பந்தல் அமைத்து சேலைகட்டி - அங்கு
பக்குவமாக மடைகள் பரப்பி
ஆலத்தித் தெய்வம் தீப்பந்தத்தினாலே
ஆலத்தி எடுத்து சென்றிடுமாம்

19. கப்புவன் என்னும் பூசாரிதானே
எப்பொழுதும் குமாரத்தனாகி
பத்ததிமுறைச் சடங்கு செய்ய - ஆடிச்
செப்பிடுவாராம் வாக்கதனை

20. கொட்டு எனும் பறையிசைக்க - அது
தட்டும் தவிலோசை போன்றினிக்க
குமாரத்த தெய்வம் பிரசன்னமாகியே
கோயிலிலே தலை சுற்றிடுமாம்

21. கோடரி யீட்டிவாள் வில் - அம்பு
ஆயுதங்களுமே கைளிலேந்தி
குமாரத்தபிரான் கோயிலிலிருந் - தூரை
காவல்செய்ய கடுகி வருவார்

22. கதிர்காமக் கந்தனுமவன்தான் - காக்கும்
கதிர்வேலனு மவந்தான்
ஜெயமளிப்பவனுமவன்தான் - நம்ம
ஜெயந்திபுரகுமாரத்தனுமவன்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. மங்களமே ஜெய மங்களமே
மாமாங்கேசருக்கும் மங்களமே
மங்களமே நல்ல மங்களமே
ஜெயந்திபுர குமாரத்தனுக்கு மங்களமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயந்திபுர குமாரத்தன் போற்றி

ஓம் குமாரத்தனே போற்றி! ஓம் குமாரத்தனே போற்றி!
ஓம் குமாரத்தனே போற்றி! ஓம் குமாரத்தனே போற்றி! } 2

1. ஜெயந்திபுரம் அமர்ந்தவனே ஜெகமெல்லாம் காப்பவனே!
ஜெயமெல்லாம் அளிப்பவனே ஜெயஜெய குமாரத்தனே!
ஐயனே கையனே மெய்யனே ஜெய துய்யனே!
ஆகனே கோகனே வாகனே ஜெய மோகனே!
(ஓம்.....)

2. அகிலாண்டகோடியே பிரமாண்ட நாயகனே!
அமரரூப அரசனே அசூரர் அஞ்சு அமலனே!
அத்தி முகனுக்கிளைய சித்திரவடிவேலனே!
அண்ட பகிரண்டம் எங்கும் நிறைந்தவனே!
(ஓம்.....)

3. ஆழிமீது அமர்ந்தவா அமரர்களைக் காத்தவா!
ஆறுமுக அண்ணலே ஆதரிக்கும் செம்மலே!
ஆறுபடைவீடமர்ந்த ஆனந்தசொருபனே!
ஆழிமழைக் கண்ணனின் அழகு மருமகனே!
(ஓம்.....)

4. இக்கலிகால எங்கள் கண்கண்ட தெய்வமே!
இன்பம் தரு மூர்த்தியே துன்பம் களைகீர்த்தியே!
இருடிகேசன் மைந்தனே இலங்குகை வேலனே!
இருவினையில்லாத வருவினை தவிர்ப்பவனே!
(ஓம்.....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. ஈசன் அருள் பாலகனே ஏகலோக நாயகனே!
ஈனப் பிணியறுத்து எங்களைக் காப்பவனே!
ஈசனுக்கே ஞான உபதேசம் செய்தவனே!
ஈரேழுலோக ஏந்தலானவனே போற்றி!
(ஓம்.....)

6. உறைந்தெழு ஆங்காரம் ஒடுக்குபவனே!
உண்மைதனில் மௌனமெல்லாம் அடக்குபவனே!
உன்னத தன்னிக ரில்லாத உத்தமனே!
உறுபிணி நோய்கள் ஓட்டுபனே போற்றி!
(ஓம்.....)

7. ஊழிக்காலப் பேரொளியே உத்தமேனே போற்றி!
ஊழ்வழித்துணைவரு உன்னதனே போற்றி!
ஊக்கத்தோடுதவிடு உண்மைப் பொருளேபோற்றி!
ஊறுகளைந்துதவிடு வித்தகனே போற்றி!
(ஓம்.....)

8. எழில்நிறை எங்கள் குமாரத்தனே போற்றி!
எட்டுத்திக்கும் கட்டிக் காப்பவனே போற்றி!
எண்ணற்ற இன்பங்கள் தருபவனே போற்றி!
எங்கும் இலங்கும் எழில் வண்ணமே போற்றி!
(ஓம்.....)

9. ஏதிலார்க்கு உதவிடு ஏந்தலே பாந்தலே போற்றி!
ஏக்கம் தீர்க்கும் எங்க குமாரத்தனே போற்றி!
ஏகதந்தனின் இன்பத் தம்பியானவனே போற்றி!
ஏகபரிபூரணனே பாவநாசகாரணனே போற்றி!
(ஓம்.....)

10. ஐயம்போக் கறுமுகனே அடியார்போற்று குமாரத்தனே!
ஐங்கரனுக் கிளைய மெய்வடிவேலவனே போற்றி!
ஐயனே மெய்யனே அப்பனே அருளே போற்றி!
ஐயமதகற்றி யன்புதந்தருள்பவனே போற்றி
(ஓம்.....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. ஒப்புவமையில்லாத சுப்பிரமணியனே போற்றி!
ஒன்று றியார் போலோங்காரத்தினுள் உறைபவனே!
ஒளிகொடுத்து இருள் அகற்று குமாரத்தனே போற்றி!
ஒருபொழுது முனை மறவாவுள்ளமளிப்பவனே போற்றி!
(ஓம்.....)

12. ஓசைச்சதங்கைச் சிலம்பு கொஞ்சு பாலகணபோற்றி!
ஓம் என்ற நாதமொலிக்கும் ஜெயந்திபுரத்தானே போற்றி!
ஓம் எனும் பிரணவப் பொருளானவனே போற்றி!
ஓம்காரத்துவத்தின் உட்பொருளானவனே போற்றி!
(ஓம்.....)

13. ஔவைக்கருளிய ஆபாலனே வேலவனே போற்றி!
ஔவெனும் அட்சரப் பொருளானவனே போற்றி!
ஔவிய இருவினைகள் அகற்றுபவனே போற்றி!
ஔவைக்குப் பழம் கொடுத்து உணர்த்தியவனே போற்றி
(ஓம்.....)

14. நக்கீரருக்கு அருள் அளித்த நாதனே போற்றி!
அகத்தியருக்கு அருளிய அறுமுகவண்ணலே போற்றி!
மகரவாகனமேறிய மால் மருகனே போற்றி!
குதிரைவாகனமேறும் குமரத்தனனே போற்றி!
(ஓம்.....)

15. சிங்கவாகனம் ஏறிய செவ்வேனே போற்றி!
யானைவாகனம் ஏறிய ஞானபண்டிதா போற்றி!
ஆட்டுவாகனம் ஏறிய அழகையாகவே போற்றி!
மயில்வாகனம் ஏறிய எங்க மயூரனே போற்றி!
(ஓம்.....)

16. ஆண்டலைக் கொடியோனே சேவற்கொடியோனே!
ஆறுமுக வையனே பன்னிருகைமெய்யனே போற்றி!
ஆணிவேரராமல் எம்மை ஆதரித்து காப்பவனே போற்றி!
ஆறுதலை நல்கி தேறுதலைத் தருபவனே போற்றி!
(ஓம்.....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. வேலவனே போற்றி நல்ல வித்தகனே போற்றி!
பாலகனே போற்றி யருள் பாலிப்பவனே போற்றி!
தேவர்துயர் துடைத்த சித்திரவேலவனே போற்றி!
காரணத் தந்தையே ஆரணக் கடவுளே போற்றி!
(ஓம்.....)

18. வானகம் தன்னில் வையகம் வலம் வந்தவா போற்றி!
கானக வள்ளிதனைக் கடிமணம் புரிந்தவா போற்றி!
தேடி நாடி ஓடிவர வுன் தெரிசனம் தருபவனே போற்றி!
ஜெயந்திபுரப் பதியிலுறை குமாரத்தனே போற்றி!
(ஓம்.....)

19. அணி அணி தொண்டர்க்கு அருள் மணியே போற்றி!
தனி மணி தன்னறிவாலே சுடரும் தருமணியே போற்றி!
புனையணி செஞ்சொற் புலவர் நாபூத்த புகழ்மணியே போற்றி!
மனமணி ஜெயந்திபுரக் குமாரத்த மணியே போற்றி!
(ஓம்.....)

20. அருவாகி உலகமடிமீது அழகென தவழ்வா போற்றி!
உருகாத கல்நெஞ்சும் உருகவைத்தருள்பவனே போற்றி!
குருவாகி யப்பனுக்கு பதேசம் செய்தவனே போற்றி!
அருகோடு மாமாங்கரமர்ந்த குமாரத்தனே போற்றி!
(ஓம்.....)

21. முற்று நவரெத்தின முடி புனைந்த முருகவேனே போற்றி!
சிற்றடியில் சிலம்பு அலம்பு சிவபாலகனே போற்றி!
சற்குறமாது வள்ளி தெய்வானை பாகனே போற்றி!
அற்புத ஜெயந்திபுர மாதற்பரகுமாரத்தனே போற்றி!
(ஓம்.....)

22. அஞ்சலென்றே வந்தடியவரைக் காப்பாய் போற்றி!
தஞ்சமென்றோர் கருள் புரி தயாளகுணத்தாய் போற்றி!
செஞ்சதங்கை குரல்கொடுக்கும் குமாரத்தனே போற்றி!
கஞ்சமலர் மிஞ்சிலங்கு மார்புடைய கடவுளே போற்றி!
(ஓம்.....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. அரிவுற்ற பூதபடைசூழ் சேவற்கொடியோனே போற்றி!
விரிவுற்ற தோகைமயில் மிக்க வலுவுற்ற வீரா போற்றி!
வரியுற்ற வள்ளிதேவயானை யிரு புறமுற்றவா போற்றி!
தெரிசித்து நாம் பணிய சீக்கரம் வரு குமாரத்தனே போற்றி!
(ஓம்.....)

24. சருவலோக நாயகனே தவக் கொழுந்தே போற்றி!
அருணகிரி நீலகண்டர் அருள்நிறை அன்பே போற்றி!
சிரு மருவுபர கரனே ஜெயந்திபுரவாழ் கருணையே போற்றி!
திரவியமே எம் குருவே திருவடிவே குமாரத்தாபோற்றி!
(ஓம்.....)

25. தென் பொதிகைமுனி பணியுமழகனே போற்றி!
அன்பர் உள்ளம் மேவியருள் புரிநாயகனே போற்றி!
எம்பெருமான் எம் சுவாமிநாத நாதனே போற்றி!
உம்பர் குடிவாழவைத்த உயருள்ள குமாரத்தா போற்றி!
(ஓம்.....)

26. மந்திரம் சேர்மெய்ப்பொருளே வள்ளிபாகா போற்றி!
தந்திமுகன் தம்பியான இந்திரன் மருகனே போற்றி!
சுந்தரனே வீரபாகு தேவ சகோதரனே போற்றி!
சிந்தைகுடி கொண்டருள் சீர் குமாரத்தனே போற்றி!
(ஓம்.....)

27. இலங்கு ஜெயந்திபுரமுறை இறையவனே போற்றி!
துலங்கு துடியிடைவள்ளி தெய்வானை பாகா போற்றி!
நலங்கள் செய்ய அறுபடைவீடமர்ந்த ஐயா போற்றி!
விளங்கிடு சக்திவேல் ஏந்திவரு குமாரத்தனேபோற்றி!
(ஓம்.....)

28. பரமனருள் பாலகனே பார்வதியால் புத்திரனே போற்றி!
சர்வயுயிர்காவலனே தமிழ்சொரியும் குமாரத்தனே போற்றி!
கருணைபுரி கடம்பனே காத்தருளும் கந்தவேளே போற்றி!
திருவருள் செய்பவனே ஜெயந்திபுரவண்ணனே போற்றி!
(ஓம்.....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. பன்னிரு கண்ணுடை பண்பான பண்ணவனே போற்றி!
என்னிரு கண்களிலே மின்னிடு வடிவழகனே போற்றி!
கந்தாமண மார்புக் கடம்பக் கடவுளே போற்றி!
நந்தாவிளக்காய் நலம் செய் குமாரத்தனே போற்றி!
(ஓம்.....)

30. மான்மகள் வள்ளியை மணந்தவனே போற்றி!
செங்கண்கடாவேறு சண்முகக் கடவுளே போற்றி!
பாம்பணி சிவனாரின் பாசப் பாலகனே போற்றி!
செம்மையா ஜெயந்திபுரமமர்ந்த குமாரத்தா போற்றி!
(ஓம்.....)

*19.01.2020*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொல்லநுலைப் பேச்சியம்பாள்

## கும்மிப்பாடல்கள்

**தரு**

தானினம் தானினம் தானானம் - தனம்
தானினம் தானினம் தானானம்

1. கொல்லநுலையிலே கோவில் கொண்டு - என்றும்
நல்லருள் நல்கிடும் பேச்சியின்மேல்
சொல்லினிய செந்தமிழ் கும்மி பாடிட
செல்வ விநாயகர் காப்பாமே

2. கொக்கட்டியீசன் கோவிலுக்கு - மேற்கே
பத்துக்கிலோமீற்றர் தூரத்திலே
கொல்லைநுலை பனிச்ச நிழலில் - கோவில்
கொண்டமர்ந்திருக்ககா பேச்சியம்மா

3. மண்ணில் வரலாறு தெரிந்தாலே - அந்த
மக்கள் வரலாறு தெரியும்
கொல்ல நுலையை யறிய பேச்சியம்மா
நல்லாலயம் நாடி வாருங்களே

4. அன்னை பேச்சியாலயம் சூழ - எங்கும்
பச்சப் பசேலென்ற காட்சி தந்து
நித்தம் மனிதினைக் கொள்ளை கொள்ளும்
அற்புத மருதநிலவ வயலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. ஆகாயப் பேச்சி அவ பேராம் - அழகு
ஆயர் பாடி அவ ஊராம்
கோலோட்சுவது கொல்லைநுலை - என்று
கூறிக்கும்மி கொட்டுங்கடி

6. ஆல மரமமர்ந்து குயில்கள் பாட - கேட்டு
தோகை விரித்து மயில்கள் ஆட
ஆனந்தத்தால் பனிச்ச கிளைகளாடி
சாமரம் வீசியவவ தாலாட்டும்

7. ஆகாயப் பேச்சி ஆலயத்தே - வந்து
ஆரணங்கர் கூடி நின்று
ஆனந்தக் கும்மியடித்தாட
ஆயன் சகோதரியகம் மகிழ்வா (ள்)

8. ஈருருளியில் சென்ற வோரன்பர்க்கு
தேங்காயொன்று விழுந்துருளும்
பாங்கான வுணர்வாலது தேங்காயல்ல
தேவிசெய லென அவருணர்ந்தார்

9. சம்பவம் நிகழ்ந்த மறுநாள் - காலை
சங்கதி யறியச் சென்றவரு
வட்டா மடை பனிச்சமரத்தின் கீழ்
பக்தியோடு வைத்து வழிபட்டாரே

10. விடயமறிந்த சிலரவரோடுகூடி
வடிவான பந்தலிட்டு
வந்தவன்னை காளியென நினைத்து
வழிபட்டு வந்தனரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. காலப் போக்கிலவ காளியல்ல - நல்ல
காளிவடிவான பேச்சியென்று
ஆயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்று
ஆறில் பேச்சியை போற்றினரே

12. காவல் தெய்வங்களாய் பிள்ளையார்
நாகதம்பிரான் வீரபத்திரரோடு
வாகான வைரவருக்கு மங்கே பரி
வாரவாலயங்களமைத்தனரே

13. ஆயிரத்து தொளாயிரத்து எண்பத்து
ஆறிலிருந் தின்றுவரை
ஆண்டுக் கொருமுறை சடங்குசெய்து
ஆராதனையும் புரிகின்றாரே

14. வைகாசி திங்களமாவாசைக்கு - முந்தநாள்
பள்ளயம் வரும் வகையில்
கைராசிக் காரி பேச்சி எல்லை
காவல் செய்திடுவார்

15. சித்திரை மாதத்திலிருந்தே அன்னை
உத்தமி பேச்சி வீதியெங்கும்
நல்லமுறையில் வளாகம் சுற்றியும்
கண்கவ ரலங்காரம் செய்திடுவார்

16. வெளியிடங்கள் சென்றவர்களிங்கே
களிகொண்டுரு வந்து
வழிபட்டுச் சடங்கு காண்பதற்கு
உறவினர் வீட்டிலும் தங்கிடுவார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. மூத்தவிநாயகர் முருகனுக்கும் மடைவைத்து
மாரி பேச்சிகாளி மூவருக்கும்
மூன்று தனித்தனி கும்பங்கள் நிறுத்தி
பேச்சி சடங்கு தொடங்கிடுவார்

18. பகல் இரவுப் பூசைகளியற்ற - அப்போ
பக்குவமாய் தேவாதிகளாட
நற்றமிழில் மந்திரங்கள் ஒலிக்க - மிக்க
பக்தியோடு பக்தர் பணிந்திடுவார்

19. விநாயகப்பானை எழுந்தருளப்பண்ணி
வினைகள் அகற்ற வேண்டி
நெல்லைக் கருவறையில் வைத்தெடுத்து
நெல்லுக்குற்று சடங்கு செய்திடுவார்

20. உரல்நிறுத்தி நெல்கொட்டி பூசாரிமார்களோடு
உருக்கொண்ட தேவாதி நிருவாகம்
உற்ற தொண்டு செய் பெண்டிரும் குத்தி
அந்தரிசி கொண்டு பொங்களிடுவார்

21. இளநீராலே அடுப்பமைத்து விநாயகர்
அம்பாள் பரிபார மூர்த்திகள்
மூவருக்கும் மூன்று புதுப்பானைகள் கொண்டு
ஆலயம் சுற்றி வருவார்

22. பானை தூக்கி வருவோருருவேறியாட
பவித்திரமாகப் பிடித்துவந்து
நேர்த்தியாக அடுப்பில் வைத்து நன்கு
காத்திரமாக பொங்கலிடுவார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. வீர வேம்பு மரங்கள் வெட்டியெடுத்து
தீக்கட்டை யெழுந்தருளப் பண்ண
குழுவினாமடு விநாயகராலயமிருந்து
கொண்டு வந்து தீ மூட்டிடுவார்

24. தீக்கட்டையெரிந்து தணல்களாக - அதை
தீக்குழியினிலே செப்பனிட்டு
பிரமமுகுர்த்த அதிகாலை தீ மிதித்து
தீ மிதிப்பு சடங்கு செய்திடுவார்

25. இலுப்பையடி யாலயத்திலிருந்தலங்கரித்த
எழிலான தோரணமெடுத்து
ஊர்வலமாகக் கொண்டு வந்தாலய
முகப்பில் வைத்து கட்டிடுவார்

26. தீ மிதிப்புச் சடங்கு முடித்து படையல்
மடைகள் பரப்பி வைத்து
ஆகாயப் பேச்சிக் கற்புதமாகவே
பள்ளயச் சடங்கு செய்திடுவோர்

27. பள்ளயச் சடங்கை பக்குவமாய் முடித்து
வைத்த கும்பங்கள் மூன்றயுமெடுத்து
நீறுபோட்ட சேனைக்குளத்தில்
தீர்த்தம் மாடித் திரும்பிடுவார்

28. தீர்த்தம் நிறைவு பெற்றபின் வந்து
மாரியாத்தாக் காலயத்தே
சர்க்கரையமுது படையல் செய்து
சந்தோசமாக பூசை முடிப்பார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. உற்சவ காலத்தே ஊர்மக்கள் - பக்தி
பாற்காவடி, பறவைக்காவடி
அங்கப் பிரதட்சண வலகிடுதலோடு
பெண்கள் கருப்பூரசட்டியுமெடுப்பார்

30. ஆண்டுக்கு மூன்று நாட்கள் சடங்கிங்கே
அற்புதமாகச் செய்து முடிக்க
ஆகாயப் பேச்சி யுனுதினமுறை
அக்கறையோடு காத்திடுவா (ள்)

31. வெள்ளிக்கிழமை பூரணை தைப்பொங்கல்
சித்திரைப் பிறப்பு சித்திரக்கதை
சிவராத்திரி நவராத்திரி திருவெம்பாவை
தீபாவளிப் பூசைகளும் செய்திடுவார்

32. மங்கலமே சுபமங்கலமே
சித்திவிநாயகருக்கு மங்கலமே
மங்கலமே வெற்றி மங்கலமே
ஆகாயப் பேச்சிக்கும் மங்கலமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொல்லநுலை பேச்சியம்மாள் காவியம்

01. வயலும் வயல் சூழ மருதநிலம் நிறைந்து
இயலிசை நாடக முத்தமிழ் செறிந்து
உயரிந்துக்கள் மட்டும் நிறைந்து வாழ்ந்து
அயலவர்களோடு அன்பாய் பொருந்து
கயல்பாயும் வாவி "கா" தேன் சொரியும்
மையல்கொள் கொல்லநுலை தெரிந்தமர்ந்த
தையல் பேச்சியன்னை காவியம்பாட
ஐயனைங்கர னனுதினம் காப்பாமே

02. காப்புடையரனாய் தான்தோன்றீசரின்
மேற்காய் பத்து கிலோமீற்றர் தொலைவில்
கோவிலமர்ந்தூரை காத்திடன்னை நீ
ஆயர்பாடி நந்தகோபன் யசோதை மகளாகி நீ
பேரான துட்டகம்ச சங்காரகாரணி நீ
ஆகாயம் மீதுநின்றவதாரம் காட்டி நீ
ஆகாயப் பேச்சியென அரனார் அழைக்க நீ
பேரான கொல்லநுலை கோவில் கொண்ட நீ

03. நீசர்கள் கொடுமைகள் அழித்தாயம்மா
நித்திலத்தில் உத்தமர்களை காத்தாயம்மா
சத்தியத்தில் நாயகியாய் வித்தை புரிந்தாயம்மா
சர்வலோக தாயாயுதித்தாயம்மா
பள்ளயம் கொள் பள்ளய பேச்சியம்மா
உள்ளன்போடு பணிவோர்க்குதவிடுவாயம்மா
கொல்லநுலை கோவில் கொண்ட நீயம்மா
எல்லையற்றவின்பமெமக்களிப்பாயம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. அம்மா வென்றழைக்க அருள்மழைபொழிவாய்
மெய்யான பக்தர்களை மேன்மையுறவைப்பாய்
பொய்யான சண்டாளருக்கு புறம்காட்டி நிற்பாய்
உய்யவே பூலோகம் தனைக் காத்துநிற்பாய்
செய்சடங்குகளைத் தித்திப்பா யேற்பாய்
பையரவ பரந்தாமன் சோதரியாய் இருக்காய்
தில்லை விட்டு கொல்லநுலை வந்தமர்ந்தாய்
செந்தமிழ் மந்திரம் தித்திக்க கேட்டு ருசிப்பாய்

5. ருத்திர தாண்டவம் ஆடிச் சிவனுக்கிணையாய்
ரத்தபீசன் சண்டமுண்டரக்கர்களை
வென்றகிலம் காத்துய்ய வைத்து
வண்ணமுறு கொல்லநுலை வந்தமர்ந்து
எண்ணற்ற பக்தர்கள் இடர்கள் களைந்து
என்றுமபவர்கள் இதயம் புகுந்து
நன்றாக எந்தாயே நன்மைகளளித்து
நாளும் காத்திடு பேச்சிபாதம் போற்றி

6. போற்ற மறந்த போக்கற்றவர் செயலாலோ
நீற்றுப்போன நீசர்கள் செய் குறையாலோ
பொருத்தமற்ற பொருளாதாரக் கொள்கையாலோ
புவிமாதர் பரிதவிப்பது செய்வினையினாலோ
சாதிமத இனபேதம் பேசியாள்பவரின்
பேதமை போக்கிப் பெருந்துயர் நீக்கி
பட்டினிச் சாவாலே பரிதவிக்கு மெம்மை
இட்டமுடன் கட்டியணைத்து காரம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. காராள குணமுள்ள பேரான பேச்சியம்மா
தாராள தன்னிறைவை தரணிகாணவம்மா
நேரான பாதையை நித்திலத்தாருக்கம்மா
நீ காட்டாது நிசப்தமா நீயிருந்தாலம்மா
கார் பொய்த்தா பார்மாது பரிதவித்தம்மா
ஏர் ஓட ஏதுவற்றதரிசாகியதம்மா
நீரற்று நிலம் வறண்டு போகமுன்னம்மா
உரமளித்து பயிர்வளர உதவிடுதாயே

08. உதவாத உலுத்தர்களை அழித்ததும் பொய்யோ
ஊறு செய் ஊதாரிகளை எதிர்த்ததும் பொய்யோ
ஏதிலார்க்கென்று முதவுவதும் பொய்யோ
ஏய்த்திட்ட எத்தர்களை சாய்த்ததும் பொய்யோ
மாயன் சகோதரியானதுவும் பொய்யோ
ஆயர்பாடியில் பள்ளயம் கொண்டதுவும் பொய்யோ
சொல்லினிய தமிழ் மந்திரம் சுவைத்தது பொய்யோ
கொல்லநுலை கோவில் கொண்டதுவும் பொய்யோ

09. ஊர்மக்களை நல்வழிப்படுத்தவும்
உள்ள அமைதி சாந்தம் அளிக்கவும்
துர்க்குணப் போட்டி பொறாமை களையவும்
நற்குணப் பொறுமை விட்டுக்கொடுப்பு வளர்க்கவும்
சர்வமும் சகிப்புத் தன்மை வளர்க்கவும்
சாதி சமய இன பேதம் தரணியிலொழியவும்
கார்பொழிந்து கனத்த பயிரினம் செழிக்கவும்
நேர்த்தியாக கொல்லநுலை வந்தமர்ந்தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. ஆயர்பாடியில் அவதரித்தாயே நமோ நம
ஆகாயப் பேச்சியான தாயே நமோ நம
மகப்பேற்று மருத்துவிச்சித்தாயே நமோ நம
கணப்பொழுதில் நினைக்க வருதாயே நமோ நம
பன்னீரவதார மெடுத்த தாயே நமோ நம
எண்ணியதை ஈடேற்று தாயே நமோ நம
பொல்லாப் பிணியகற்று தாயே நமோ நம
கொல்லநுலையிலும் அமர்ந்ததாயே நமோ நம

11. சின்ன ஊறணியிருக்கும் பேச்சியே ஓலமோலம்
சிறுவாமுனையில் சிறப்புறு பேச்சியே ஓலமோலம்
வெல்லாவெளி வீற்றிரு பேச்சியே ஓலமோலம்
விளாவெட்டுவானில் வதி பேச்சியே ஓலமோலம்
பெரியநீலாவணைப் பேச்சியே ஓலமோலம்
பேத்தாழையில் பூத்த பேச்சியே ஓலமோலம்
கல்லடி உப்போடைப் பேச்சியே ஓலமோலம்
கொல்லநுலைகுடிகொண்ட பேச்சியே ஓலமோலம்

12. திருகோணமலை யமர் அன்னையே மங்களம்
மொறக் கட்டாஞ்சேனையுறை மாதாவே மங்களம்
ஆரையம்பதி ஆகாயப் பேச்சியே மங்களம்
வாழைச்சேனை வதியம்மா மங்களம்
குடும்பிமலை கோவில் கொண்டவளே மங்களம்
குருக்கள் மடம் குடிகொண்டவளே மங்களம்
பல்லூரிலும் பள்ளயம் கொள் பேச்சியே மங்களம்
கொல்லநுலை நற்பேச்சியே மங்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. ஆலயப் பூசையாற்று பூசகர்கள் வாழி
ஆலய பரிபாலன சபையோர் வாழி
ஆலய தொண்டாற்று மகளீர் மன்றம் வாழி
சமூகப்பணி சமயப்பணியாற்றுவோர் வாழி
கற்பு நெறிதவறாக் கன்னியர்கள் வாழி
எப்பொழுதும் நற்கருமம் செய்பவர்கள் வாழி
உற்ற உதவிபுரிகின்ற உத்தமர்கள் வாழி
வாழ்கின்ற கொல்லைநுலை மக்கள் வாழி

14. மூத்த சிவ முழுமுத மூசிக வாகனன் வாழி
பூத்த சரவணப் பொய்கைச் சரவணன் வாழி
கங்கை திங்களணி கறைக்கண்டன் வாழி
பங்கமறப் பாதியான பார்பதி வாழி
திருமாலயன் திருமகள் நாமகள் வாழி
பரிவார மூர்த்திகளான வீரபத்திரர் நாகதம்பிரான் வாழி
நவகோண சக்திகள் தேசத்து தெய்வங்கள் வாழி
புவனமாள் கொல்லநுலை பேச்சி வாழி வாழியவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொல்லநுலை பேச்சியம்பாள்

## காவடிப்பாடல்

1. மண்முனை தென்மேற்குப் பட்டிப்பளை பிரதேசத்தே
கொக்கட்டிச்சோலை தான் தோன்றீசர் பதியிருந்து
பத்துகிலோ மீற்றர் மேற்பகுதி தன்னிலே
நெல்வயல்கள் நிறைந்து மலிந்து விளங்கு
கொல்லநுலைக் கோவிலிலே குடியமர்ந்து
நல்லாட்சி செய்தூரை நாளும் காக்கும்.....
பேச்சியம்பாள் பெருமைதனை காவடிப்பாடலில்பாட....
வல்லவை கணபதியே வருவழுவகற்றி காப்பாயப்பா...

2. அன்னையே துபாபரயுகந்தனிலே அம்மா
ஆயர்பாடியிலே நந்தகோபன் யசோதையர்க்கு
பேரான பெண்குழந்தையாக அவதரித்து
ஆலிலையில் துயில்கண்ணன் ஆஞ்சைப்படி
வாசுதேவர் மதுராபுரி சிறையில் கொண்டு
தேவகி தன்னருகே வளத்திடவம்மா....
தீயகம்சன் காலில்பிடித்தாகாயமெறிய....
ஆகாயத்தே அவதாரம் காட்டி நின்றாயம்மா....

3. சங்கு சக்கரம் இருகரங்களி லேந்தி
மிக்க அபயவரதம் மறுயிறுகரங்களில்காட்டி
ஆகாயப் பேச்சியென அரனா ரழைக்க
கம்ச சங்கார காரண நாரணி நீ
வெஞ்சினத்தால் கம்சா அண்ணன் கண்ணன்
ஆயர்பாடியிலே வளர்கிறா ரழிவாயடா....
என்று கூறிக் கூத்தனோடு சமமாயாடி....
சுட்டெரிக்கும் சுடலைக்கு சென்றாயம்மா....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. துட்டர்களை துவசம் செய்து அழித்து
சண்டமுண்ட சங்காரியானவுன்னை
சுடலைப் பேச்சியென்று மழைத்தவேளை
வண்மை நிறை கம்சனைக் கண்ணபிரான்
கொன்றொழிக்க குதூகலத்தால் கூடி மக்கள்
கண்ணனவன் எண்ணப்படியாயர் பாடியிலே
உன்தனக்குப் பள்ளயம் படையல் செய்ய
நன்னயமாய் ஏற்று நலமளித்தாயம்மா

5. தண்ணிச்சோறு பால் தயிர் பழவகைகள்
எண்ணற்ற வகையான அதிரசங்கள்
சர்க்கரைகூழ் வகைகள் கனதியாக
மிக்க மனம்கொண்டளிக்க அக்கணமேற்று
பள்ளயப் பேச்சென்று அண்ணன் கூறி
ஆண்டுதோறுமளிக்க நீயேற்றும் மக்களுக்கு....
வேண்டும் வரமளித்து காக்க வேண்டும்....
என்று கூற ஏற்று கைலாயம் சென்றாயம்மா....

6. கயிலங் கிரியிருந்து மக்கள் துயர்போக்க
காரிகையே பலவவதாரம் எடுத்ததம்மா
கோரிக்கைசெய் யடியார்கள் குறைகளையை
பார்வதி பேச்சி பல இடங்கள் வந்தமர்ந்தாய்
செய்தொழிலில் வரு சேதாரம் தவிர்த்தும்
இப்பகுதி நெற்செய்கை யிடர்கள் களைந்தும்....
கொல்லநுலை மக்களை வாட்டும் தொல்லைபோக்க....
வல்லவையே வடிவழகி வந்தமர்ந்தாயம்மா....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. உற்சவ காலங்களில் பேச்சியம்மா நீ
உடுக்கு தவில் ஒலி மிடுக்காய் ரசித்து
அம்மானை அகவல் காவியம் கும்மிபாட
அம்மா நீ அகம் மகிழ் தருள் அளிப்பா
காவடியாட்டம் கரகாட்டம் கண்டுகளித்து
சேவடி பணிவோரைத் தின மணைத்து....
பூசைசெய் பூசாரிமார்க்கு புத்தூக்கம் கொடுத்து....
பூரணை, வெள்ளி பூப்போடு பூசை ஏற்பாயம்மா....

8. மூன்று நாட்கள் செய்யுன் சடங்கிலம்மா
பாங்கான கும்பம் வைத்தல் சடங்கும்
விநாயகப் பானை எழுந்தருளல் சடங்கும்
தீ மிதிக்கும் சிறப்பான திருச்சடங்கும்
உள்ளம் நிறை பள்ளயம் படைசடங்கும்
வெள்ளமென மக்கள் மகிழ் தீர்த்த சடங்கும்....
கற்சிதமான சர்க்கரை யமுதுச் சடங்கும்....
தித்திக்கும் திகட்டாத சடங்குகளம்மா....

9. பொங்கு புகழ் கொண்ட வுன் பொற்பதிவந்து
தங்குதடையின்றி தங்கள் நிலையுணர்த்தி
வந்தவினை யனைத்து முன் காலடியிலிறக்கி
பந்தபாசமுடனுன்னை அகமதில் நிறுத்தி
நொந்து நூலாகி உன் சன்னிதி வலம் வந்து வணங்கி
சிந்தையிலே உள்ள துயர் சொல்லியழுதால்....
வல்லவளே எல்லையற்ற வரமளிப்பாய்....
கொல்லநுலை ஆகாயப் பேச்சியம்மா....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. மரபுமுறை மாறாது வளர்த்து நாளும்
உறவுகளுக்குரிய முறையில் கையளிக்கும்
இலுப்பயடி ஆலயமிருந்தெடுத்து வந்து
வலுவூட்டும் வகையில் தோரணமலங்கரித்து
வகையாய் கலைநிகழ்வு தொடரந்து வர
வாகாக அவ்வாலயம் சுற்றி வந்து....
ஆலய முகப்பிலதைக் கட்டும் காட்சி....
காணகாத்திருப்பாருன் சன்னிதியிலம்மா....

11. திங்கள் தோறும் பூரணைப் பூசையம்மா
திகழ் வாரம்தோறும் வெள்ளியில் பூசையம்மா
நிகழ்ச்சி நிரல் படி ஆண்டுதோறும்
நெடுகிலும் பதினாறுக்கு மேற்பட்ட
விசேட பூசைகளோடு விரதபூசைகளும்
பேசரிய பேச்சியுன்தன் ஆலயத்தே....
பார்போற்ற பக்குவமாயொழுங்கமைத்து....
பேர் விளங்கச் செய்கின்றாரேயம்மா....

12. பேசாத பேர்களையும் பேசவைப்பாயம்மா
தீராத நோய்களையும் தீர்ப்பாயம்மா
ஆறாத துயர்களையு மாற்றுவாயம்மா
ஏராளர் செய்துன்பம் காப்பாயம்மா
தாராள மணத்தோடு மக்கள் மகிழ்ந்து
ஏராளமான நேர்த்திகள் அளித்து....
பாரளந்தோன் தங்கையுன் சன்னிதியில்....
ஊர்மக்கள் ஒற்றுமையாய் கூடுவாரம்மா....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. சடங்கு செய்வேளை முகக்களை வைத்து
உடுப்புடுத்தி அடுக்குச் சாத்தி அலங்கரித்து
எடுப்பான தோற்றமோடு காட்சிதந்து
உடுக்கு தவில் சொர்ணாலியிசைக்கு
மிடுக்கான தோற்றமொடு பரிணமித்து
கடுப்பாய் வருவினை தடுத்துக் காக்க....
படுவானில் கொல்லநுலை கோவிலமர்ந்த....
துடிப்பான இடையழகி ஆகாயப் பேச்சியம்மா....

14. தத்துவத்தின் வித்தகியே பேச்சியம்மா
நித்தமுன் பாதம் பற்றும் பக்தருக்கு
மெத்த மனம் கொண்டு பெற்ற தாயாய்
வந்து உந்தும் வல்வினைகள் போக்கி
உத்தமியே பத்தினியே நொந்திடாது காத்து
சத்தியத்தின் மெய்ப்பொருளே இப்புவியில்....
கொல்லுநுலை கோவில் கொண்டு கோலதோட்சி....
அன்னை நீயே அனுதினமும் காப்பாயம்மா....

15. நெஞ்சக வஞ்சகக் கம்சனை அழிக்க
வெஞ்சினம் கொண்ட கம்ச சங்காரகாரணி
அஞ்சாது துஞ்சாது அண்ணன் கண்ணன்
கன்று கொண்டு கனிகவர்ந்து வீழ்த்தி
பஞ்சமா பாதகன் தன்னை கொன்றொழிக்க
விஞ்சும் சந்தோசத்தால் பள்ளயம் ஏற்று....
பள்ளயப் பேச்சியாய் திருநாமம் பூண்ட....
கொல்லநுலை நல்லாட்சிசெய் பேச்சியம்மா....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


16. உன்னுடைய திருச்சடங்கு நாளிலம்மா
எண்ணமெல்லாம் உனையே மனம் நிறுத்தி
எண்ணற்ற பக்தர்கள் வாயலகுகுத்தி
பறவைக் காவடிகள் தான் எடுத்தும்
முட்காவடிகள் பாற்காவடிகள் கொண்டும்
பக்திப்பரவர மோடு கூடியாடிப்....
பாவையர்கள் கருப்பூரச் சட்டியேந்தி....
பேச்சியம்மா உன் சன்னிதி நாடிடுவார்....

*19.04.2022*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளாவட்டவான் வீரமாகாளி
## கும்மிப்பாடல்கள்

1. ஆதிசக்தி விளாவட்டவானில் - அன்று
ஆலமர நிழல் வந்தமர்ந்த
தேவி வீரமாகாளி கும்மிபாட- எங்க
தேத்தாவடி பிள்ளையார் காப்பாமே. (தானினம்...)

2. விளாவட்டவான் மக்கள் ஒன்றி - நின்று
வினைத்திறன் மிக்கவோலை
கோவில் கட்டி காளியை யிருத்த - நாளும்
கோலாகலமாய் வழிபட்டனரே. (தானினம்...)

3. வெட்ட வயல் வெளி மிக்கநிறை - விளா
வட்டவானூரை வளைத்து
மட்டுவாவி யசைந்தாடி ஓடி
நித்தமும் தாலாட்டிசைத்திடுமே. (தானினம்...)

4. தக்கன் மகளாய் தவம் புரிந்து - காளி
அக்கன மணிந்தோ னருள் அடைந்து
அக்கணமே சென்றவ யாகமழித்து
சங்கரி வீரமாகாளி யானவளே. (தானினம்...)

5. கண்ணன் சகோதரி கங்காள - தேவி
வண்ணமயில் சின்னவிடையாள்
வெள்ளி மண்டபம் வீற்றிருப்பா - காளி
வில்லம்பு தன்கை பிடித்திருப்பா(ள்)... (தானினம்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. விந்தைமிகு முக்கண்ணி - காளி
துட்டம கிடாசுர மார்த்தனி
சந்தம்மிகு பாடல் பாடிடுமடியார்க்கு
நெஞ்சிலுறை வீரமாகாளி. (தானினம்...)

7. ஓங்கார ரீங்கார வீரமாகாளி - நீ
ஓங்குபுகழ் மாதவன் தங்கை
மோதுகடலேலும் குடித்தவ - மேவி
விளாவட்டவூர் வந்தவ(ள்) (தானினம்...)

8. கொவ்வையிதழ் காளியம்மா ஔவ்வு
நவ்வுஞ் சௌவு மானதாயி
பௌவியமாகப் பணிபவர்களுக்கு - நாளும்
சௌபாக்கியமளி வீரமாகாளி. (தானினம்...)

9. உத்தம வுதாரணி நித்திய பரி - பூரணி
முத்திதரு காரணி வித்தகி நீ
சத்துரு சங்காரி சகலமாயி -நீ
வித்தக விளாவட்ட காளியம்மா (தானினம்...)

10. வீரமாகாளி யாலயத்தே - அக்கினி
மூலையிலானைமுகன் நிருதி
மூலையில் நாகதம்பிரான் - வாயு
ஈசானத்தே நரசிங்க வைரவராம். (தானினம்...)

11. ஆதியில்காளி கிழக்கு நோக்கி - யிருந்து
மூன்று நாட்கள் சடங்கு
மீண்டதன்பின் ஐந்து நாட்கள் - சடங்கு
கண்டு சந்தோசமுற்றாள். (தானினம்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. வீரமாகாளி வடக்கு நோக்கியிப்போ - கற்
கோவிலிலே யமர்ந்து
தீரமுடன் ஏழு நாட்கள் சடங்கு
ஏற்றருள் பாலிக்கின்றா(ள்) (தானினம்...)

13. நாவற்காடு ஸ்ரீ சித்திவிநாயகர்
ஆலயத்திருந்து காலை
பாற்குடபவனி வந்தடைய - காளி
பாலாவிசேகம் பெற்றிடுவா(ள்) (தானினம்...)

14. பாலாவிசேக பூசைமுடிய - அங்கு
கூடிடு மடியவரனைவருக்கும்
நேர்தியா யன்னதானமளிக்க - உண்டு
ஆறுதலடைவா ரகமதிலே. (தானினம்...)

15. முதல் நாள் சடங்கை முன்வந்து
முழுமனதோடு செய்ய
வழுவாதருள் வாரியளிப்பா - வீரமா
காளியன்னை அனைவருக்கும். (தானினம்...)

16. இரண்டாம் நாள் பகல் - இரவு
சடங்குகளை(யும்)
இருகுடும்பத்தினர் செய்திடவே - காளி
பெருமனதோ டேற்றிடுவா(ள்) (தானினம்...)

17. முன்றாம் நாள் பகலிரவு - பூசைகளை
முன்வந்த செய்திடு பக்தருக்கு
தன்னருள் தன்னையளித்து - காளி
நண்ணையமாக நயந்தேற்பா(ள்) (தானினம்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. நாலாம் நாளிரு பூசைகளை - அங்கு
கோலாகலமாகச் செய்திடவே
கோல விழியாள் வீரமாகாளி
நேரிடையா யேற்று மகிழ்ந்திடுவா(ள்) (தானினம்...)

19. ஐந்தாம் நாளிரு பூசைகள் - செய்ய
பைந்தொடி வீரமாகாளி மகிழ்ந்து
முந்து வினைகளை போக்கியாள
முன்வந்திடுவா சந்தோசமாக. (தானினம்...)

20. ஆறாம் நாளிரு பூசைகள் முடிக்க
ஆனந்தமாக அதை ஏற்று
பேறான பேறளித்துக் காக்க - நேரில்
வீரமாகாளி வந்திடுவா(ள்) (தானினம்...)

21. ஏழாம் நாள் அதிகாலையிலே
ஏராளமான பக்தர்கள் கூடி
தேன்வதை தேனீக்கள் போலவே
தேவி சன்னிதியில் கூடி நிற்பார். (தானினம்...)

22. பாலரோடு விருத்தரும் கூடி
பால் வேறுபாடின்றி நாடி
ஓடி வந்து ஒன்றி நிற்பாரே
தீமிதித்து தீமைகளை அகற்ற. (தானினம்...)

23. தீக்குழி தன்னை பூக்குழியாக
தீதகற்று வீரமாகாளி
மாற்றி மக்களை மனமகிழ்வோடு
பாய்ந்து பயனுற வைத்திடுவாய். (தானினம்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. யாகசாலையமைத்து பக்தியோடு
யாகமது வளர்த்தங்கே
வீரமாகாளிக்கு பூசையியற்றிட
வேண்டும் வரங்களளித்திடுவா(ள்) (தானினம்...)

25. பந்தல் கட்டிப் பள்ளையம் படைத்து
வந்தனை செய்து வழிபடவே
சந்தான காளி சந்தோசமுடன்
வந்து மனமுவந்தேற்றிடுவா(ள்) (தானினம்...)

26. ஆலய உற்சவ காலங்களில் - தினம்
ஆலய முன்றலிலிரவில்
பாரம்பரிய கலைநிகள்வுகள்
பாங்குடனே நடத்திடுவார். (தானினம்...)

27. ஐந்து நாள் சடங்கு - ஏழாகி
இந்தவருடம் தொடக்கம்
இனி வந்திடு காலங்களிலும் - அது
வழக்கொளியாது செய்திடுவார். (தானினம்...)

28. மங்கலமே பெருமங்கலமே
தேத்தாவடி பிள்ளையார்க்கு மங்கலமே
மங்கலமே பெருமங்கலமே
தேவி வீரமாகாளிக்கும் மங்கலமே. (தானினம்...)

24.09.2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளாவட்டான் வீரமாகாளி காவியம்

தந்தன தானதனன னாதன னானா - தனனா
தனாதந்த னாதந்த னானா } 2

1. ஊருலாவி சுற்றியோடு மட்டுவாவி யுறுநீர்
சீருலவு மருதநில செந்நெல் செழித்துவளர்
ஆருலவு வாலமர நிழலாலயத்தே யமர்
பேருலவு பெருமானின் இடப்பாகமமர்
வாருலவு விளாவட்டான் வல்லவை வீரமாகாளி
ஏருலவு ஏற்றமுறு செந்தமிழ் காவியமோத
பாருலவு பரமன் மகன் பாலகணபதியுன்
பாதபங்கய மதை நாளும் நினைப்பேனே.

2. நினைவாக நித்திலத்தில் நிதமும் வருபவளே
வினையுற்ற அடியார்கள் தனைக் காப்பவளே
கணைசிலை தீச்சட்டி பற்றுகரத்தவளே
வனை துர்க்கை விளாவட்ட நகர்வாழ்பவளே
அனைவர்குமன்னையாய் நிற்கும் நிகராளே
புனைவுற்ற புதுப்புஸ்ப வாரங்கள் பூணுபவளே
உனைஎதிர் துட்டரை எதிரிட்ட புகழாளே
துணை கொள்ளன்பருள்ளம் வாழும் மாதாவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. மாதாநீ மகாகாளி மதன கெம்பீரி
மாதரி மனம் மகிழ்ந்தருள் புரிகின்றமாயி
வாது புனை தக்கனுயிர் மாழவைத்த சூலி
பேதமுற ஆள்பவர்கள் வேரறுத்திடு வித்தகி
சோதனைகள் செய்து சாதனை காட்டிடு தேவி
போதனைகள் புரிந்திட புத்தி தந்திடு ஆயி
வேதனைகள் வராமல் விளாவூர்கார்காளி
பாதகர்கள் பழிவராது மனதுகந்தருள்வாய்

4. அருளான அறம் வளர்த்த அன்னை மகாகாளி
அக்கினி தன்னிலே அவதரித்த ஈஸ்வரி
ஆன்மீக நல்வழி காட்டிடும் ஓங்காரி
புண்டரீக தார்தரித்திடும் புவனேஸ்வரி
மண்டலத்தில் மகிமை காட்டிடும் மாதங்கி
என்றும் விளாவட்டவூர் வதி நந்தினி
எத்திக்கும் பக்திப்பரவசம் பரப்பிடு நித்தியகல்யாணி
பக்தர்க்கு பரிவளித்துக் காத்திடு பூவைகாளியே

5. பூவையே வேப்பிலையால் பிணிதீர்ப்பவளே
ஆறோடு நீராக ஊர் செழிக்க வைப்பவளே
ஓங்கார ஒலியாக ஒலித்து நிற்பவளே
பாங்காக சிங்கத்தில் பவனிவருபவளே
ஓதும் மறை நாதமாகி ஊள்வினை களைபவளே
ஏழ் கடல் தாண்டி விளாவூர் வந்தமர்ந்தவளே
மேதினியில் எங்கும் நிறை வேத வேதாந்தியே
காதில் தோடும் கையில் கடகமுமணி
கோதையாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. கோதையே பேதமையகற்றிடுவாய் நமோநம
தேவர் தொழு வாலை திரிபுரையே நமோநம
ஞாலம் முழுதும் புகழ் நாயகியே நமோநம
நாவதனில் ஓதவருள் தருபவளே நமோநம
தேடரிய செல்வம் அளிப்பவளே நமோநம
பேசரிய விளாவூர் வீற்றிருப்பவளே நமோநம
பஞ்சாட்சரத்தில் ஒளியான பாவையே நமோநம
மண்டலத்தில் கண்கண்ட மாதாவே நமோநம

7. கண்கண்ட கட்டழகி காளியுனக் கோலமோலம்
அத்தனார் அர்த்தநாரியுனக் கோலமோலம்
வித்தகி வினோதினி பத்தினியுனக் கோலமோலம்
முத்தமிழ் செல்வியுனக்கு ஓலம் ஓலம்
உத்தமி அம்பிகை வீரபத்திரகாளி ஓலமோலம்
அம்புவியி லரனோ டாடிடு தேவியுனக்
கோலமோலம்
செங்கண் மால் தங்கையேயுனக் கோலமோலம்
செவ்வரி படர் கண்ணழகி காளியே ஓலம் ஓலம்.

8. ஓலமென வருபவரை ஓடிவந்து அணைப்பாயே
ஓங்காரப் பொருளாய் வந்து உதித்தாயே
சீலமுடனால விருட்ச நிழல் தேடி வந்தாயே
சீரான விளாவட்டவூரில் சிறப்புடனமர்ந்தாயே
கோலமுடன் கற்சிலயாய் துலங்கி நிற்காயே
வேதாந்த வுட்பொருளாய் விளங்குகின்றாயே
பூப்பூசையேற்று புதுமையளிக்கின்றாயே
ஊரது போற்ற ஏகமாகிப் பரந்து நிற்கின்றாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. பரந்து வளர் ஆலவிருட்ச நிழலமர்ந்த நீயே
பாதிமதி சூடி பரனார் பாதியும் நீயே
ஐயமறப் பரிகலமோடாடுபவள் நீயே
ஐந்தெழுத்துப் பஞ்சாட்சரியும் நீயே
திறமிஞ்சு வலிகொண்ட சூலாயுதி நீயே
மறைகொஞ்சு வடிவான வடிவழகி நீயே
நிறைமதி விளாவட்ட வீரமாகாளி நீயே
பறைகொட்டப் பாய்ந்தோடிவருமாது நீயே

10. மாதுமையே புரட்டாதி பூரணைக்கு நீ வரவேண்டும்
வீரமாகாளி நீ வேள்விதனை ஏற்க வேண்டும்
தீக்குழியை பூக்குழியாய் நீ மாற்ற வேண்டும்
தீதகற்றி தீமிதிப்போரை நீ காக்க வேண்டும்
பரபக்தியோடு படை பள்ளயம் உண்ணவேண்டும்
நிரை நீரையாவரு கன்னியர்க்கு நீயருள வேண்டும்
வெள்ளி பூரணை பூசைகள் நீ கொள்ள வேண்டும்
அள்ளியள்ளி வரமளித் தாற்றுப் படுத்த வேண்டும்.

11. வேண்டு மடியவர் வினை தீர்ப்பவளே மங்கலம்
ஆண்டு தோறும் விசேடபூசை ஏற்பவளே மங்கலம்
ஏழுநாட் பூசை செய்ய களிப்பவளே மங்கலம்
ஏர் உழவர் ஏற்றமுற வாழ்த்துபவளே மங்கலம்
கார்பொழிந்து களனி விளைவிப்பவளே மங்கலம்
பாரதிலே பசி பஞ்சம் தீர்ப்பவளே மங்கலம்
பாரளந்தோன் தங்கையே உனக்கு மங்கலம்
பரனார் திருத்தேவி வீரமாகாளிக்கு மங்கலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. வந்தாரை வாழவைக்கும் மட்டுமாநகர் வாழி
வளந்து வரு கல்விச் சாலைகள் வாழி
பக்தியுள்ளம் கொண்ட பக்தர்கள் வாழி
பரிபாலன சபை உறுப்பினர்கள் வாழி
பரபக்தியுடன் பூசைசெய் பூசகரும் வாழி
பாலருடன் விருத்தர் மாதர்களும் வாழி
பல்கலை வித்தகர்கள் பல்லாண்டு வாழி
பண்பாடுகார் விளாவட்டான் என்றும் வாழி.

13. தேத்தாவடி சித்திவிநாயகர் சிறப்புடன் வாழி
கார்த்திகேயனான கந்தனும் வாழி
உத்தமி பேச்சி மாரியன்னையர்கள் வாழி
உமையம்மை சரஸ்வதியும் உயர்வுடன் வாழி
சீதேவி பூதேவி ஸ்ரீகிருஷ்ணரும் வாழி
ஆதி வைரவர் நரசிங்கர் நாகதம்பிரான் வாழி
பாதிப்பிறைசடையணி பரமனும் வாழி
பத்தினி அன்னை வீரமாகாளி வாழி வாழியவே.

ஆக்கம்,
ஆரையூர் அருள்
*(24.09.2022)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளாவட்டவான் வீரமாகாளி

## காவடிப்பாடல்

1. எழுகதிரொளி மறைதிசை ஒளியளி சிறக்கும்
ஏற்றமுறு தெற்கில் ஆலமர நிழலமர்ந்து
மேற்கே மட்டுவாவியலை இசையார்க்க
நேரான வடக்கு வாசலமை கோவிலுறை
பேரான விளாவட்டவான் வீரமாகாளி
காவடிக் கானாமிர்தம் பாடநாவில்......
தேத்தாவடிப் பிள்ளையாரர் தித்திக்க வந்து....
காத்திட நாளுமவர் பாதம் காப்பே......

2. அட்சரத்தினுள் ஓம் எனும் பிரணவாகி
அன்புடனே விளாவவட்டானமர்ந்த ஆதி
சக்தியுன் தன்மை தரணியிலே விளங்க
வித்தகியே நீயவதாரம் எடுத்தாயே
பத்தினியே உன்தனிட பாதம் பணிந்தோம்
பவவினைப் பாவங்கள் பற்றாது காப்பாய்..
உத்தமியேஉயர்ந்து வளரால நிழலமர்ந்த....
செந்திருவே வீரமாகாளியெ எங்கள் தாயே....

3. ஆரணியில் அசுரர்கள் அதர்மமது செய்ய
பூமாதேவி அன்னைமனம் நொந்து வருந்த
மாறினாய் மாகாளி உருவமது கொண்டு
மக்களை வருத்து மசூரர்களைக் கொன்று
ஆதியே அழித்தொளித் தகமது இரங்கி
சோதியே வடிவாகி சொர்ணமே நீயும்....
பேரான விளாவட்டவானூர் வந்தமர்ந்த...
தேவியே வீரமாகாளி எங்கள் தாயே.........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. இத்தரையி லுன்னுடைய யாலயச் சிறப்பு
சுற்றியோடு மட்டுவாவி சூழ்ந்து வாழ்த்த
பேச்சியன்னை மாரியன்னை யாலயங்களும்
என்றுமே இவ்வூரில் இருந்து காக்க
அன்பான மூத்தமகன் தேத்தாவடி விநாயகர்
வந்துமே வாயுமூலையில் அமர்ந்தருள...
ஆதிதீராத நோய் பிணிகள் தீர்க்க வென்றுவந்து..
ஊரான விளாவட்டவான் வீரமாகாளித்தாயே.....

5. ஈண்டுரைப்பின் புரட்டாதிப் பூரணை தன்னில்
ஈஸ்வரியே உன் சன்னிதி வந்து தீப்பாய்ந்து
வேண்டியே உன்னுடைய பாதம் பணிவோர்க்கு
வினைகள் அனைத்தும் தீர்த்தருளம்மா
காண்டாவன மெரித்த கண்ணன் சகோதரி
காமாட்சி மீனாட்சி விசாலாட்சி நீயம்மா...
நீண்ட மிலேனிய வாண்டு விளாவூரமர்ந்த...
நீலியே வீரமாகாளி யெங்கள் தாயே....

6. உன்தனக்கு சர்க்கரை பால்பழம் தேன்
செவ்விளநீர் கரும்பு நெய் தயிரும்
வெள்ளி, பூரணைதோறு மபிசேகம் செய்ய
அன்படியார்கள் பூப்போட்டுப் பணிய
முத்துப்பவள வாச மாலைகள் சூடி
முக்கண்ணன் தேவி எழுந்தருளும் காட்சி....
கற்பூர ஒளி தனிலே தெரியும் மாட்சி.....
அற்புதமம்மா வீரமாகாளியெங்கதாயே....

7. ஊழ்வினைகள் வந்துறுத்து வேளைதோறும்
பாதிமதிசூடு பரமன் பாதிய தான
ஆழிமழைக்கண்ணன் அன்புத்தங்கையே நீ
ஓடிவந்தென்று முற்ற துணையாயிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழியம் செய்கின்ற உன்தொண்டருக்கு
நாழிதவறாது நன்மைகள் செய்ய...
நாடி விளாவட்ட நல்லூர் தனையே...
தேடி வந்த மார்ந்த வீரமா காளியெங்கதாயே...

8. எண்ணற்ற மக்களுன் பிரசாத தட்டெடுத்து
எட்டுத்திக்கும் சென்று மடிப்பிச்சையேற்று
சக்தியே உன்னுடைய சன்னிதியில் அளித்து
தண்ணளி தரு மரங்களின் நிழல் களிலமர்ந்து
பக்தியுடன் அன்னதானமும் அருந்தியாறி
பக்குவமாய் உன்பாத மலர் பணிய..
சித்திகொடுத்து பக்தியதை பெருக்கும் நீயே...
சுத்த விளாவட்டூர் வீரமாகாளியெங்கள் தாயே....

9. ஏந்திழையே ஏகபரி பூரணித் தாயே
ஏந்து சூலப் பரமனிடப்பாக மதமர்ந்த
பத்தினியே சக்தி ஒளியாகவந்தாயே
பரிகலங்களோடு கூடியாடி வந்தாயே
சுற்றிவரும் துன்பதுயர் அகற்றிடுவாயே...
துட்டப் பசாசுகளை துரத்திடுவாயே....
விளாவட்ட நகர் நாடி வந்தென்றும்.....
அமர்ந்தருள் வீரமாகாளி யெங்கள் தாயே....

10. ஐயையே தண்டை தவில் மணி முரசொலிக்க
ஐயமற உன்னுடைய சன்னிதி தன்னில்
ஐங்கரன் நாக தம்பிரான் நரசிங்கர் வைரவரும்
அன்புடனே அமர்ந்து பூசைய தேற்க
மங்கையர்கள் அரோகரா குரவையதார்க்க
மகிழ்வுடனே உடுக்கொலிக்க காவியம் பாட...
திங்கள் வடிவாக நீ எழுந்தருளி யிருப்பாய்...
தித்திக்கும் விளாவூர் வீரமா காளித்தாயே.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. ஒருமை மகளே உன்னுடைய வாசல்முன்னே
ஒளிவீசும் தீக்குழியது பூக்குழியாக
வந்தவினை கோதாரி தீர்த்துவிடு வென்று
வாயல கிட்டு காவடிகள் ஆடிவந்து
சிந்தையுடன் பெண்கள் கற்பூரச் சட்டியேந்தி
சிறப்பாக எடுத்துமே வீதி வலம் வர....
அறம்காக்கும் விளாவட்ட ஆல மர....
அருகமர்ந்தருள் வீரமாகாளியெங்கதாயே....

12. ஓதரிய ஓங்காரி மாகாளி திரிசூலி
வேதாந்த மெய்பொருளான நீலி
ஏகபரனாரிடம் இடப்பாகமமர்ந்த
ஏந்திழையே பாந்தமுறு பார்வதித்தாயே
பாடிடு காவிய கும்மி செவிக்கினிக்கும் வேளை
பார்ப்போரை பரவசத்தோடிழுக்குமாட்சி...
'தோதான பேரூர் விளாவட்டவானுறை...
வீரமாகாளி அருளாட்சி யெங்க தாயே....

13. கருணையுடன் புன்னகை பூத்த புதுப்பூவாக
காத்திட எழுந்தருள்வாய் கைச்சூலமோடு
பூத்துமே ஒளி வீசுகின்ற பூக்கிழி தன்னில்
புனிதமுடன் தூயநீராடி யருகில் வந்து
தீர்த்துவிடு எங்களுடைய வினையையென்று
தீதனிலே இறங்கி மன்றாடி நின்று...
மிதித்திடு பக்தர்க்கு மிக மனமிரங்கிடு....
மதிநிறை விளாவூர் வீரமாகாளி யெங்கதாயே....

14. காரணி நாரணி காளியுன்கண்முன்னே
பூத்து குலுங்கு தலவிருட்சப் பூக்கள்
தேனுண்டு வண்டின மார்த்திடு மோசை
தேவியுன் தனையே தாலாட்டு பரிபாசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டு ஆலய விருட்சங்கள் சதிராட
பார்திடு பக்தர் மதியில் பக்தியதோட....
வேர்த்து விருவிருத்து மாகாளியுன் தன் நாமம்...
ஓதிடுவார் வீரமா காளியெங்கள் தாயே.....

15. கிண்கினி தண்டைய லம்ப சிங்காசனம் தன்னில்
கிளி மொழியே கற்திரு வாசி விக்கிரகமாயிரு
அழகான உன்தனற்கு அபிசேகம் செய்து
அன்னையே உன்னுடைய பாதம் பணிந்து
அன்புடன் பூசைகள் அழகுற இயற்ற
பளபளக்க பக்குவமாய் சாத்துப்படி சாற்ற..
வாடைவீச வடிவழகு காட்டிடுவாய்....
நேசவிளாவட்ட வீரமாகாளியெங்கதாயே.....

16. கீதமொடு நாதக் கலைகள் சிறக்க வேண்டும்
தேச மெங்கும் மரபுக் கலைகள் செழிக்க வேண்டும்
ஆள்பவர்கள் அநீதி அழிந்தொளிய வேண்டும்
அருவர்கள் மகிழ மனுநீதி தழைக்க வேண்டும்
செந்நெல் அன்னமொடு பால்பழம் மலிய வேண்டும்
செய்தருமம் என்னாளும் சிறப்புறவே வேண்டும்...
உன்னை யல்லால் வேறு உற்ற துணை யேது...
உத்தமியே விளாவூர் வீரமாகாளியெம்தாயே.....

*(24.09.2022)*

அருவர்கள் - தமிழர்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெளியீடு செய்த நூல்கள்

1. 2001 - கல்லடி உப்போடை பேச்சியம்பாள் பாடல்கள்.
2. 2002 - மட்டக்களப்பு புதுக்குடியிருப்புக் கற்பரசி கண்ணகை அம்பாள் பாடல்கள்.
3. 2006 - புன்னைச்சோலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் பாடல்கள்.
4. 2010 - கல்லடி உப்போடை நொச்சிமுனை ஸ்ரீ சித்தி விநாயகர், ஸ்ரீ பேச்சியம்பாள் பாடல்கள்.
5. 2010 - "ஓங்காரானந்த சரிதம்" ( வரலாறு )
6. 2012 - "பேச்சியம்பாள் அவதாரமும் ஆலயமும்" ( வரலாறு )
7. 2013 - "கிரமத்து உள்ளங்கள்" ( நாட்டாரிலக்கியம் )
8. 2016 - "இறையின்பப் பாவாரங்கள்" ( பக்தியிலக்கியம் )
9. 2020 - "தமிழ் கூத்தியல்" ( தென்மோடிக் கூத்து )
10. 2021 - "வில்லடிப் பாட்டு" (பாரம்பரிய கலை )
11. 2022 - "பத்தாலய பாவாரங்கள்" ( பக்தியிலக்கியம் )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நூலாசிரியரைப்பற்றி.....

இறைவனோடு இன்பம் கொண்டதினால் இறையின்ப பாவாரத்தை உவந்தளித்தவர் இயலோடு விருப்பு கொண்டதினால் இலக்கணத்தையும் ஆர்வத்தோடு கற்று ஆக்கங்களில் கையாள்பவர்.
இரவு கழிந்து சூரியன் உதிக்கும் முன்னே இறைவழிபாட்டில் ஈடுபடுபவர்.
இராகத்தோடு பாட்டை இறுவெட்டில் வெளியிட்டவர் இன்னிசை கேட்கும் மட்டக்களப்பிலே உள்ள பெரும்பான்மை இறைதலங்களின் வரலாற்றை பொக்கிஷமாய் தந்துள்ளவர்.
இன்புற்று கலையோடு இணைய வில்லடி தமிழ் கூத்தியல் நூல்களை தேசத்திற்காய் படைத்திருப்பவர் இயலிசை நாடகத்தின் ஈடுபாட்டால் கூத்து கலைஞர் விருது முதல் பெற பல்கலை வித்தகர் வரை உயரிய விருதுகள் பலவற்றை பெற்றிருப்பவர்.
இருளை அகற்றி ஒளியை புகட்டும் சேவையோடு இணைந்து அகிலம் எல்லாம் வலம் வருபவர்.
பத்தாலய பாவாரங்கள் என்ற புதிய நூல் வரவோடு இன்னமும் சிறக்கிறார்.
வரலாற்றை ஆவணமாக்குகின்றார்.

சமூகமாமணி, ஊடகவித்தகர்

**வயிரமுத்து துஷாந்தன்**

ISBN : 978-624-5421-01-5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துர்க்கா அச்சகம், கொக்குவில், மட்டக்களப்பு. 0652053060.